# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை:9 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 26 சனிக்கிழமை (08-04-2000) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்:45


## ஏ.எஸ்.பி. உட்பட 11 பொலீஸாரும் நான்கு சிவிலியன்களும் உயிரிழப்பு!

### அறந்தலாவையில் நேற்று புலிகள் கைவரிசை

கொழும்பு,ஏப்ரல்8

பொலநறுவை மாவட்டத்தில் ...துறுஓயாவுக்கு அருகில் எல்லைக் கிராமமான அறந்தலாவையில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர், மூன்று சப் இன்ஸ்பெக்டர்கள் உட்பட பதினைந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை அறந்தலாவையில் வயல் வேலையில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் மீது புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் நான்கு விவசாயிகள் கொல்லப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் மீதான தடையை நீடிப்பதா?

## தமிழக அரசின் பரிந்துரைக்கு காத்திருக்கிறது மத்திய அரசு

புதுடில்லி,ஏப்ரல்8

தமிழக அரசின் பரிந்துரையின் பின்பே விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிப்பது குறித்து முடிவு எடுக்கப்படும் என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்பை தொடர்ந்து தடை செய்யும் உத்தேசம் உண்டா என அவரிடம் செய்தியாளர்கள் கேட்டபோதே அவர் இப்படிப் பதில் அளித்தார்.

இரு வருடங்களுக்கு ஒரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய வியூகம் வகுத்து புலிகள் மீது தாக்குதல்

## பளை நிலைமை குறித்து ரத்வத்தை நேற்று அமைச்சர்களுக்கு விளக்கம்

கொழும்பு,ஏப்ரல்8

**வடமராட்சி கிழக்கு மற்றும் பளைப் பகுதியில் படையினர் தற்போது புதிய வியூகங்களை அமைத்துப் புலிகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதனால் அங்கு தற்போது படை நடவடிக்கையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.**

**- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை.**

வடக்கு யுத்தநிலைமை குறித்து அமைச்சர்களுக்கு விளக்குவதற்காக நேற்றுக் கொழும்பில் நடந்த கூட்டம் ஒன்றில் தகவல் வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தற்போது வகுக்கப்பட்டுள்ள புதிய வியூகங்கள் மூலம் அங்கு மோதல்களுக்கு விரைவில் ஓய்வு கிட்டும் என்றும் அவர் சொன்னார்.

ஆனால் வகுக்கப்பட்டுள்ள வியூகங்கள் குறித்து அவர் அமைச்சர்களுக்கு விளக்கம் அளித்தாரா என்பதை அறிய முடியவில்லை.

இதற்கிடையில் -

(10 ஆம் பக்கம் பார்க்க)

### 2 டோறாக்கள் அழிப்பு?

யாழ்ப்பாணம்,ஏப்ரல்8

நேற்று மாலை 7.00 மணியளவில் நாகர்கோயிலில் தமது கட்டுப்பாட்டில் உள்ள கடற்பிரதேசத்துக்குள் நுழைந்த கடற்படையின் இரு டோறாப் பீரங்கிப்படகுகள் மீது தாங்கள் நடத்திய பீரங்கித் தாக்குதலில் அவை இரண்டும் முற்றாகத் தீப்பிடித்து எரிந்தன என்றும் பல கடற்படையினர் கொல்லப்பட்டனர் என்றும் புலிகள் நேற்று மாலை அறிவித்தனர். (உ-4)

### 1236 பயணிகள் திருமலை புறப்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்ரல்8

காங்கேசன்துறையில் இருந்து ஆயிரத்து 236 பயணிகளுடன் 'லங்கா முடித்த' கப்பல் நேற்றுத் திருகோணமலைக்குப் புறப்பட்டது.

பயணிகளை அங்கு இறக்கிய பின்னர் அங்கிருந்து ஒரு தொகுதி பயணிகளை ஏற்றிக்கொண்டு இந்தக் கப்பல் நாளை காங்கேசன்துறைக்கு வந்து சேரவிருக்கின்றது.

அன்றே இடம்பெறவிருக்கும் இக்கப்பலின் 2ஆவது சேவையில் திருமலைக்குப் பயணம் செய்வதற்கு இங்கு நேற்றே எண்ணூறு பயணிகள் தமக்குரிய டிக்கெட்டுக்களைக் கொள்வனவு செய்துள்ளனர் என யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது. (உ-3)

### 3 இந்திய மீனவர் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம்,ஏப்ரல்8

சில தினங்களுக்கு முன்னர் வடக்குக் கடலில் கைது செய்யப்பட்ட மூன்று இந்திய மீனவர்களை வல்வெட்டித்துறைப் பொலீஸார் நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

தமிழ்நாடு சீர்காழியைச் சேர்ந்த இரத்தினவேல் சேகர், சிவாநந்தன் ரவி, இரத்தினவேல் ராஜா ஆகியோரே அந்த மூவரும் ஆவர்.

மூவரையும் இம்மாதம் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பணித்தார்.

இந்த மீனவர்கள் குறித்து இந்தியத் தூதரகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-4)

பச்சிலைப்பள்ளியிலிருந்து

## இடம்பெயர விரும்புவோர் விவரம் சேகரிக்க முடிவு

### இராணுவத் தளபதி கோருகிறார்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்8

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் இருந்து பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர விரும்புவர்களின் விவரங்களைச் சேகரித்து தருமாறு வடபிரதேச இராணுவத் தளபதி மேஜர்ஜெனரல் சூல செனவிரத்ன யாழ்.அரச அதிபரைச் கோரியுள்ளார்.

இந்த விவரங்களைச் சேகரிப்பதற்காக பச்சிலைப்பள்ளி பிரதேச

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலை மாணவர் பகிஷ்கரிப்பில் குதித்தனர்!

### வளாகத்தில் வாகனங்களையும் பூட்டிவைத்தனர்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்8

மிருசுவில் பகுதியில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவிப் பொருள்களை வழங்குவதற்கு யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் வாகனங்களை வழங்க மறுத்ததைத் தொடர்ந்து பல்கலைக்கழகத்தில் உள்ள சகல வாகனங்களையும் மாணவர்கள் நேற்றுப் பூட்டி வைத்தனர்.

துணைவேந்தரின் கார் உட்பட பல்கலைக்கழகத்தில் உள்ள உத்தியோகபூர்வ வாகனங்கள் அனைத்தும் வாகனத் தரிப்பிடத்தில் நேற்று பூட்டி வைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை -

யுத்தம் நடைபெறும் பளை மற்றும் அயல் பிரதேசங்களில் சிக்கியுள்ள பொதுமக்கள் அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற அனுமதிக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி பல்கலைக்கழக மாணவர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

செய்தியாளர்கள் மீது தாக்குதல்

## மட்டுநகரில் நேற்று ஆட்சேபப் பேரணி

மட்டக்களப்பு,ஏப்ரல்8

மட்டக்களப்பு செய்தியாளர் ஐ. நடேசனின் இல்லத்தின் மீது கடந்த ஞாயிறன்று நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலை கண்டித்தும்-

பி.பி.ஸியின் சிங்கள சேவையான 'சந்தேசிய'வின் கொழும்புச் செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்தும் -

மட்டக்களப்பு நகரில் நேற்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பானது எனத் தாம் கருதும் இடங்களுக்கு மக்கள் செல்லலாம்

### பச்சிலைப்பள்ளி நிலைமை குறித்து யாழ்.தளபதி

பச்சிலைப்பள்ளி பிரதேச மக்கள் விரும்பினால் அவர்கள் பாதுகாப்பான இடம் எனக்கருதும் பகுதிகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர் என்று வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சூல செனவிரத்ன தெரிவித்தார்.

யாழ்.மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகளை நேற்றுப் பலாலியில் சந்தித்த சமயமே அவர் இப்படிக் கூறினார்.

மனிதநேய அமைப்புக்களின் சார்பில் வணபிதா பேர்னாட், டி.ஆர். அருமைநாயகம், சு.பரமநாதன், பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதி யோ.இன்பராஜ், வி.கே.சிவசுப்பிரமணியம் ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்குபற்றினர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் யுத்தம் நடக்கும் பகுதிகளில் இருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர அனுமதிக்கவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்தப் பகுதிகளில் மக்கள் விடுவிக்கப்படாதிருப்பது குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்த தளபதி இது தொடர்பாக அந்தப்பிரதேசங்களிலுள்ள இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட பின்னர் முடிவை இன்று அறிவிப்பதாகப் பதில் அளித்தார்.

பளையில் சிக்குண்ட மக்களை விடுவிப்பதில் தாமதம் காட்டப்படுமானால் மனிதநேய அமைப்புக்களின் போராட்டம் தொடரும் என்று மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகளினால் இராணுவக் கட்டளை அதிகாரிக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரியில்

## நவீன கண் சத்திரசிகிச்சைக் கூடம் நிறுவ லண்டனிலிருந்து ரூ.5 3/4 லட்சம்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்8

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நவீன கண் சத்திர சிகிச்சைக் கூடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு லண்டனில் இருந்து நிதி உதவி கிடைத்துள்ளது.

லண்டனில் உள்ள சிவயோகம் அறக்கட்டளை, நவீன கண் சத்திர சிகிச்சை நிலையத்தை நிறுவுவதற்கு 5 லட்சத்து 77ஆயிரத்து 500 ரூபாவை வைத்தியசாலையின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

சங்கத்தானை சாவகச்சேரி இத்தியடி

**வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவ விழா விஞ்ஞாபனம்**

| | | |
|---|---|---|
| 09-04-2000 | - | கொடியேற்றம் |
| 15-04-2000 | - | வேட்டைத்திருவிழா |
| 16-04-2000 | - | சப்பறத்திருவிழா |
| 17-04-2000 | - | இரதோற்சவத் திருவிழா |
| 18-04-2000 | - | தீர்த்தோற்சவத் திருவிழா |
| 19-04-2000 | - | பூங்காவனம் |

ஆலய பிரதமகுரு:

சிவாச்சாரியகுருமணி சிவப்பிரம்மஸ்ரீ

பரமேஸ்வரக் குருக்கள்.

(75199) ஆலய பரிபாலனசபை.



# இலங்கை வங்கி
## அறிவித்தல்

எதிர்வரும் புத்தாண்டை முன்னிட்டு எமது வாடிக்கையாளரின் வசதி கருதி யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சகல இலங்கை வங்கிக் கிளைகளும் இன்று 08-04-2000 சனிக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணிவரை பின்வரும் நடவடிக்கைகளுக்காகத் திறந்திருக்கும்.

(i) பணம் வைப்பிலிடுதல்
(ii) பணம் மீளப் பெறுதல்
(iii) காசோலைகள் வைப்பிலிடுதல்
(iv) வெளிநாட்டுக் காசோலைகள், உண்டியல்கள் மாற்றுதல்

எமது யாழ்ப்பாண உயர்தரக் கிளை மட்டும் 09-04-2000 ஞாயிற்றுக்கிழமையும் 12.04.2000 புதன்கிழமையும் வெளிநாட்டுக் காசோலைகள், உண்டியல்கள் மாற்றுவதற்காக காலை 9.00மணி முதல் 11.30 மணி வரை திறந்திருக்கும்.

புத்தாண்டின் பாரம்பரிய கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் யாழ்.மாவட்ட இலங்கை வங்கியின் சகல கிளைகளிலும் 14.04.2000 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் 11.00 மணி வரை நடைபெறும்.

பிரதேச முகாமையாளர்
யாழ். மாவட்டம்

பிரதம முகாமையாளர்,
யாழ்ப்பாணம்.

(C/11735)


## புத்தாயிரம் ஆண்டின் இன்று துயர் நீங்காத 1000 நாள் நினைவு அலைகள்



தாய் மடியில்
20-11-1946

அம்மன் திருப்பாதத்தில்
-14-07-1997

அமரர்

**சிவலிங்கம் இராசகுமாரியம்மா**

(இளைப்பாறிய நெசவு போதனா ஆசிரியை)

அம்மா இன்று ஆயிரம் நாள் அம்மா!
அம்மா உன் திருமுகம் கண்டு
ஆயிரம் நாள் அம்மா!
அம்மா உன் அன்பு மொழி கேட்டு
ஆயிரம் நாள் அம்மா!
அம்மா உன் திருக்கரத்தால் அமுதுண்டு
ஆயிரம் நாள் அம்மா!
அம்மா உன் திருவாயால் ஆறுதல் கேட்டு
ஆயிரம் நாள் அம்மா!
ஆயிரம், ஆயிரம், ஆயிரம் துயர் நீங்காத
நினைவு அலைகள் அம்மா!!

இன்று ஆயிரம் மலர் தூவி
உன் ஆத்மசாந்தி வேண்டி நிற்கும்

ஜனனோதையம்,
செல்வராசா அவெனியூ,
அம்மன் வீதி,
திருநெல்வேலி.

கணவர்,
பிள்ளைகள்

(75198)

## கலந்துரையாடல்

சுதேச மருத்துவ அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலும் வைத்திய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளர் சு.பவானி இதில் கலந்து கொண்டு சுதேச மருத்துவ அபிவிருத்தி சம்பந்தமாகக் கருத்துரை வழங்குவார்.


**லிபேட்டி**

அச்சுவேலி

சரத்குமார், விஜயகாந்த்

நடிப்பில்

*கப்டன் பிரபாகரன்*

காட்சிகள்:- 10.30, 2.30
T.P - 070 - 212223
- 070 - 212678
Fax No.0094 - 70212223

(C/11704)



**ராஜா**

யாழ்ப்பாணம்

5ஆவது வெற்றி வாரமாக...

ரஜனிகாந்த், சௌந்தர்யா, ரம்யாகிருஷ்ணன், சிவாஜி மற்றும் பலர் நடித்த

**படையப்பா**

காட்சிகள்
10.30,2.00,5.00

(C/11604)



**நாகம்ஸ்**

சுன்னாகம்

சிவா, மோகினி, நாசர்

நடிப்பில்

**சுராமான ரோஜாவே**

(ரீலிஸ்)

காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)

(75070)


# 13ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மொட்டெனத்
தாய்மடியில்
17
-
09
-
1969



பொட்டெனத்
தமிழ் மண்ணில்
08
-
04
-
1987

மீசாலை மேற்கைச் சேர்ந்த

## சற்குணநாதன் நந்தகோபன்

நீ திரும்பி வாராயோ நந்தகோபா!
நாவரண்டு நலிவடைந்து கதறுகின்றோம் நாம்
அன்பாலே ஒன்றானோம் அருகில் நின்றோம்
ஆரப்பா உனைப் பிரித்தார் எம்மைவிட்டு
கண்மணியே கற்கண்டே கன்னித் தமிழின்
பண் நீயோ பாரிலெமைத் தவிக்கவிட்டு
விண் மேவிச் சென்றாயோ விதியின் கதியோ?
கண்ணீரால் உன்பாதம் கழுவுகின்றோம்.

உன்பிரிவால் துயருறும்:

அம்மா, அப்பா,

அக்கா :- விஜயரஞ்சினி - இரத்தினகுமார்
நவரஞ்சினி - சோதீஸ்வரன்
நந்தினி - ஸ்ரீகாந்தன்
தம்பி :- வேணுகோபன்
மைதிலி (மருமகள்)
தங்கை :- ஸ்ரீரஞ்சினி - ஜெயசன்
மருமக்கள்:- தசாந்தி, லிசாந்தி, மேனன், கார்த்திகா, மானசி, மாசிலன், நிதுசன், சாருசன்
மகள் :- விசாலி வேணுகோபன்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

தகவல்:
சி.சற்குணநாதன் (லயன்)
(இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

பிருந்தாவனம்,
மீசாலை.

(C/11710)


*SALE! SALE!! SALE!!!*

புத்தாண்டை முன்னிட்டு!

*மாபெரும் மலிவு விற்பனை*

*நாளுக்கு நாள் மேவும் நவநாகரிக உலகின் காலத்தால் முன்னிற்கும்*

**ராகம்ஸ் பட்டுச்சோலையின்**

**மாபெரும் மலிவு விற்பனை**

ஆள் பாதி, ஆடைபாதி - அந்த ஆடைபாதி

ராகம்ஸின் ஆடையுலக முழுமை

* முகவரி,
* ரிதம்
* வல்லரசு
* கண்ணுபடப்போகுதையா
* ஹேராம்
* வானத்தைப்போல
* முதல்வன்
* மின்சாரக்கண்ணா

இன்னும் எத்தனையோ

அத்தனை சாறிவகைகளுக்கும்

* சுரிதார், * ரைற்றானிக் மற்றும் நவீனரக கவுண், பஞ்சாபி வகைகள்
* சேட்டிங், சூட்டிங், சிறுபிள்ளைகளுக்கான ஆடைவகைகள்

அனைத்துமே மலிவு விலையில் பெற்றிட

**ராகம்ஸ் பட்டுச் சோலை**

24, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

**கோலம் சில்க்ஸ்**

166, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

* *முகூர்த்தப் பட்டுப் புடவைகளின் முன்னணி நிறுவனங்கள்* (11736)

# நஷ்டஈடு கோரிக் கடிதம்

கொழும்பு,ஏப்ரல்8

1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி இரணைதீவுக் கடற்பகுதியில் காணாமற்போன 'லயன் ஏயர்' விமானத்தில் பயணம் செய்த ஒருவர் தொடர்பாக 20 கோடி ரூபா நஷ்டஈடு கோரப்பட்டுள்ளது. அந்த விமானத்தில் பயணம் செய்து காணாமற்போன யாழ்ப்பாணம் மருதடி லேனைச் சேர்ந்த என்.கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கே இந்த நஷ்டஈடு 'லயன் ஏயர்' நிறுவனத்திடம் கோரப்பட்டுள்ளது.

சட்டத்தரணியான வி.எஸ்.கணேசலிங்கத்தினால் அனுப்பட்டுள்ள நஷ்டஈடு தொடர்பான கடிதத்துக்கு 14 நாள்களுக்குள் பதிலளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

அதற்குள் நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்படும் என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

## பூப்புப்புனித நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்!

**நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் பங்குனி மாதம் 27ஆம் நாள் (09-04-2000) ஞாயிற்றுக்கிழமை காலை 8.17 - 10.07 மணிவரையுள்ள சுபமுகூர்த்தவேளையில்,**

**எமது சிரேஷ்ட புதல்வி திருவளர் செல்வி**

**ஜனனிகா**

**அவர்களுக்கு இறைவன் திருவருள் கொண்டு பூப்புப்புனித நீராட்டுவிழா செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.**

*இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்*

*தற்போதய முகவரி:*
**174/4,** நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
*நிரந்தர முகவரி:*
நாவற்குழி கிழக்கு, தச்சன்தோப்பு, கைதடி.

திரு.திருமதி வரதராஜன்
(வரதன்)

(75183)

உ

## விவாஹ சோபன அழைப்பு

**அன்புடையீர்!**

சுவஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் பங்குனித் திங்கள் 27ம் நாள் (09-04-2000) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8 மணி 17 நிமிடம் முதல் 10 மணி 07 நிமிடம் வரையுள்ள இடப லக்கினமும், மிருகசீரிட நட்சத்திரமும், பஞ்சமிதிதியும், சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்

எமது புத்திரன்
சிரஞ்சீவி
**க.கேதீஸ்வரசர்மா**
**(கண்ணன்)**
**அவர்களுக்கு**

எமது சிரேஷ்ட புத்திரி
சௌபாக்கியவதி
**தர்சினி**
**(தர்சி)**
**அவர்களை**

கன்னிகாதான, மாங்கல்யதாரண, பாணிக்கிரகணம் செய்ய காசிவிசாலாஷி சமேத விஸ்வநாதர் துணையுடன் நிச்சயிக்கப்பட்ட மங்கள வைபவம் புத்தூர் மணமகள் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் குடும்பசமேதராக இஸ்டமித்திரபந்துகள் சகிதம் வருகை தந்து வைபவத்தைச் சிறப்பித்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

சமாவர்த்தனம் :- **காலை 6.00 மணிக்கு (மணமகன் இல்லத்தில்)**
வரவேற்பு உபசாரம :- **மாலை 3.30 மணிக்கு (மணமகன் இல்லத்தில்)**
:- **12.04.2000 மாலை 3.30 மணிக்கு (மணமகள் இல்லம்)**

– சுபம் –

**இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்**

சிவஸ்ரீ.சா.கனகசபாவதிக்குருக்களும்
பாரியாரும்
**வீரபத்திரர் கோயில்**
**உடுப்பிட்டி.**

சிவஸ்ரீ.சா.சோமசுந்தரக்குருக்களும்
பாரியாரும்
**சிவன் கோயில்**
**புத்தூர்.**

(C/10681)


NIPPON NIPPON NIPPON NIPPON NIPPON NIPPON NIPPON NIPPON

*குளிர்மையின் மறுபெயர்!*

NIPPON

இலங்கையில் அதிகூடிய தெரிவு 30ற்கும் மேற்பட்ட மாதிரிகள்

மின்விசிறிகள்

- TABLE FANS
- CEILING FANS
- STAND FANS
- BOX FANS
- EXHAUST FANS
- WALL FANS
- ORBIT FANS
- AIR COOLING FANS, ETC.ETC.

LANKA NIPPON
"தரத்தின் சின்னம்"

No.18,Keyzer Street, Colombo - 11
T.P:- 437735, Fax:- 437736
No.10, Trelawny Place (Behind Milk Bar)
Bambalapitiya Junc. Colombo - 04 Tel: 589992.


# உயிரிழந்த புலிகளின் விவரங்கள் அறிவிப்பு

வவுனியா,ஏப்ரல்8

தொடரும் 'ஓயாத அலைகள்-3' நடவடிக்கையின்போது உயிரிழந்த மேலும் 5 பேரின் பெயர் விவரங்களை 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்துள்ளது.

அதன் விவரம் வருமாறு;-

* சமர்நங்கை (பரமகுரு யசோதா - கிளிநொச்சி)
* கண்ணாளன் (செபமாலை சுரேஸ்குமார் - யாழ்ப்பாணம்)
* ஈழக்குமரன் (குணரட்ணம் பரணிதரன் - யாழ்ப்பாணம்)
* தர்மசீலன் அல்லது சீராளன் (சின்னத்துரை சாந்தன் - முல்லைத்தீவு)
* நேயச்சுடர் (அரியம் செந்தூரன் - யாழ்ப்பாணம்)

இதேவேளை -

27-11-99ஆம் ஆண்டில் தமிழீழக் கடற்பரப்பில் ஏற்பட்ட படகு வெடிவிபத்தின் போது உயிரிழந்த 11 பேரின் விவரங்களையும் புலிகள் தற்போது வெளியிட்டுள்ளனர்.

* கப்டன் தமிழிசை (தெய்வேந்திரன் தேவசுகிதா - யாழ்ப்பாணம்)
* கப்டன் மணியரசி (தர்மலிங்கம் சசித்தா - யாழ்ப்பாணம்)
* மேஜர் சித்திரா (தாயுமானவர் தனலஷ்சுமி - யாழ்ப்பாணம்)
* 2 ஆம் லெப்டினன்ட் அலையிசை (கதிர்காமநாதன் கோகிலா - யாழ்ப்பாணம்)
* மேஜர் காண்டீபன் (மூர்த்தி குமார - கிளிநொச்சி)
* லெப்டினன்ட் அகிலன் அல்லது பூங்குழுவன் (ரஞ்சன் கமல்ராஜ் - யாழ்ப்பாணம்)
* 2ஆம் லெப்டினன்ட் ஈழநேசன் (நடராசா கோகிலகுமார் - யாழ்ப்பாணம்)
* 2ஆம் லெப்டினன்ட் பரதன் (சின்னவன் இளங்கோ - யாழ்ப்பாணம்)
* 2ஆம் லெப்டினன்ட் அன்பரசன் (செல்வராசா உதயகுமார் - யாழ்ப்பாணம்)
* மேஜர் கண்ணன் (சிற்றம்பலம் குலசிங்கம் - யாழ்ப்பாணம்)
* மேஜர் கலையமுதன் (சக்திவேல் ராஜ்குமார் - யாழ்ப்பாணம்)

(க-9)

# நூல்நிலைய புனரமைப்பு வேலை ஸ்தம்பிதம்

அரியாலை,ஏப்ரல்8

யாழ்நகரில் உள்ள மத்திய நூல் நிலையத்தின் கட்டட புனரமைப்பு வேலைகள் கடந்த இரு தினங்களாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

கட்டட புனரமைப்பு வேலையில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களுக்கு கடந்த இருபது நாள்களாக கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனை ஆட்சேபித்து புதன்கிழமை தொடக்கம் இவர்கள் வேலைக்கு சமுகம் கொடுக்காததினால் புனரமைப்பு வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

(இ-17)

# கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்படவில்லை

யாழ்ப்பாணம்,ஏப்ரல்8

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் பணி நேற்றுமுன்தினம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

துறைமுகத் தொழிலாளியான செந்தில்நாதன் என்பவர் மரணமானதை அடுத்து அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் துறைமுகத் தொழிலாளர்கள் அனைவரும் துறைமுகவேலைக்குச் செல்லாததை அடுத்து பொருள் இறக்கும் வேலைகள் நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

(ஐ-15)

# மெய்வல்லுநர் போட்டி

மூளாய்,ஏப்ரல்8

இளவாலை புனிதவளனார் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை இளவாலை ஆண்கள் றோமன் கத்தோலிக்க பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மனித முன்னேற்றத் நடுநிலைய இயக்குநர் அருட்.திரு. ஜெயக்குமார் அடிகள் பிரதமவிருந்தினராகவும் கிராம உத்தியோகத்தர் வி.தில்லைநடராசா, சங்கானைப் பிரதேச செயலக உத்தியோகத்தர் கு.சிவலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

(ஐ-93)


*Do You Want?....*

**Fevicryl**
Acrylic Colours
Conventional Shades
Flouresent Shades
Pearl & Metallic Shades
Pop- Up & Gliter Colours

**Acron.**
Artist Material
Poster Colours
Water Colour
Oil Colour
Gliter Glue

Condect By:
*SHANTHIYA MULTI COURTYARD*
531, POINTPEDRO ROAD, NALLUR.

(75188)



**விக்னா கல்வி நிறுவனம்**

**A/L 2002**

**கலை, வர்த்தக வகுப்புக்கள்**
ஆரம்பம் 09-04-2000 (8.00 A.M)

(75176)


## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினாம்பாள் துரைராசா

தொண்டைமானாறைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம்பாள் துரைராசா 5.4.2000 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் இளைப்பாறிய நீதிமன்ற சக்கடத்தார், கதிரிப்பிள்ளை துரைராசா அவர்களின் அன்பு மனைவியும், துரைரட்ணவதி, சுகிர்தவதி, லலிதவதி, மானவதி, ரூபவதி, சண்முகபாலன், சண்முகவரதன், கிருபாவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், இரவீந்திரன், வீரசாமி, குணசிங்கம், தங்கவடிவேல், சிவலிங்கம், ஈஸ்வரி, சுசீலா, மகேந்திரன் ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (8.4.2000) சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

131/7 அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
கே.வி.சாமி
(மருமகன்)

(75189)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

சுவிஸில் நிரந்தர வதிவிட அந்தஸ்துப் பெற்ற 34 வயதும் 12 இல் செவ்வாயுமுடைய மணமகனுக்கும், ஜேர்மனியில் நிரந்தர வதிவிட உரிமை பெற்ற நிரந்தர தொழில் புரியும் செவ்வாய்க் குற்றமற்ற மணமகனுக்கும் பெற்றோர் தகுதி கொண்ட மணப்பெண்களை எதிர் பார்க்கின்றனர். ஸ்பொன்சர் மூலம் மணப்பெண்கள் உடன் அழைத்தும் செல்லப்படுவதுடன் திருமண நிகழ்வு யாழ்ப்பாணத்திலும் நடைபெறும். இதரவிவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல.1034 மே/பா உதயன் (75085)

## ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்கள்

G.C.E. (O/L) ஆங்கிலத்தில் சித்தியடையாதவர்களுக்கும் சித்தியடைந்தவர்களுக்கும் அரச, தனியார் துறைகளில் தொழில் செய்பவர்களுக்கும் மேலதிக அறிவைப் பெறுவதற்கும், G.C.E. (A/L) ஆங்கிலப் பரீட்சைக்கு பயிற்றுவிக்கவும் இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். விளம்பர இல. 1030. மே/பா உதயன். (74630)

## புறொயிலர்

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். இல. 31 மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கன்னா வீடியோ சென்ரர் வளவு) (75119)

## விற்பனைக்கு

புதிய பாலை, முதிரை நிலைகள், யன்னல்கள், காஸ் சிலிண்டர் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: பூங்கனிச்சோலை, இராமலிங்கம் வீதி, முடமாவடி யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 2976 (75129)

## நாய்க்குட்டி விற்பனை

அல்ஷேசன் இன நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. இல. 59, சிவன் புது வீதி, நல்லூர். (75114)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி Broiler மற்றும் கல்பேட்ஸ், சேவல், விராத்துக்குஞ்சு என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு இல. 68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (75078)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. புதுவருடத்தை முன்னிட்டு மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் கிடைக்கும். தொடர்பு:- லக்கி, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (75118)

இறைச்சிக்கோழி (Broilers) விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து 1Kg 300/-படி வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (75135)

## இறைச்சிக்கோழி விற்பனை

Broilers, Cullbirds இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். நியாயமான விலை, நுட்பமான நிறுவை, சுறுசுறுப்பான சேவை. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச்சந்தையடி, நல்லூர். (75082)

## வீடு விற்பனைக்கு

இல.24, விதானையார் வீதி, சுண்டுக்குளியில் 21/2 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு.சாள்ஸ் மத்தியூஸ், இல. 57, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (75123)

## வியாழமாற்றம் உங்களுக்கு எப்படி?

V.A.சிவராசா வெளியீட்ட 2-6-2000 இல் நிகழும் விண்ணில் வியாழமாற்றம் மண்ணில் உங்கள் "யோகபலன்கள்" மற்றும் 2000 புது வருஷ பலாபலன்கள் என்று கேட்டு வாங்குங்கள். எங்கும் விற்பனையாகின்றன. 152B, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (74734)

## 6 ஆம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 11 - 01 - 1963

உதிர்வு 13 - 10 - 1999

அமரர்

**கந்தையா சிவகுமார்**

**(சிவா)**

மாதம் ஆறு சென்றதையா - நீங்கள்
எமையெல்லாம் ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டு - மீளாத்துயில்
கொண்டதேனோ?
எமைவிட்டுச் சென்றாலும் இறையடியில்
சாந்தி பெற இறைவனையே வேண்டுகிறோம்.

13-10-1999 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கு சிவகுமார் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் சகல வழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (08-04-2000) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுவதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**பெற்றோர், மனைவி, மகள், சகோதரர்கள்.**

இல. 3/5, பிரப்பங்குளம் லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (75115)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

*நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் பங்குனித்திங்கள் 27ஆம் நாள் (09~04~2000) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.52 மணி முதல் 12.18 மணிவரையுள்ள ரோகினி நட்சத்திரமும் மிதுனலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த சுப வேளையில்,*

எமது புத்திரன்
திருவளர்செல்வன்
**விஜயகுமார்**
(குமார்)
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருவளர்செல்வி
**சிவாஜினி**
(சிவா)
அவர்களுக்கும்

*விநாயகப் பெருமான் திருவருள் துணைகொண்டு நல்லூர் திவ்யஜீவன மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்*

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி பத்மநாதன்
குடும்பத்தினர்
16, தாளையடி லேன்
திருநெல்வேலி.

திரு. திருமதி குணரத்தினம்
குடும்பத்தினர்
135, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(சரஸ்வதி விலாஸ்)

**(இருவீட்டார் அழைப்பு)**

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். (75112)

ஓம் வீராட் விஸ்வப் பிரம்மனே நம

## பூப்புப்புனித நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்!

**நிகழும் பிரமாதி வருடம் பங்குனித் திங்கள் 27ஆம் நாள் (09~04~2000) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிமுதல் 10.48 மணி வரையுள்ள சித்தயோகமும் ரோகினி நட்சத்திரமும் கூடும் சுபவேளையில்,**

எமது கனிஷ்ட புத்திரி
**செல்வி பபித்தா**

**அவர்களுக்கு பூப்புப்புனித நீராட்டுவிழா நடத்த இறையருள் கொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.**

தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி செ. ஸ்ரீசந்தனராஜா தம்பதிகள்
No. 7, இராஜேஸ்வரி இல்லம்
அம்பிகாவத்தை வீதி,
சங்கானை.

முக்கிய குறிப்பு:- பத்திரிகை அறிவித்தலைத் தவிர்ந்த தனிப்பட்ட அழைப்பு இல்லை.
(75102)



**இணுவில்/கொக்குவில்/மானிப்பாய் வட்டம்**
**லயன்ஸ் கழகங்கள்**
மூன்றும் ஒருங்கிணைந்து நடத்தும்

We Serve

விழிவெண்படலத்தால் பாதிப்புற்றோருக்கான
**இலவச கண் பரிசோதனை முகாம்**

காலம்:- நாளை (09-04-2000) ஞாயிறு காலை 7.30 மணி(பு.நேரம்)
இடம்:- தாவடி இந்து கலவன் பாடசாலை, தாவடி
(சுதுமலை மானிப்பாய் றோட், தாவடி, கொக்குவில்)

கண் பரிசோதனை மேற்கொள்பவர்:-
யாழ் போதனா வைத்தியசாலை - கண் சத்திரசிகிச்சை நிபுணர்
**வைத்தியகலாநிதி S.குகதாசன் அவர்கள்**

முகாமிற்கு வருகை தரும் ஒழுங்கின்படியே பரிசோதனை மேற்கொள்ளப்படுவதுடன் நலிவுற்ற முதியோருக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

குறிப்பு:- கண் சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டியவர்கள் 18/20/22/25-04-2000 திகதிகளில் யாழ்.போதனா வைத்திசாலையில் அனுமதி பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் நலிவுற்றோருக்கு மட்டும் தேவை ஏற்படின் கண்ணாடிவில்லை இலவசமாக பெற்றுக்கொடுக்கப்படும்.
*மேலதிக விவரங்களுக்கு பின்வரும் பிரமுகர்களுடன் தொடர்பு கொள்க:-*

லயன் K.தேவராஜா
தலைவர்
இணுவில் கழகம்

லயன் P.கமலநாதன்
தலைவர்
கொக்குவில் கழகம்

லயன் Dr. உரோமகேஸ்வரன்
தலைவர்
மானிப்பாய் வட்ட கழகம்

*சேவை இணைப்பாளர்:-* லயன் S.S.தங்கராஜா (C/11684)

## கடை உடைத்து திருட்டு

மருதனார்மடம் - மானிப்பாய் வீதியில் உடுவில் மகளிர் கல்லூரிக்கு அண்மையில் உள்ள கடை ஒன்றில் செவ்வாய்க்கிழமை இரவு பின்கதவு உடைக்கப்பட்டு சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

## நாய்களுக்குத் தடுப்பூசி

சுன்னாகத்தில் அமைந்துள்ள கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் இன்று சனிக்கிழமை வளர்ப்பு நாய்களுக்கான விசர்நாய் தடுப்பு மருந்துஊசிஏற்றப்படவுள்ளது. காலை 9.00 மணி முதல் பகல் 11.00 மணி வரை நாய் வளர்ப்போர் தமது வீட்டு வளர்ப்பு நாய்களை தவறாது கொண்டு வந்து தடுப்பு மருந்தைப் போட்டுக்கொள்ளுமாறு கால்நடை வைத்தியர் அறிவித்துள்ளார்.


### செப்பினால் வார்க்கப்பட்ட புதிய வளந்துக்குடம் (பானை)

### தேவை

செப்பினால் புதிதாக வார்க்கப்பட்ட அல்லது வார்த்துத்தரக் கூடிய மூன்று (3) வளந்துக் குடங்கள் (பொங்கல் பானைகள்) நான்கு கொத்து அரிசி அவியக்கூடிய ஒரே அளவினதாக பிள்ளையார், வைரவர், முருகன் உருவங்கள் ஒவ்வொரு குடத்திலும் தனித்தனியே பொறிக்கப்பட்டு இருக்க வேண்டும்.

இரண்டு வாரங்களுக்குள் அதாவது 15 நாள்களுக்குள் தரக் கூடியவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**சின்னையா பாலசுந்தரலிங்கம்**

(இளைப்பாறிய தபாலதிபர்)

மாயக்கை-தம்பசிட்டி, பருத்தித்துறை.

(C/11649)



### அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின்

வைரவிழாவை முன்னிட்டு நடத்தும்

### மாபெரும் போட்டிகள்

(1) துவிச்சக்கர வண்டி ஓட்டப்போட்டி

(2) மரதன் ஓட்டப் போட்டி

(அ) பெரியோர்

(ஆ) 15 வயதிற்கு உட்பட்டோர்

*காலம்:-* 12-04-2000 (புதன்கிழமை) காலை 6.00 மணிக்கு

*இடம்:-* நிலைய முன்றல்.

(75159)

அராலி மத்தி. **நிர்வாகம்.**




பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக்கழக
வளர்ச்சி நிதிக்காக

சாணுகா ஜுவல்லர்ஸ்
சந்தியா மல்ரி கோட்யாட்

ஆதரவில்

ஊன்றுகோல்

இன்று (08.04.2K)
சனிக்கிழமை பி.ப 2.30
(இ.நேரம்)
பண்டத்தரிப்பு
மகளிர் கல்லூரியில்
நாடகங்கள்

அக்கினிப்பெருமூச்சு

விளம்பர அனுசரணை:

அழகுசாதன, அன்பளிப்பு பொருள்கள், பாதணிகளுக்கு
நிலாஒளி அழகுமாடம்
பிரதான வீதி, சங்கானை
(75130)


## நினைத்துப் பார்க்கிறோம்



திருமதி
### பரமசாமி மருதாம்பாள்

அம்மாவின் அகவை அறுபதும் ஆனதோ!
இம்மாநில மெங்கும் தேடினோம் இனியவளே
சும்மாநீ யழைக்கும் தீங்குரலும் கேட்கவில்லை
பெம்மானின் பெய்கழலைப் பேறாகப் பெற்றீரோ! -
உங்கள்,
இனிய முகம் காணாமல் ஏங்குகிறோம் - நீங்கள்
இறையடியில் பெறுக சாந்தி!

அன்புக்கினிய
சோ. பரமசாமி (கணவர்)
தமயந்தி,சிவானந்தி (பிள்ளைகள்)

"மருதாமனை"
இணுவில் தெற்கு,
இணுவில்.

(75147)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
30
-
06
-
1923



உதிர்வு
09
-
03
-
2000

அமரர்
### சின்னத்தம்பி சின்னத்துரை
(இரும்புத் தொழிலக உரிமையாளர், வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.)

நாம் முளைவிட்டுத் தளிர் விடும் வேளையில்
எமைத் தவிக்க விட்டுச் சென்ற அப்பாவே!
நேற்றுவரை பக்கத்திலிருந்த உங்களை
இன்றோடு இதயத்தில் இருத்திவிட்டு
இருளில் தத்தளிக்கின்றோம். உங்கள் நினைவுகள்
எங்கள் மனங்களில் என்றும் நிழலாடும்.

இன்று (08.04.2000) சனிக்கிழமை அந்தியேட்டிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். அத்துடன் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பூஜையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உறவினர்களையும் நண்பர்களையும் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
சி. தனராஜா
குடும்பத்தினர்.

48/3, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(75170)

## அடம்பனை நோக்கி முன்னேற படையினர் முயற்சி

வவுனியா,ஏப்ரல்8

மன்னார் மாவட்டத்தில் மாந்தை, உயிலங்குளம் ஊடாக கடந்த புதன்கிழமை காலை 6.00 மணியளவில் அடம்பன் பகுதியை நோக்கி இருமுனைகளில் முன்னேற முயன்ற படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை இடம்பெற்றதாகப் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

(இ-3-4-6)

## மறியல் போராட்டத்தில் சுலோகங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்8

யாழ்.செயலகம்முன்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் வைத்திருந்த அட்டைகளிலுள்ள சுலோகங்கள் பின்வருமாறு:-

* செஞ்சிலுவைச் சங்கமே சதையும் இரத்தமுமான எம் மக்கள் முன் உன் மௌனம் ஏன்?
* பொதுமக்கள் மனித கேடயங்கள் அல்லர்.
* சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மதியுங்கள்.
* இலங்கை அரசே இதுதான் உனது யுத்த தர்மம் என்றால் நீ நடத்துவது சமாதானத்துக்கான போரா?
* எமது மக்கள் உனது கவச வாகனமா?
* ஜெனீவா உடன்படிக்கை மதிக்கப்படுவதற்கே!
* மக்களை மதித்துநட மிதிக்காதே!
* புகலிடம் தேடும் மக்களை புதைக்காதே!
* மாசார் பகுதி மக்களின் கதி என்ன?
* பொது மக்களை போகவிடு.
* யுத்த நெருக்கடி அதிகரிக்க பாலியல் வல்லுறவு, சித்திர வதை அதிகரிக்கும்.
* யு.என்.எச்.சி.ஆரே! இங்கு என்ன விடுமுறையா எடுக்கிறாய்?
* ஐ.சி.ஆர்.சியே! பெயருக்கு ஏற்ற படி இயங்கு!
* மக்களை ஆஸ்பத்திரிக்கு போக விடு!
* மனித சுதந்திரம் எங்கே?
* குழந்தைகள், நோயாளர்களின் குரலுக்கு செவிமடு!

(இ-5-10-180)

## ஐ.தே.க. பங்குபற்றவில்லை

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் ஐ.தே.க. பங்குபற்றவில்லை.

நேற்று முன்தினம்மாலை நடந்த வாக்கெடுப்பில் 90 வாக்குகளால் பிரேரணை நிறைவேறியது.

(இ-3-4)


SALE! SALE!! SALE!!!

அதிசயம் ஆனால் உண்மை!
ஒரு லெந்த் சூட்டிங் விலை 150/- மட்டுமே!
மேலும் புடைவைத் தினுசுகள் அனைத்துக்கும்
விசேட சலுகை உண்டு. கையிருப்பு குறைந்தளவே!
CITY TEX & TAILORS
75, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(C/11706)



இயந்திர இயக்குநர் தேவை

நெல்லியடியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தேங்காய் எண்ணெய் ஆலைக்கு அனுபவமுள்ள தொழிலாளர் தேவை.
நேரிலோ, தொலைபேசியிலோ
தொடர்பு கொள்ளலாம்.

அருண் கொமியுனிக்கேசன்
நெல்லியடி, கரவெட்டி.
தொலைபேசி எண்: 070-212457 (C/11707)


## 16 ஆம் நாள் நீங்காத நினைவில்....

பிறப்பு
23
-
08
-
1920



இறப்பு
23
-
03
-
2000

### அமரர் முத்து மயில்வாகனம்
### மாணிக்கமுத்து மயில்வாகனம்

அன்பையும் பண்பையும் ஊட்டி
எமக்கெல்லாம் ஆதரவாய் இருந்து
பண்புடன் எம்மை வாழ வைத்து
பாதியில் சென்றதும் ஏனோ?

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நீதிவான் வளவு,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(75186)

## இறுதிக்கிரியை நன்றி நவிலல்



அமரர்
### சொக்கலிங்கம் தருமலிங்கம்
(ஓய்வுபெற்ற நீர்ப்பாசன பகுதி உத்தியோகத்தர்
மாநகர சபை, - யாழ்ப்பாணம்)

அன்னார் காலஞ்சென்ற சொக்கலிங்கம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தில்லையம்பலம், பொன்னம்மாவின் மூத்தமகள் கமலாதேவியின் அன்புக் கணவரும், ஜெகதா (அமெரிக்கா), முகுந்தா, சுதாகரன், கமலகாஸ் ஆகியோரின் அருமைத் தந்தையும், பாலசங்கரின் மாமனாரும், கனகலிங்கம், பாக்கியலெட்சுமி, காலஞ்சென்ற அன்னலிங்கம், சுந்தரலிங்கம், (லண்டன்) ரஞ்சிதராணி, சண்முகலிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரரும், வசந்தகுமார், கண்ணம்மா, ராஜ்குமார்(ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், சிவபாலன், புனிதவேணி, சாரதா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னார் 203/8, சரஸ்வதி ஒழுங்கை, கண்டிவீதி, அரியாலை, யாழ்ப்பாணத்திலுள்ள இல்லத்தில் 04-04-2000 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணி 25 நிமிடமளவில் இறைபதம் எய்தினார். இவரது இறுதிக் கிரியைகள் 05-04-2000 புதன்கிழமை மு.ப 10.30 மணிக்கு இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்நிகழ்வின்போது நேரிலும் தொலைபேசி, தந்தி, தபால் மூலமும் அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும் இரங்கலுரை அஞ்சலி நிகழ்வில் பங்கேற்றோருக்கும் எமது துயரில் பங்கு கொண்டு பல்வேறு வகையிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

(75185)

குடும்பத்தினர்.

வடமராட்சியில்:

STUDY CIRCLE

ஆலங்கட்டை வீதி, கொற்றாவத்தை, பொலிகண்டி.

2000 O|L Day Class புதிய பிரிவு

ஆரம்பம்: 12-04-2000 புதன்கிழமை காலை 8.00 மணி

Maths Personal Class by PARA

- ★ 2000 O/L கணிதம்
- ★ Gr. 9 & 10 கணிதம்
- ★ 2002 A/L இணைந்த கணிதம்
- ★ 2002 A/L English

(சி/11751)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 04 | 09 |
| — | — |
| 07 | 03 |
| — | — |
| 1922 | 2000 |

## திருமதி கந்தையா தங்கம்மா

இன்று (8-4-2000) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சந்தா தோட்டம்,
புலோலிகிழக்கு.

(75208)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி விஜயரட்ணம் தங்கம்மா

தெல்லிப்பழை யானைக்குட்டி வளவைப்பிறப்பிடமாகக் கொண்ட திருமதி விஜயரட்ணம் தங்கம்மா நேற்று (7-4-2000) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
வி. கமலநாதன்
(மகன்)

யானைக்குட்டி. வளவு,
தெல்லிப்பழை.

(சி/11753)

## திருமதி நடராசா தங்கரத்தினம்

சண்டிலிப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா தங்கரத்தினம் 7-4-2000 பிற்பகல் 4.30 மணியளவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் அமரர் சண்முகம் நடராசாவின் அன்பு மனைவியும் அமரர் சின்னத்தம்பி, வேலாயுதம், அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை ஆகியோரின் சகோதரியும், கந்தசாமி (லண்டன்), லலிதாதேவி (கனடா), திசைநாதன் (இ. போ. ச, கோண்டாவில்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரஞ்சிதமலர், தேவதாஸ், ஜெயமாலா ஆகியோரின் மாமியாரும் துசான், விபூஜன், சர்மிலன், துஷா, தனுஷன், இந்துஜா, சாரங்கன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (8-4-2000) சனிக்கிழமை 1 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அளவெட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. திசைநாதன்
(மகன்)

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.

(75209)

# தென்மராட்சியில் நிவாரண விநியோகம்

பச்சிலைப்பள்ளிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் உள்ள உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ள குடும்பங்களுக்கான ஒருவார சகல உலர்உணவுப் பொருள்கள் அந்தந்தப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் கடந்த புதன்கிழமை முதல் வழங்கப்பட்டு வருவதாகப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள நலனோம்பு நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கான ஒரு வாரகால உலர் உணவுப் பொருள்கள் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டதாகவும் தெரிவித்தார். (ஐ-117)

# கண் பரிசோதனை முகாம்

இணுவில், கொக்குவில். மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்தும் இலவச கண் பரிசோதனை முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7. 30 மணிக்கு தாவடி இந்து கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

கண் பரிசோதனை வைத்திய கலாநிதி எஸ் குகதாசனால் மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன் கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டியவர்கள் எதிர்வரும் 18 ஆம், 20 ஆம், 22 ஆம் 25 ஆம் திகதிகளில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதி பெறுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேவை ஏற்படும் பட்சத்தில் நலிவுற்றோருக்கு மட்டும் கண்ணாடி வில்லைகள் இலவசமாகப் பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் நடத்தும் கே. ஸி. ஸி. ஸி. வெற்றிக் கிண்ணத்துக்கான 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் காலை 8 30 மணிக்கு யங்ஸ்டார் வி. க. அணியுடன் யூனியன் வி. க. அணியும், பிற்பகல் 1 00 மணிக்கு ஜொனியன்ஸ் வி. க. அணியுடன் பற்றீஷியன் வி. க. அணியும் மோதுகின்றன. (உ.8)

★ ★ ★

யாழ்ப்பாணம் ஏப்ரல் 8

யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிமுதல் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்களில் சென். அன்ரனீஸ் வி. க. 'பி' அணியுடன் சென். நீக்களஸ் வி. க. 'பி' அணியும், பல்கலைக்கழக அணியுடன் சென். அன்ரனீஸ் வி. க. 'ஏ' அணியும் மோதுகின்றன. (உ-8)

★ ★ ★

மாகாணக் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் பிரதேச செயலர் மட்டத்தில் நடத்தப்படும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆட்டங்கள் இன்றும் நாளையும் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நடைபெறவிருக்கின்றன. (ஐ-3-8-86)

# கூட்டுறவு ஆணையாளரின் பணிமனை திறந்து வைப்பு

அரியாலை, ஏப்ரல் 8

யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் பணிமனைக் கட்டடத்திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற விழாவில் ஓய்வு பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எஸ். வேலாயுதபிள்ளை பணிமனையை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு) திருமதி கோ. திருநாவுக்கரசு வரவேற்புரையை நிகழ்த்தினார்.

சிறப்புரையை யாழ். பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் நிகழ்த்தினார்.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சீ. வி. கே. சிவஞானம், மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ. கனகசபாபதி உட்பட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் மற்றும் கூட்டுறவாளர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இந்த நிகழ்வில் நூற்றுக்கணக்கான கூட்டுறவாளர்கள் மற்றும் சங்கப்பணியாளர்கள் கலந்து சிறப்பித்தனர். (ஐ-17-111)

# சாரணியா கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

யாழ். மாவட்ட பெண் சாரணிய வழிகாட்டுநர்களுக்கான கூட்டம் நாளை ஞாயிறு காலை 9.30 மணிக்கு மத்திய கல்லூரி ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

சாரணியர், வழிகாட்டுநர் ஆகியோர் கொழும்பு செல்வதற்கான தெரிவு குறித்தும் இரண்டாம் தவணைக்கான போட்டிகள் பற்றியும் ஆராய இருப்பதால் சகல வழிகாட்டுநர்களும் தவறாது சமுகமளிக்கும்படி மாவட்ட ஆணையாளர் கேட்டுள்ளார். (உ-4)

உ

சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம்

கருணைமிகு

ஸ்ரீஅம்பலவாணவீரகத்தி விநாயகர்திருக்கோயில்

மஹோற்சவப் பெருவிழா - 2000

9-4-2000 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு - கொடியேற்றம்
13-4-2000 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு - 1008 சங்காபிஷேகம்
16-4-2000 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு - சப்பறத்திருவிழா
17-4-2000 திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு - தேர்த்திருவிழா
17-04-2000 திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு புதிய தேர் தரிப்பிடத்தில் சித்திரத்தேருடன் விநாயகப் பெருமான் ஆரோகணித்து அருள் பாலிப்பார்.
18-4-2000 செவ்வாய்க்கிழமை பகல் 10.30 மணிக்கு - தீர்த்தத்திருவிழா
19-4-2000 புதன்கிழமை மாலை 4 மணிக்கு - பூங்காவனம்
17-04-2000 திங்கட்கிழமை முற்பகல் 11-30 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவு

ஆசியுரை: வேதாகம சோதிட பூஷணம்
சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள்
(திருக்கணித பஞ்சாங்க கணிதர், மட்டுவில்)

சைவப்புலவர் திரு. கமலநாதன் A.A, வரணி

மஹோற்சவக் குரு:
சிவாகம கிரியா கலாநிதி கிரியாபானு
சிவப்பிரம்மஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள்

அனைவரும் வருக! விநாயகர் அருள் பெறுக!!

-- ஆலய பரிபாலன சபை.

விழா சிறப்புற வாழ்த்துவோர்
கிளை ஸ்தாபனம்

சாரங்கா நகைமாடம்

தலைமை ஸ்தாபனம்
அருள் முருகன் நகைமாடம்
96/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை ஸ்தாபனம்
சிவா நகைமாடம்
யாழ். வீதி,
சாவகச்சேரி.

(சி/11752)

# தாய் மொழி மூலமான சிந்தனையே அறிவியல் வளர்ச்சிக்கு உதவும்

## விஞ்ஞானச் சங்க அமர்வில் பேராசிரியர் ஆறுமுகம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

உயர் கல்வி மாணவர்கள் தாய்மொழியில் சிந்திப்பது இலகுவானதாக இருக்கும். அத்துடன் அவர்களின் அறிவியல் வளர்ச்சிக்கும் அது உதவும் என பேராசிரியர் வி. ஆறுமுகம் கூறினார்.

கடந்த புதனன்று யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கத்தின் 8 ஆவது வருடாந்தர அமர்வுகளின் தொடக்க விழா நடைபெற்றது. அவ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இலங்கை அரசின் கன்னங்கரா விருது பெற்றவரான பேராசிரியர் வி. ஆறுமுகம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தமது உரையில் தெரிவித்ததாவது:-

தற்போது உயர்தர வகுப்புகளில் புதிய பாடத் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது இதனால் ஆசிரியர்களுக்கு கற்பித்தலில் பயிற்சி தேவைப்படுகிறது.

ஆகவே ஆசிரியர்களுக்கு பயிற்சிப் பட்டறைகள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் பயிற்சி அளிக்கவும், உயர்தரக் கல்விக்கான வழிகாட்டி நூல்களை — குறிப்பாக தமிழ்மொழி மூலத்தில் — உருவாக்கவும் விஞ்ஞானச் சங்கம் முன்வரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இதுவரை சிரமங்களுக்கு மத்தியிலும் சங்கம் சேவைகளைப் புரிந்து வருவதற்கு பாராட்டுத் தெரிவித்த அவர் விஞ்ஞான சங்கத்தின் வளர்ச்சிக்கு உதவுவது பொது மக்களின் கடமை என்றும் கூறினார்.

விழாவின் தொடக்கத்தில் தலைமை உரையாற்றிய துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை சங்கத்தின் வளர்ச்சிக்கு இளைய தலைமுறையினர் குறிப்பாக விரிவுரையாளர்கள் உதவி புரிவதற்கு பாராட்டுத் தெரிவித்தார். மேலும், மேலைநாடுகள் உட்பட அனைத்து நாடுகளும் பொருளாதார வளர்ச்சிக்கு அறிவியலையே நம்பியிருப்பதாகக் குறிப்பிட்டார்.

புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பேராசிரியர் பாலசுப்பிரமணியம் தமதுஉரையில்:

குடாநாட்டில் உயிரியல் பாடத்தில் மாணவர்களது வளர்ச்சி பாதிப்படைந்துள்ளதாகவும், இதற்கு ஆசிரியர்களும் ஒருவிதத்தில் காரணம் என்றும் கூறினார்.

பொதுத் தேர்வுகளின் போது கேள்வித்தாள் தயாரிப்பில் தமிழ் ஆசிரிய சமூகத்தின் பங்களிப்பு மிக அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார். (ஐ-ரி)


## நன்றி நவிலல்

1 - 3 - 2000 ஆம் அன்று காலமாகிய எமது அன்புத் தந்தையின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு எமக்கு பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் மற்றும் தொலைபேசி மூலமும் கடித மூலமும் நேரடியாகவும் அனுதாபச் செய்திகளைத் தெரிவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:

பொ. அழகரத்தினம்,
பொ. பரமசாமி,
பொ. விஜயரத்தினம்.

புலோப்பளை கிழக்கு,
பளை.

தற்காலிக முகவரி:
61/2, இராமலிங்கம் வீதி,
முடமாவடி,
திருநெல்வேலி.

(75205)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



ஜனனம்: 25 — 04 — 1947

மரணம்: 09 — 03 — 2000

### திருமதி கமலாதேவி சபாநாயகம்

கருணையில் எழிலாம் கமலாதேவி – நின்
அருந்தமிழ் இனியன கனிந்த சொல்லாள்
திருநிறை நாயகத்தை அணைத்து – பின்
திருவிடையான் கழல் சென்றடைந்த நல்லாள்.

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு நேர்முகமாகவும் தொலைத் தொடர்பு வழிகளூடாகவும் துக்கத்தில் பங்குகொண்டவர்களுக்கும் மற்றும் மலர்வளையம் சாத்தியும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டு அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் பல்வேறு வகைகளிலும் உதவிய உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (08-04-2000) நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

த. சபாநாயகம் குடும்பத்தினர்.

சரசாலை.

(சி/11750)


## குளத்தை ஆழமாக்கக் கோரிக்கை

சண்டிலிப்பாய், ஏப்ரல் 8

மாதகல் பாணாவெட்டிக் குளத்தை ஆழமாக்கிப் புனரமைப்புச் செய்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று அண்மையில் நடைபெற்ற மாதகல் விவசாயிகள் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சம்மேளனத்தின் தலைவர் க. வீரவாகு தலைமையில் கடந்த மாதம் 23 ஆம் திகதி நடைபெற்ற இக் கூட்டத்தில் மாதகல் பாணாவெட்டி குளத்திற்கு சமீபமாகவுள்ள வெள்ள வாய்க்கால் கரைகளில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுவதால் இப் பகுதி விவசாயிகளின் நலன் கருதி அவற்றை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற மற்றொரு தீர்மானம் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ஐ - 135)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு இரவு உணவு

வடமராட்சி கிழக்கிலிருந்து, இடம்பெயர்ந்து, வடமராட்சியில் தஞ்சமடைந்திருப்பவர்களுக்கு புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு உணவை அன்பளிப்பாக வழங்கியது.

தும்பளை லூர்து மாதா கோயிலிலும், பருத்தித்துறை அந்தோனியார் கோயிலிலும், கற்கோவளம் செபஸ்தியார் கோயிலிலும் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கே இரவு உணவு வகைகளை புலோலி பலநோக்குக்கூட்டுறவுச்சங்கப் பொதுமுகாமையாளர் செல்வி சிவரத்தினம் மற்றும் கே. ஜெயக்குமார் ஆகியோர் நேரில் சென்று வழங்கியுள்ளனர். (ஐ-109)

## பளைக்கான கடிதங்கள் கொடிகாமத்தில்

தென்மராட்சி, ஏப்ரல் 8

பளைப்பகுதிக்கான தபால்களை கொடிகாமம் தபால் நிலையத்தில் வைத்து வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப் பகுதி ஓய்வூதியர்களின் ஏப்ரல் மாத வவுச்சர்கள் கொடிகாமத்தில் இயங்கும் பளை தபால் நிலையத்தில் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## வெளிமாவட்டம் செல்ல பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

யாழ். குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 6 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

**சங்கானை**

(141018ஏ), (135587ஏ), (135587பி), (135587சி), (135783ஏ), (139587ஏ), (139748ஏ), (139748பி), (139748சி. (139787ஏ), (139788ஏ), (139788பி), (139788சி), (139789ஏ). (139789 பி), (141220 ஏ), (141220 பி), (141310 ஏ), (141311 ஏ), (141311 பி), (141311 சி . (141311 டி), (147312 ஏ). (141326 ஏ), (141340 ஏ), (141340 பி), (141376 ஏ), (141376 பி), (134103 ஏ), (135536 ஏ), (136547 ஏ), (136547 பி), (136629 ஏ), (136630 ஏ), (139504 ஏ), (139504பி), (139876 ஏ), (139902 ஏ), (139902 பி), (139917 ஏ), (139918 ஏ), [139923ஏ], (139923பி), (139923சி), (139923டி),

**நல்லூர்**

[133298ஏ]. (136851ஏ), [136865ஏ], [139469ஏ], [139469பி], [139469சி], [139469டி], [139866ஏ], [139896ஏ)· [139912ஏ), [140894ஏ], [140903ஏ], [140950ஏ], [141011ஏ], [141011பி], [141098ஏ], (141093பி), [141093சி], [135490ஏ], (135793ஏ), [135793பி], [138568ஏ], [138568]பி, [139570ஏ], [139570பி], [139577ஏ], [139577பி], [139792ஏ], [141240ஏ], [141240பி],

**சண்டிலிப்பாய்**

[128909ஏ], [128909பி], (138456ஏ), [138543ஏ], [138548ஏ], (138566ஏ), (139614ஏ (239615ஏ), (139616ஏ), (139716ஏ), (139809ஏ), (141362ஏ), (141373ஏ), (141403ஏ), (141403பி), (141403சி), (141403டி), (141403ஈ), (141403எவ்).

**தெல்லிப்பழை**

(139600ஏ), (139600பி), (139617ஏ), (139617பி).

**உடுவில்**

(136383ஏ), (136570ஏ)) (136570பி), (141010ஏ), (127322ஏ), (135485ஏ), (138495ஏ), (138495பி), (138496ஏ), (138496பி), (139724ஏ). (141194ஏ), (141194பி).

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 7 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு.

**சங்கானை**

(131766 ஏ), (138540 ஏ) (139557 பி), (139594 ஏ), (139729 ஏ). (139709 ஏ), (139709 பி), (139765 ஏ), (139765 பி), (139765 சி), (139805 ஏ), (139805பி), (141268 ஏ), (141268 பி), (141338 ஏ). (141381 ஏ), (141381 பி), (141414 ஏ), (141426 ஏ). (141426 பி), (141426 சி), (141701 ஏ), (142137 ஏ).

**கோப்பாய்**

(134061 ஏ), (134061 பி), (134061 சி), (136380 ஏ). (136577 ஏ), (136577 பி), (136577 சி), (136577 டி), (136682 ஏ). (136665 ஏ), (136665 பி), 3(16679 ஏ), (139901 ஏ). (139901 பி), (139907 ஏ), (139907பி), (139909 ஏ), (139913 ஏ).

**நல்லூர்**

(140897 ஏ), (130572 ஏ). (135702 ஏ), (138083 ஏ), (138083 பி), (138173 ஏ). [138173 பி), [139590 ஏ], [139768 ஏ]. [139800 பி], [139825 ஏ]. [139826ஏ], [139826பி], [141249ஏ], [141249பி], [141274ஏ],

**சண்டிலிப்பாய்**

[128921ஏ], [138180ஏ], [138433ஏ]. [138433பி] [139556ஏ]. [139557ஏ], [139650ஏ], [139736ஏ]. [139804ஏ], [139806ஏ], [141254ஏ], [141354ஏ], [141356ஏ], [141401ஏ], [141401பி], [141428ஏ], [141428பி], [141429ஏ], [141429பி], [141429சி], [142107ஏ],

**தெல்லிப்பழை**

(141267ஏ), (141267பி), (141267சி)

**உடுவில்**

(136342ஏ), (136345ஏ), (136382ஏ), (136394ஏ), (136566ஏ). (139924ஏ), (139924பி), (138390ஏ), (138410ஏ), (138410பி). (138499ஏ), (138499பி), (138551ஏ), (139672ஏ), (139758ஏ), (141296ஏ), (141368ஏ), (141368பி), (141372ஏ), (141372பி), (141372சி), (141712ஏ). (142159ஏ), (142160ஏ), (142162ஏ), (க - ரி)

## நெல் சந்தைப்படுத்தும் சபையை கலைக்கும் பிரேரணை தோல்வி

நெல் சந்தைப்படுத்தும் சபையைக் கலைப்பது தொடர்பாக நாடாளுமன்றில் அரசாங்கம் கடந்த வாரம் சமர்ப்பித்த பிரேரணை மூன்று வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

பிரேரணைக்கு எதிராக 62 உறுப்பினர்களும் ஆதரவாக 59 உறுப்பினர்களும் வாக்களித்தனர். ஈ. பி. டி. பி அமைப்பு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், புளொட் அமைப்பின் இரு உறுப்பினர்கள் ஆகியோர் ஆதரவாக வாக்களித்தனர்.

ரெலோ, மலையக மக்கள் முன்னணி, ஐ. தே. க. ஆகிய கட்சிகள் எதிர்த்து வாக்களித்தன. (ஐ-6)


## முயற்சி

அகதிகள்புனர்வாழ்வு நிறுவனத்திறன் விருத்திமையம்

புதுவருடத்தை முன்னிட்டு......

**ஆடைகள் கண்காட்சியும் விற்பனையும்**

ஏப்ரல் 10 ஆம், 11 ஆம் திகதிகளில்
TRRO, 106, 4 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணத்தில்.

அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர்,
TRRO.

(சி/11754)

We Serve

# இலவச மருத்துவ முகாம்

இடம்: யாழ். புனித மரியாள் பேராலயம்
காலம்: 08-04-2000, சனிக்கிழமை காலை 9.00 மணி
பரிசோதனை: கண், பல், நீரிழிவு, இரத்த அழுத்தம், வாய்ப்புற்று
சிகிச்சை: பல் மற்றும் பொது மருத்துவ சிகிச்சை.
தேவையான மருந்துவகை இலசவமாக வழங்கப்படும்.
பரிசோதிப்போரும், உதவியாளரும்:

வைத்திய கலாநிதி T.குலநாயகம்
வைத்திய கலாநிதி S.இராஜரட்ணம்
மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்கள்
லயன் A.ஜெயக்குமார், P.J.பெர்னான்டோ ஸ்தாபனம்
திரு. S.ஜெயராஜா, தொழில்நுட்பவியலாளர் யாழ். போதனாவைத்தியசாலை.

மேற்படி சேவை தேவையானோர் அனைவரும் கலந்துகொள்ளலாம். நலிவுற்றோருக்கு மட்டும் கண் பரிசோதனையின் பின் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கப்படும்.

பேராசிரியர் லயன். இரா. சிவச்சந்திரன்
தலைவர்,
யாழ். லயன்ஸ் கழகம்.
(C/11742)


# மரண அறிவித்தல்

## திருமதி பாக்கியம் நடராஜா

இணுவில் தெற்கை பிறப்பிடமாகவும் சுதுமலை மத்தியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் நடராஜா 07.04.2000 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மு.நடராஜாவின் அன்பு மனைவியும் ந.விக்கினேஸ்வரமூர்த்தி (ஆசிரியர், இளவாலை கன்னியர் மடம் ம.வி) அவர்களின் அன்புத் தாயாரும் நா.பரராசசேகரம், நா.நடராசா, திருமதி சின்னராசா அன்னலட்சுமி ( இளைப்பாறிய ஆசிரியர், இணுவில் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புச் சகோதரியும் திருமதி கல்யாணி விக்கினேஸ்வரமூர்த்தி (தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி) அவர்களின் மாமியாரும் நா.சின்னராசா (இளைப்பாறிய ஆசிரியர், இணுவில் இந்துக்கல்லூரி) அவர்களின் மைத்துனியும் திருமதி வசந்திரா பரமேஸ்வரநாதன் (கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்), மகேந்திரா பரமேஸ்வரன் (ஆஸ்திரேலியா), கமலநாதன், நந்தன், வசந்தி, ஞானசக்தி (இங்கிலாந்து) ஆகியோரின் மாமியாரும் திருமதி வளர்மதி சுமாதரன், கோமதி (கொழும்பு), ஆஸ்திரேலியாவில் வசிப்பவர்களாகிய கலைமதி தயாபரன், இந்துமதி ஸ்ரீதரன், செந்தில்ராஜா, நாகராஜா, தணிகைராஜா ஆகியோரின் பெரியதாயாரும் வி.பவித்ரா, வி.பிரணவன், ப.வதனா, ப.பசிலா, செ.தமிழரசி, சு.கௌரிசங்கர், ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (8.04.2000) சனிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அன்னாரது இல்லத்திலிருந்து தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
விக்கினேஸ்வரமூர்த்தி (மகன்)
சுதுமலை மத்தி
மானிப்பாய்
(75207)

## அஞ்சலக திறப்புவிழா

வட்டுக்கோட்டை - பொன்னாலை வீதியில் அரைநூற்றாண்டு காலமாக இயங்கிவந்த வட்டுக்கோட்டை அஞ்சலகம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வட்டு-தெல்லிப்பழை வீதியில் உள்ள கட்டடத்துக்கு இடம்மாற்றம் செய்யப்படவுள்ளது.

இடம்மாற்றம் பெறும் அஞ்சலகத்தின் புகுவிழா அன்றையதினம் நடைபெறும். வடமாகாண பதில் அஞ்சல் அதிபர் நாயகம் ஏ.கே. சிவஞான சுந்தரம் அஞ்சலகப் பணிகளை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைப்பார். (ஜ-173)

## வீடியோக் காட்சி

யாழ்ப்பாணம்,ஏப்ரல்8

யாழ் பல்கலைக்கழகப் புற நிலைப்படிப்புக்கள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் 'கண் சிவந்தால் மண் சிவக்கும்' என்ற திரைப் படத்தை வீடியோப்படக் காட்சியாகக் காண்பிக்க உள்ளன.

## கருத்தரங்கு

வடமராட்சிக் கல்விவலயப் பாடசாலை அதிபர்களுக்கு மேற்பார்வை தொடர்பான கருத்தரங்கு இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் நெல்லியடி மத்தியமகா வித்தியாலய மண்டபத்தில் கல்விப் பணிப்பாளர் இ.சிவராசா தலைமையில் நடைபெறும். (க-173)

## நாடகங்கள் மேடையேற்றம்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்8

'அக்கினிப் பெருமூச்சு', 'ஊன்றுகோல்' ஆகிய இரு நாடகங்களும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் மேடையேற்றப்படுகின்றன.

சானுகா ஜுவல்லர்ஸ், சந்தியா மல்ரி கோட்யாட் ஆகியவற்றின் ஆதரவில் இவை மேடையேறுகின்றன. (க)

## போட்டிகள்

வடமராட்சி,ஏப்ரல்8

சதாவதானி நா.கதிரவேற்பிள்ளையின் 94 ஆவது குருபூசையை ஒட்டி வடமராட்சி வலயப்பாடசாலைகளுக்கு இடையே பேச்சு, மனன, திருக்குறள், பண்ணிசைப் போட்டிகள் இன்றும் நாளையும் மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூகநிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (ஜ-173-17)


# மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் சகல கிளைகளும் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புத்தாண்டு பிறக்கவிருக்கும் இவ்வேளையில்

09-04-2000 அன்று ஞாயிற்றுக்கிழமையும்
12-04-2000 அன்று புதன்கிழமையும்

காலை 9.00 மணிமுதல் 11.00 மணிவரை கொடுக்கல்வாங்கல்களுக்காகத் திறந்திருக்கும் என்பதனை பெருமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
யாழ்ப்பாணம்.
(C/11743)


## அவசர பொதுக்கூட்டம்

இன்று (08-04-2000) காலை 10.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக விவசாயபீடத்தில் நடைபெறவுள்ள மேற்படி பொதுக்கூட்டத்திற்கு அனைத்து விவசாயபீட மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

செயலாளர்,
விவசாய மாணவர் ஒன்றியம்.
(75195)


# COMMERCIAL BANK

புதுவருடத்தை முன்னிட்டு 'இசுறு' சிறுவர் சேமிப்புத் திட்டத்தில் வைப்பிலிடுபவர்களுக்கு கவர்ச்சிகரமான பரிசில்கள் வழங்கப்படும்.

இச்சலுகை இம்மாதம் 30ஆம் திகதி வரையுமே.

இத்திட்டத்தில் இன்றே இணைந்து உங்கள் பிள்ளைகளுக்கு பாதுகாப்பான எதிர்காலத்திற்கு வழிசமையுங்கள்.

கொமர்ஷல் வங்கி, யாழ்ப்பாணம்.
(C/11740)


# வடக்கு கிழக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்களம்

கிராம அபிவிருத்தித் திணைக்களம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை, பனை அபிவிருத்திச் சபை, அரச தனியார் வங்கிகள் மற்றும் தனியார் கைத்தொழில் நிறுவனங்களுடன் இணைந்து

வடக்கு - கிழக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்களம் நடத்தும்......

*மாபெரும் புதுவருடக் கைத்தொழில் கண்காட்சியும் மலிவு விற்பனையும்*

**யாழ். மத்திய கல்லூரியில் ஏப்ரல் 9ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.**

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு க.சண்முகநாதன் அவர்களினால் திறந்துவைக்கப்படும் கண்காட்சி பொது மக்களுக்காக காலை 9.00 - மாலை 5.00 மணிவரை திறந்து இருக்கும்.

## அனுமதி இலவசம்

கண்காட்சியில்: பனம்பொருள் உற்பத்திகள், தோற்பொருள்கள், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட சிறிய இயந்திரங்கள், மட்பாண்ட உற்பத்திகள், தைக்கப்பட்ட ஆடைகள், உள்ளூர் குளிர்பான வகைகள், வீட்டு அலங்காரப் பொருள்கள், கேக் ஐசிங், கைத்தறிப் புடைவைகள், ஸ்கிறீன் பிரின்ரிங், பிளாஸ்ரிக் உற்பத்திகள், சிமெந்து ஓடுகள், மரக்கைப்பணிப் பொருள்கள், உலோக உற்பத்திகள் என்பன காட்சிப்படுத்தப்படும்.


இத்துடன் அரச தனியார் வங்கிகள், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், தொழில் முயற்சி ஆலோசனை நிலையம் போன்றன தமது சேவை விளக்க மையங்களூடாகத் தமது சேவைகளை வழங்கவுள்ளன.

**அனைவரும் வருக! கண்டு பயன்பெறுக!**

மாகாண தொழிற்துறை திணைக்களம்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
(C/11741)


# வந்துவிட்டது!

இல்லத்தரசிகளுக்கோர் இனிய செய்தி!
உங்கள் சமையலுக்குப் புத்துயிரூட்டும்
மரக்கறி சமையல் எண்ணெயில் முதல் தரம் என
பிரசித்தி பெற்ற




# விமல் மார்க்

மரக்கறி சமையல் எண்ணெய் இனி உங்கள் வாடிக்கைக கடைகள் எங்கும் கிடைக்கும்.

கொலஸ்ட்ரோல் அற்ற, ஊட்டச்சத்து நிறைந்த, அழகிய வர்ண பொலித்தீன் பைக்கட்டுகளில் இயந்திரத்தினால் பொதி செய்யப்பட்ட விமல் மார்க் மரக்கறி சமையல் எண்ணெய்

யாழ். ஏக விநியோகஸ்தர்கள்

## றூபா பன்முக வர்த்தகம்

104 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P 021.2479
(75206)

# மக்களை ஒருபோதும் மனித கேடயமாக்கோம்

## ஜெனரல் பலகல்ல தெரிவிப்பு

கொழும்பு,ஏப்ரல்8

"பொதுமக்களை மனிதக் கேடயங்களாக நாம் எப்போதும் பயன்படுத்தியது இல்லை. எதிர்காலத்தில் பயன்படுத்தப் போவதும் இல்லை" என்று சிரேஷ்ட இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கடந்த 5ஆம் திகதி இராணுவத் தளபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்துக்குப் பதில் அளித்தே இந்தக் கடிதத்தை அவர் அனுப்பியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இடம்பெயர்ந்த பொதுமக்கள் கிளாலிக்கு அப்பால் செல்ல இராணுவத்தினர் எந்தவித தடையையும் விதித்திருக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் ஊடுருவலைக் குறைப்பதற்காக பளைப் பகுதியில் அடையாள அட்டைகளை சோதிக்கும் முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் எதிர்பார்த்ததை விட காலதாமதம் ஆகிறது.

'ரிவிரச'இராணுவ நடவடிக்கை காரணமாக வெளியேறிய மக்கள் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு திரும்பி வந்துள்ளமை பாதுகாப்புப் படைகள் மீது அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையை எடுத்துக்காட்டுகிறது.

யாழ்ப்பாண மக்கள் பல தகவல்களை வழங்கியதால் பாதுகாப்புப் படைகள் பல வெற்றிகளைச் சந்திக்க நேர்ந்ததுடன் தமது நிலைகளை மேலும் ஸ்திரப்படுத்தக் கூடியதாக இருந்தது. தற்போது ஆயிரத்து 186 குடும்பங்களைச் சேர்ந்த 4ஆயிரத்து 143 இடம்பெயர்ந்த மக்களை அரசாங்கம் பராமரித்து வருகின்றது. முதல் மூன்று நாள்களும் அவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டது. தற்போது அவர்கள் உலர் உணவுப் பொருள்களைப் பெற்று வருகிறார்கள் - என்றுள்ளது.

(ஐ-3-4)

### எண்ணெய்க் காப்பு

யாழ்ப்பாணம்,ஏப்ரல்8

யாழ்.இந்துக்கல்லூரி அருள்மிகு சிவஞான வைரவர் ஆலயத்தில் நாளை காலை 8.57 முதல் 9.57 மணி வரையுள்ள சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 8 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். (உ-3)

### கல்வி டிப்ளோமா பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்.8

தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப்படும் கல்வி டிப்ளோமா இறுதி வருட மாணவர்களுக்கான பரீட்சைகள் திட்டமிட்டபடி இன்றும் நாளையும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதி அட்டைகளும் வினாத் தாள்களும் விமானம் மூலம் நேற்று எடுத்துவரப்பட்டன.

(உ-6)

அதிரடி அரங்கு
நாளைய உதயனில்!

### இலவச பஸ் சேவை

யாழ்ப்பாணம்,ஏப்ரல்.8

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து மிருசுவில் தேவாலயத்துக்கு வந்தோர் அங்கிருந்து அவர்கள் விரும்பும் குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கு செல்ல வசதியாக இலவச பஸ் சேவையை வடபிராந்திய போக்குவரத்துச் சபை நேற்று முதல் வழங்கிவருகிறது. (உ)

### மெய்வன்மைப் போட்டி

கொழும்புத்துறை,ஏப்ரல்.8

வல்வெட்டி விநாயகர் வித்தியால வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை முன்பாக உள்ள மாஞ்சோலை மைதானத்தில் அதிபர். சி.தவச்செல்வன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் க.கமலானந்தனும், சிறப்பு விருந்தினராக இளைப்பாறிய ஆசிரியர் த.முத்துச்சாமியும் பங்குபற்றுவர். (ஐ-30)

※ ஆடவர் ※ மங்கையர் ※ சிறியோர்களுக்கான
ரெடிமேட் ஆடைகளை வேறு எங்கும்
காணமுடியாத அளவில் வெளிநாடுகளில் இருந்து
புதுப்புது டிசைன்களில் மலையெனக்
குவித்துள்ளோம்.

சந்தேகமில்லாமல் தேர்ந்த ரசனையாளருக்கு
உங்கள் ரசனையின் புதிய எல்லையைத் தொட
இது எங்களின் நுழைமுகம்.

சங்கமம் ரெக்ஸ்

(ஜனரஞ்சகமான ஜவுளி மாளிகை)
54A, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம். (சி-11678)

Sale! இதோ! Sale!! முந்துங்கள்

உள்ளம் துள்ளும் புதுவருடப்பரிசு

மகாநதி

வழங்கும்
மாபெரும் அதிரடி சிறப்புத் தள்ளுபடி

இத்தள்ளுபடி 13-04-2000வரை மட்டுமே!

நதிகளின் சங்கமம் கடலில்
சகலவித புடைவைகளின் சங்கமம்
மகாநதியில்

புதிது புதிதாகப் பூத்திருக்கும்
புதுவருட புடைவைகளுக்கு
ஆம்

மகாநதி புடைவை அகம்

முகூர்த்தப்பட்டுப் புடைவைகளுக்கு
கைராசியான நிறுவனம்

16,நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.021-2552

4,நவீன சந்தை
சாவகச்சேரி.
2243

சாறி பிளவுஸ் பீஸ் துணி வகைகளுக்கு
பிரத்தியேகக் காட்சி அறைகள்

16,நவீன சந்தை,
(மேல் மாடி)
யாழ்ப்பாணம்.

IKUF,நவீன சந்தை
(மேல்மாடி)
சாவகச்சேரி.

(C/11679)

# பச்சிலைப்பள்ளி செயலகம் மீசாலை புத்தூர் சந்தியில்

யாழ்ப்பாணம்,ஏப்ரல்8

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகம் மீசாலை - புத்தூர் சந்தியில் உள்ள கமநல சேவைகள் நிலையத்தில் தற்காலிகமாக இயங்க ஆரம்பித்துள்ளது. பொதுமக்கள் தமது பணிகளை அங்கு மேற்கொள்ளலாம் என்று பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் எஸ்.புத்திசிகாமணி கேட்டுள்ளார்.

பிரதேச செயற்பாடுகள் குறித்து அவர் தெரிவித்த விவரங்கள் வருமாறு:-

* ஓய்வூதியம் பெறுபவர்கள் தமது இருப்பிட விலாசம் மற்றும் விவரங்களை இந்த அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும்.

* யாழ். செயலகத்தால் அனுப்பப்பட்ட அடையாள அட்டைகள் அலுவலகத்தில் உள்ளன. சம்பந்தப்பட்டவர்கள் நேரில் சமுகம் தந்து அவற்றைப் பெறலாம். பாடசாலை அதிபர்களும் சமுகம் தந்து அடையாள அட்டையைப் பெறலாம்.

* பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களும் தங்கள் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

(ஐ-3)

### நவீன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயக்குநருக்கு அனுப்பி வைத்துள்ளது.

சிவயோகம் அறக்கட்டளையால் நிர்வகிக்கப்படும் லண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மன் திருக்கோயிலின் அன்பளிப்பாகவே இந்தப் பணம் அனுப்பப்பட்டுள்ளதாக அறக்கட்டளையின் நிறைவேற்றுத் தலைவர் என்.சீவரத்தினம் லண்டனிலிருந்து தெரிவித்துள்ளார்.

இப்போது மேற்படி ஆலயத்தில் சொற்பொழிவு ஆற்றிவரும் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், யாழ். ஆஸ்பத்திரியில் நவீன கண் சத்திரசிகிச்சைக் கூடம் இல்லாத குறையை எடுத்துக்கூறி, இந்த தர்ம கைங்கரியத்தை செய்யுமாறு கோரியதை அடுத்தே தாம் நிதி உதவியைச் செய்வதாகவும் தலைவர் சீவரத்தினம் மேலும் தெரிவித்தார்.

நவீன கண் சத்திரசிகிச்சைக் கூடத்துக்குத் தேவையான உபகரணங்கள் பின்னர் அனுப்பிவைக் கப்படும் என்று ஆஸ்பத்திரி இயக்குநருக்கு எழுதிய கடிதத்தில் அறக்கட்டளையின் தலைவர் தெரிவித்தார்.

(அ-4-9)

### மட்டுநகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

பத்திரிகையாளர்கள், பொது மக்கள் என ஆயிரத்துக்கும் அதிகமானோர் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர்.

தமிழ் ஊடகவியலாளர் சங்கம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் மற்றும் அம்பாறை மாவட்ட கரையோர செய்தியாளர் சங்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கம், மட்டக்களப்பு ஓட்டோ சாரதிகள் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களும் -

ரெலோ, புளொட் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.பி.டி.பிஆகிய தமிழ்க் கட்சிகளின் பிரமுகர்களும் - கலந்து கொண்டனர்.

பேரணியில் இறுதியில் மட்டக்களப்பு நகரில் உள்ள காந்தி சதுக்கத்தில் கண்டனக் கூட்டம் நடத்தப்பட்டதுடன், ஜனாதிபதிக்கு முகவரியிட்ட மகஜர் ஒன்றும் மட்டக்களப்பு அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது. (உ-7-21)

தேவை

எமது தலைமை அலுவலகத்தில் இயங்கிவரும் கணனி உதிரிப்பாக விற்பனைநிலையத்துக்கு பெண் லிகிதர் தேவை.

விண்ணப்பதாரி ஓரளவு கணனி சம்பந்தமான அறிவுடையவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் (14.4.2K) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சுயவிவரங்களுடன் நேரில் வரவும்.

இயக்குநர்
IIS
100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (C/11756)

### பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் நேற்று முதல் காலவரையறையற்ற பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்தனர்.

இந்தப் போராட்டத்தின் தொடர்ச்சியாக அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆகியவற்றின் முன்பாக பல்கலை மாணவர்கள் இன்றும் நாளையும் காலையில் இருமணி நேரம் மறியல் இருக்கவிருக்கின்றனர்.

இந்தப் போராட்டத்துக்குச் சாதகமான பதில் கிடைக்காவிட்டால் பல்கலைக்கழகத்தின் அனைத்துச் செயற்பாடுகளையும் ஸ்தம்பிதம் அடையச் செய்வது என்றும் -

யாழ்.செயலகம் முன்பாக எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மறியல்போராட்டம் நடத்துவது என்றும்-

மாணவர் ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

இதேவேளை யுத்தப்பகுதியில் சிக்குண்டுள்ள பொதுமக்களை அங்கிருந்து வெளியேற அனுமதிக்க வேண்டுமெனக் கோரி யாழ். பல்கலைக்கழக மாணவா ஒன்றியம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நேற்று மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

யுத்தப் பகுதிகளில் பொதுமக்களை மனிதக்கேடயங்களாகப் பயன்படுத்துவது கண்டிக்கத்தக்கது என பல்கலைக்கழக எழுதுவினைஞர், தொழில்நுட்ப அலுவலர் ஒன்றியம் விடுத்த பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக சகல பீடங்களையும் சேர்ந்த மாணவர்களையும் இன்று காலை 8 மணிக்கு பல்கலைக்கழக முன்றலில் ஒன்றுகூடுமாறு மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

இதேசமயம் - யுத்தப் பிரதேசத்தில் சிக்குண்டுள்ள மக்களை அங்கிருந்து வெளியேற அனுமதிக்க வேண்டுமெனக் கோரி கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் நேற்று தமது வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர்.

### இடம்பெயர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலரை கிராம சேவையாளர்களுடன் அங்கு செல்லுமாறு தாம் பணித்துள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

பிரதேசசெயலர் பெரும்பாலும் இன்று அங்கு செல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-3)

### புதிய வியூகம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடாநாட்டில் படை நடவடிக்கைகளை நேரில் சென்று கண்காணிக்கும்படி தெரிவித்து, ஜனாதிபதியால் வடக்கே அனுப்பப்பட்டிருந்த முப்படைத் தளபதிகளும் சுமார் 10 நாள்கள் பலாலியில் தங்கிநின்ற பின்னர் நேற்று கொழும்பு திரும்பினர்.

கடந்த ஐந்தாறு நாள்களாக பளையில் உக்கிரமாக இருந்த யுத்தம் நேற்று தணிந்திருந்தது.(உ-3)

### தமிழக.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடவை நீடிக்கப்படும் புலிகள் அமைப்பு மீதான தடை உத்தரவு அடுத்த மாதம் 17ஆம் திகதி காலாவதியாவது குறிப்பிடத்தக்கது.

(உ-3-9-ரீ)

### ஏ.எஸ்.பி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டனர்.

அதைத் தொடர்ந்து ஜீப்பில் அந்தப் பகுதிக்குவிரைந்த பொலீஸ் குழு மீதே விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி 11 பொலீஸாரைக் கொன்றனர்.

இந்தத் தாக்குதலில் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் திஸ்ஸ ரத்னாயக்கா, மூன்று சப்.இன்ஸ்பெக்டர்கள், ஏழு கான்ஸ்டபிள்கள் ஆகியோர் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலை அடுத்து அந்தப்பகுதியை பொலீஸாரும் படையினரும் சேர்ந்து சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர். (உ-3-4)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08-04-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


CITY TAILORS
நவீன நாகரிக அமைப்புக்களுடன் நாளைய நாகரிக உலகையும் இன்றே வென்றிட இன்று முதல் விஜயம் செய்திடுங்கள்
# சிற்றி ரெயிலர்ஸ்
அமோக தெரிவு! தரமான சேவை! நியாமான விலை!
அன்றும்!
இன்றும்!!
என்றும்!!!
சிற்றி ரெயிலர்ஸ்தாங்க!
73, பெரியகடைவீதி,
யாழ்ப்பாணம்.
T.P - 2671 (C/11222)




## கருத்துக் கலசம்

நாமே நமக்குத்துணையானால்
நாடும் பொருளும் நற்புகழும்
தாமே நம்மைத்தேடிவரும் சற்றும்
இதற்கோர் ஐயம் உண்டோ?

– கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை –

இயற்கையின் இயல்பில் மாற்றங்கள் நியதியாகி விட்டன. அந்த வகையில் காலமாற்றமும் ஒன்றாகும். இயற்கையின் எல்லாத் தன்மைகளிலும், குணாம்சங்களிலும் சுழற்சி முறை இருப்பதை அவதானிக்கலாம். அதேபோன்று பருவகாலங்களிலும் சுழற்சி முறை உண்டு.

அவற்றை மனிதன் தனது மனக் கணக்கில் வைத்து இயற்கையின் பருவகாலங்களை அட்டவணைப் படுத்தினான். ஆறுபருவங்கள் கொண்டது ஓர் ஆண்டு எனறு வகுத்துக் கொண்டான். பூகோளத்தின் சுழற்சி முறைப் பிரகாரம் கண்டத்துக்குக் கண்டம், நாட்டுக்குநாடு பருவகாலங்கள் வெவ்வேறு வேளைகளில் வருகின்றன.

இயற்கையின் ஆறுபருவகாலங்களில் இளவேனிற்காலம் - வசந்த காலம் - இனிமையானது; இதமானது. இளமையில் இனிமை துள்ளுவது மனிதனுக்கு மட்டுமல்ல; இயற்கைக்குந்தான்!

வானத்தையும் பூமியையும் நேருக்குநேர் பார்க்கவிடாமல் இடைப் புகுந்து பச்சவண்ணப்படலம் படர்த்திக் குறும்பு செய்பவை விருட்சங்கள். மரங்கள். மாரியில் வந்த மழையால் மணம் பூரித்து, காலங்கழிந்த முது இலைகளைச் சொரிந்து - மஞ்சள் ஆடை களைந்து - பல வர்ணமலர் ஆடைகளைப் போர்த்தி வண்ணம் சேர்ப்பவை அவை.

தன் 'நேர்முறை மைந்தர்'களான அந்த மரங்களின் மன மலர்ச்சி ஆர்ப்பரித்த பல வர்ண மலர்ப் போர்வையை பூமித்தாய் போர்த்திக் குதூகலிக்கும் காலமே வசந்தகாலம். பூமி அன்னையின் இளமையின் எழில் பொங்கும், வண்ணம் ததும்பும் இளவேனிற்காலம் இன்னும் ஐந்து தினங்களில் இப்பிராந்தியத்தில் வந்துதிக்கிறது.

சித்திரை பிறந்தால் இத்தரையில் இன்பத்துக்கும் இளமைக்கும் பஞ்சமேது? இயற்கை அன்னை பூணும் எழிற்கோலம் மனிதர்களுக்கும் ஏனைய ஜீவராசிகளுக்கும் இதம் தருவதாகும். வசந்தத்தின் நுழைவாசலே சித்திரை.

இயற்கையின் இளமைக்காலத்தை, கோலத்தைக் கண்டு மகிழ்ந்த, அனுபவித்த முந்தையர்கள் சித்திரைப்பிறப்பை புத்தாண்டாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். இயற்கையோடு இசைந்து வாழ்ந்த மனிதப் பாரம்பரியத்தின் எடுத்துக் காட்டுக்களில் இதுவும் ஒன்று.

புத்தாண்டு பிறக்கிறது என்றதும் புதிய உணர்வுகளும், புதிய நம்பிக்கைகளும் தோன்றுவது இயல்பு. வரப்போகும் ஆண்டு முழுவதும் கஷ்டங்கள், துன்பங்கள் இன்றி நன்றே கழியவேண்டும் என்ற பிரார்த்தனையும் இதயத்தில் இயல்பாகவே எழும்.

ஈழத்தமிழர்கள் கடந்தபல ஆண்டுகளாக, புத்தாண்டுகளை மட்டுமன்றி, ஏனைய பல நன்மைகளையும் அத்தகைய நம்பிக்கையுடனேயே வரவேற்றார்கள். ஆனால் வேறுபட்ட, முரணான அனுபவங்களையே சந்திக்க நேர்ந்தது. நாமே நமக்கு துணையாக இருக்க, உழைக்க வேண்டிய காலம் இது என்பதனை மனதில் இருத்தி நல்லவை நடக்கும் என்ற நம்பிக்கை உணர்வுடன், இயற்கைக்கு இளமை ததும்பும் வசந்தத்தை வரவேற்போம் - வளமும் வாழ்வும் கிடைக்கட்டுமென்று!

# தைரியம் நிலைத்திட வரும் விக்கிரம வருடம்

தமிழர்களுக்கு சித்திரை மாதமே வருடத்தின் முதன் மாதமாகும்.

இவ்வுலக மக்களை வாழ்விப்பவர் 'சூரிய பகவானே. வருடத்தில் முதல் மாதமாகிய சித்திரை மாதத்தின் முதலாம் நாள் சூரியன் மேடராசியாகிய கிழக்குத் திசையில் தோன்றுவான். அந்நாள் சங்கிராந்தியை விஷ புண்ணிய காலம் எனவும் இப்புண்ணிய காலத்தையே புத்தாண்டு என்றும் புதுவருடப் பிறப்பு என்றும் கொண்டாடுகிறோம்.

இந்தப் புனித நாளில் புத்தாடைகள் அணிந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபடுகிறோம். புத்தாண்டன்று குடும்பங்களில் மகிழ்ச்சி நிலவும். சுபவேளையில் பெரியோர்கள் மற்றவர்களுக்கு கைவிஷேசம் வழங்குவர். ஒவ்வொருவரும் தத்தமது உறவினர்களின் வீடுகளுக்குச் சென்று உறவாடுவர்.

ஒவ்வொரு ஆண்டும் சிறுவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான காலம் இந்தப் புத்தாண்டுக் காலமேயாகும். அவர்கள் ஒருவரிடம் மாத்திரம் கைவிஷேசம் வாங்குவதில்லை. தங்களுக்கு தெரிந்த பெரியவர்கள் அனைவரிடமிருந்தும் சில சமயங்களில் வற்புறுத்திக்கூட கைவிஷேடங்களை வாங்குவர். ஆண்டில் நிபந்தனைகள் எவையுமின்றி சிறுவர்களுக்கு நிதி கிடைப்பது புத்தாண்டின் போதேயாகும்.

இல்லங்களில் இல்லத்தரசிகள் பல நாள்களுக்கு முன்னரே புதுவருட ஏற்பாடுகளைக் கவனிக்க தொடங்குவர். வீடுவாசல்களை திருத்துதல், வர்ணம் பூசுதல், குடும்பத்தவர்களுக்கு புத்தாடை வாங்குதல், பலகாரங்களை தயாரித்தல் ஆகிய பணிகளில் பெண்கள் ஈடுபடுவர்.

புத்தாண்டிற்கு முந்திய வருடச்செயற்பாடுகள் அத்தனையும் புத்தாண்டு சமயம் நிறுத்தப்பட்டு, அனைத்தும் சுபவேளைகளில் மீண்டும் ஆரம்பிக்கப்படும். கல்விக்கூடங்களில் சுபவேளையில் 'நாள்படிப்பும்' வேலைத்தலங்களில் சுபவேளையில் 'நாள் வேலையும்' நடைபெறும். குடும்பத்தின் பொருளாதார நிலை எவ்வாறாயினும் மக்கள் தத்தமது தகுதிக்கேற்ப - வசதிக்கேற்ப - புத்தாண்டைக் கொண்டாடுவர். புத்தாண்டைச் சிறப்பாகக் கொண்டாடாவிடின் "தரித்திரம்" பீடிக்கும் என்ற அச்சம் பண்டை தொட்டு நிலவுகிறது.

திருமாலின் அழகில் நாரதர் மூழ்கி பெண் வடிவம் கொண்டு திருமாலுடன் இன்பம் அனுபவித்தார் எனவும் -

அதன் காரணமாக வருடம் ஒரு பிள்ளையாக அறுபது பிள்ளைகளைப் பெற்றார் எனவும் -

ஒவ்வொரு வருடமும் பிறந்த பிள்ளைகளின் பெயர்களே "பிரபவ" முதல் "அக்ஷய" வரையான அறுபது வருடங்களின் பெயர்கள் ஆகும் எனவும் -

ஓர் இந்துமதக் கதை கூறுகிறது.

இந்து மதத்திலிருந்து சில புதிய கருத்துக்களைச் சொல்ல எழுந்த கொள்கையே பௌத்த மதமாகும். எமது நாட்டில் சிங்கள மக்களே பௌத்த மதத்தைப் பின்பற்றுகிறார்கள். இந்துக்கள் தங்களது கலாசாரங்கள், பாரம்பரியங்கள் ஆகியனவற்றிற்கு அமைய புத்தாண்டிற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்களோ அதே அளவு முக்கியத்துவத்தை சிங்களவர்களும் தமது கலாசாரம், பாரம்பரியம் ஆகியவற்றிற்கு அமைய அதே புத்தாண்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இந்துக்களைப் போலவே அவர்களும் பெரியோர்களிடம் ஆசிபெற்றுக் கைவிஷேடம் வாங்குகிறார்கள். வழமையான காரியங்கள் அனைத்திற்கும் தற்கால விடுமுறையை வழங்கிவிட்டு பாரம்பரியத்தில் மூழ்கிறார்கள். அவர்களது பஞ்சாங்கத்தின்படி வரும் சுபவேளையில் தலையில் நல்லெண்ணெய் தேய்க்கும் வரை வழமையான காரியங்கள் எவற்றிலும் பௌத்தர்கள் ஈடுபடுவதில்லை. இதைவிட மிக முக்கிய விடயம் என்னவெனில் இந்துக்களின் புதுவருடப் பிறப்பு அன்றே சிங்களவர்களின் வருடமும் பிறக்கிறது.

தமிழ் வருடங்கள் "பிரபவ" வில் ஆரம்பித்து அறுபது வருடங்களைக் கொண்டு "அக்ஷய" வில் முடிவடைகின்றன. ஒவ்வொரு வருடத்திற்கும் வழங்கப்பட்டுள்ள பெயர்களுக்குத் தனித்தனியான அர்த்தங்கள் உள்ளன. இவ்வாண்டு பிறக்கும் புத்தாண்டின் பெயர் "விக்ரம" ஆகும். இதன் அர்த்தம் 'தைரியம் நிலைத்திடும்' என்பதாகும். கடந்த வருடம் "பிரமாதி" வருடம் ஆகும். இதன் அர்த்தம் 'தலைமை தாங்கிடும்' என்பதாகும். இதன்படி "பிரமாதி" வருடத்தில் தலைமை தாங்கி "விக்ரம" வருடத்தில் தைரியம் நிலைத்திடும் எனக் கூறலாம்.

இவையெல்லாம் முன்னோர்கள் கூறியவை. அவர்கள்தான் "சாத்திரம் பொய் என்றால் வானத்தைப் பார்" என்றும் கூறியுள்ளனர்.

தமிழ் மக்களின் துயரங்கள் "விக்ரம" வருடத்தில் நீங்க இப்புத்தாண்டை வருக வருக என வரவேற்போம்!.

## வருஷப் பிறப்புக் கருமம்

### வாக்கிய பஞ்சாங்கப்படி

**பிறக்கும் விக்கிரம வருஷப் பிறப்புக் கருமம் தொடர்பாக வாக்கிய பஞ்சாங்கம் கூறும் தகவல்கள் வருமாறு:-**

சித்திரை மாதம் முதலாம் நாள் வியாழக் கிழமை பிற்பகல் நாடி 22, விநாடி 55 (மணி 3.15) இல் பூர்வபக்ஷ தசமித் திதியில் ஆயிலிய நக்ஷத்திரத்தின் இரண்டாம் பாதத்தில், சூலநாம யோகத்தில், தைதிலக்கரணத்தில், சிங்க லக்கினத்தில், சிங்க நவாம்மிசத்தில், சூரியன் காலவோரையில், சூரியன் சூக்குமவோரையில் சாத்வீக குண வேளையில் நக்ஷத்திர பக்ஷியாகிய ஆந்தை அரசுத் தொழிலும், சூக்கும்பக்ஷி நடைத் தொழிலும் செய்யுங்காலத்தில் இப்புதிய விக்கிரம வருஷம் பிறக்கின்றது. அன்று முற்பகல் நாடி 12, விநாடி 55(மணி 11-15) முதல் அன்று முன்னிரவு நாடி 32 விநாடி55 (மணி7-15)வரை விஷு புண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து, மருத்து நீர் தேய்த்து சிரசில் வேப்பிலையும் காலில் பொன்னை இலையும் வைத்து ஸ்நானஞ் செய்து, வெள்ளைமஞ்சள் நிறமுள்ள பட்டாடையாயினும் இந்நிறக்கரை அமைந்த புதிய வஸ்திரமாவது அணிந்து, முத்து பொன்னாபரணம் அணிந்து, சுகந்த சந்தனம்பூசி, நறுமலர் சூடி, தத்தம் குலதெய்வ வழிபாடுகளைச் செய்து, குரு, பெற்றார் முதலியோரை வணங்கி, அவர்களின் ஆசி பெற்று, சூரியனுக்கு பொங்கல் பூஜைகள் செய்து, இயன்ற தானதருமங்களியற்றி, பந்து மித்திரர்களுடன் அளவளாவி, அறுசுவை உண்டிகளுடன் பாற்சோறு, தேன் சேர்த்தருந்தி, தாம்பூலந்தரித்து, கண்ணாடியில் முகதரிசனம் செய்து, புதிய வருஷ பலன்களை வாசித்தும் கேட்டும் மங்களகரமாக வாழ்க்கடவர்.

### திருக்கணிதப் பஞ்சாங்கப்படி

**திருக்கணிதப் பஞ்சாங்கம் கூறும் பலன்கள் வருமாறு:-**

விக்கிரம வருஷம் சித்திரை மாதம் முதலாம் திகதி (13-04-2000) வியாழக்கிழமை காலை உதயாதி நாழிகை 28-13 (மணி மாலை 5-51) இல் "விக்கிரம" என்னும் பெயருடைய புதுவருடம் பிறக்கின்றது. அன்று நட்சத்திரம் ஆயிலியம்,திதி பூர்வபட்ச தசமி, சித்தாமிர்த யோகம். இது 60வருட சுற்று வட்டத்தில் 14ஆவது வருஷமாகும். அன்று வியாழக்கிழமை பகல் நாழிகை 18-13 (மணி பகல் 1-51) தொடக்கம் இரவு நாழிகை 38-13 (மணி இரவு 9-51)வரையும் மேட சங்கிரமண புண்ணிய காலம் என்று சொல்லப்படும். வருஷம் பிறக்கும்போது உதயலக்கினம் "கன்னி" ஆகும்.

இப்புண்ணிய காலத்தில் சகலரும் சங்கற்ப பூர்வமாகிய மருத்துநீர் தேய்த்து, தலையில் கொன்றலிலையும், காலில் புங்கமிலையும் வைத்து ஸ்நானஞ்செய்து, மஞ்சள் நிறப்பட்டாயினும் அல்லது மஞ்சள் கரை வைத்த வெள்ளை புதுவஸ்திரமாயினுந் தரித்து, புஷ்பராகம் சேர்த்திழைக்கப் பெற்ற ஆபரணங்களை அணிந்து, நித்திய கர்மானுஷ்டானம் முடித்து, கண்ணாடி, தீபம், பூரண கும்பம் முதலிய மங்கலப் பொருள்களைத்தரிசித்து, விநாயகர் முதலான இஷ்டகுலதேவாராதன தரிசனங்கள் செய்து, இயன்ற தானாதிகள் வழங்கி, புதுவருட சூரியனுக்கு பொங்கல், பூஜை, வழிபாடுகள் செய்து, குரு, பெற்றோர் முதலிய பெரியோர்களை வணங்கி, அவர்கள் ஆசி பெற்று, பிதிர் விரதம் அனுஷ்டிப்பவர்கள் தர்ப்பணம், சிராத்தம் என்பன செய்து, நண்பர்கள், விருந்தினர்களுடன் சேர்ந்து பாலன்னம், தயிர், தேன் இவற்றுடன் அறுசுவைப் பதார்த்தங்களையும் போஜனஞ் செய்து, தாம்பூலமருந்தி, சுகந்த சந்தன புஷ்பாதிகளை அணிந்து, புதுப்பஞ்சாங்கப் பலன்களைக் கேட்டு, புதுவருடத்தில் ஆற்றக்கூடிய நற்கருமங்களைச் சிந்தித்து மங்களகரமாக வாழ்வார்களாக!

## புத்தாண்டைப் போற்றுவோம்!



கொட்டும்மழையும் குளிர்பனியும் கட்ட விழ்க்கும்
கொடும்புயலும் வன்பிணியும் கொடுமை செய்யப்
பட்டதுயர் போதுமிந்தப் பாரி லென்று
பங்குனிநாள் முடிவுவரை பார்த்தி ருந்தோர்
நெட்டுயிர்த்து நெகிழ்வுற்ற நிலையில் நோக்க
நிலமகளும் அகங்குழைந்து நிதமும் நோக்க
மட்டற்ற மகிழ்வினொடு மன்னு நல்ல
வளங்கொழிக்க வந்துற்றாள் வசந்தம் என்பாள்!

தென்றலிளங் காற்றசைப்பச் சிறந்த வேங்கை
தேன்சொட்டும் தூமலர்கள் சிந்தி நிற்பப்
பன்மரங்கள் செடிகொடிகள் பரிந்த ளித்த
பைந்தளிருள் புள்ளினங்கள் பண்ணி சைப்பப்
புன்மைதவிர் மருத்துநன்னீர் பொருத்திப் பின்னர்ப்
புனலாடிப் புத்தாடை புனைந்து மிக்க
பொன்மைதரு கோலமுற்றுப் புனித நல்ல
புத்தாண்டாம் அவள்வரவைப் போற்று வோமே!

- பொலிகை. ச.திருப்பதி -

(கட்டவிழ்க்கும் - நிலைகெடுக்கும்; வேங்கை - சித்திரைத் தொடக்கத்தில் அதிக மலர் சிந்தும் ஒருவகை மரம்)

# போர்ச் சூழலில் தமது உயிரைப் பாதுகாக்க மக்கள் இடம்பெயர்வதை தடுப்பது சரியா?

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென் பிரதேசம் பெரும் போர்க்களமாகி இரண்டு வாரங்கள் ஆகின்றன. இராணுவ நடவடிக்கைகள் ஒரு வேளை சற்று ஓய்வதும், இன்னொருவேளை உக்கிரமடைவதுமாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இரு தரப்புகளினதும் இராணுவ நடவடிக்கைகளின் நோக்கங்கள், அவர்களின் பலங்கள், பலவீனங்கள், வெற்றி வாய்ப்பு என்பன குறித்து விமர்சகர்கள் வெவ்வேறு கருத்துக்களை - ஊகங்களை - சொல்கின்றனர்.

பேச்சுவார்த்தை மேசையில் சென்று அமர்வதற்கு முன்னர், இராணுவ ரீதியாகத் தாமே பலமான நிலையில் உள்ளார்கள் என்பதனைக் காட்டுவது விடுதலைப் புலிகளின் நோக்கம். கடந்த வருட இறுதியில் வன்னியின் முழுப் பகுதியையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்த பெரு வெற்றியோடு, யாழ்ப்பாணத்தையும் தமது வசமாக்கிச் சாதனை படைக்க வேண்டும் என்ற எண்ணத்துடனேயே புலிகள் ஓயாத அலைகள் இராணுவ நடவடிக்கையைத் தொடர்கிறார்கள் என்பது இராணுவ விமர்சகர்கள் சிலரின் ஊகம் - கருத்து.

குடாநாட்டுக்கும் வன்னிக்கும் இடையில் உள்ள மிகப் பெரிய இராணுவத் தளமாக மாறியுள்ள ஆனையிறவை முற்றுகையிட்டு, அங்கு குவிக்கப்பட்டுள்ள சுமார் பதினேழாயிரம் துருப்புகளுக்குமான சகல வித வழங்கல்களையும் தடுத்து, அவர்களை ஒரு வகையில் பணயக் கைதிகளாக்கி, இராணுவ பலத்தில் தடம் மேலோங்கியவர்கள் என்று உறுதிப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவே விடுதலைப் புலிகள் ஓயாத அலைகளைத் தொடர்கின்றனர் என்பது இன்னும் சில இராணுவ விமர்சகர்களின் கருத்து.

இத்தகைய கருத்துக்கள் - ஊகங்கள் - எந்தளவுக்குச் சரியானவை என்பது இப்போது தெரியவராது. தற்போதைய சமர் முடிந்த பின்னரே உண்மையான நிலைப்பாடு தெரியவரும். எனினும் வேறு எந்தச் சமருக்கும் இல்லாத வகையில் இப்போதைய சமருக்கு அரசியல் ரீதியாக முக்கியத்துவம் உண்டு என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

யாழ். குடாநாட்டின் தென்மராட்சிப் பகுதியில் கண்டி வீதியை அண்டி நடைபெறும் சமர் போன்றே போர்ப் பிரதேசத்தில், பளையில் சிக்குண்டுள்ள பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லவிடாது இராணுவம் தடுத்துள்ள விவகாரமும் சூடு பிடித்துள்ளது.

சுமார் இரண்டு வாரங்களாகப் பளைப் பகுதியில் சிக்குண்டுள்ள பொதுமக்கள் - குழந்தைகளும், முதியவர்களும், நோயாளர்களும், கர்ப்பிணிகளும், குடும்பஸ்தர்களுமாக - சுமார் ஐயாயி



**கிளாலியில் இருந்து மிருசுவிலை நோக்கி சைக்கிள்களிலும், வாகனங்களிலும் இடம்பெயர்ந்த வண்ணம் இருந்தனர். ஒருவர் தமது உடமைகளை சைக்கிலில் வைத்து செல்வதைப் படத்தில் காணலாம்.**

ரம் மக்கள் பட்டினி நிலைக்கு வந்துள்ளதாக அறியப்படுகின்றது. அவர்களுக்கு உணவு மற்றும் மருந்து வசதிகள் போன்றவை இல்லை என்பது ஒரு புறமிருக்க, தங்கள் உயிர் எந்த நேரமும் போரினால் - தூர இருந்து வரும் ஷெல்லினால் அல்லது குண்டினால் - காவப்படலாம் என்ற பேரச்சத்தினால் அவர்கள் வினாடிக்கு வினாடிசெத்துக்கொண்டிருக்கின்றார்கள்!

இது ஒரு மனிதாபிமான, மனித நேய விவகாரம். ஆனால் அரசாங்கமும், அரசாங்கப் படைகளும் அதனைப் (இப்பத்தி எழுதப்படும் வரை) பொருட்படுத்தியதாக இல்லை.

ஐக்கிய நாடுகள் சபையின் ஜெனீவா பிரகடனத்தின் பிரகாரம், சர்வதேச மனிதாபிமான சட்ட விதிகளின் பிரகாரம், ஆயுத மோதல்கள் நடைபெறும் பகுதிகளில் இருந்து - போர்ப்பிரதேசங்களில் இருந்து - மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயர்வதற்கு உரிமையுண்டு. ஆனால் அந்த உரிமையை மதிக்காது, மீறும் விதத்தில் அரச தரப்பு நடந்து கொண்டுள்ளது. குடாநாட்டுமக்கள் மத்தியில் மிகப் பெரிய அளவில் விசன அலைகளைத் தோற்றுவித்துள்ளது. பலவகைச் சந்தேகங்களுக்கு உருக்கொடுத்துள்ளது.

போர்ப் பகுதியில் சிக்குண்டுள்ள மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கு அனுமதிக்குமாறு பக்கச்சார்பில்லாத பல மதத் தலைவர்கள், மனிதநேய அமைப்புக்கள் கேட்டுக் கொண்டபோதிலும் அரசாங்கமும், படை

## கிளாலியில் தடுக்கப்பட்டோர் வெளியேவர உதவிய மக்களின் எழுச்சிப் போராட்டம்

அதிகாரிகளும் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை. சர்வதேச மனித நேய - தொண்டர் நிறுவனங்களான - செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஆகியவற்றின் - அதிகாரிகள், போர்ப் பிரதேசத்தில் சிக்குண்ட அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கு அனுமதிக்குமாறு விடுத்த வேண்டுதல்கள் கூடப் பயனற்றுப் போய்விட்டன.

போர் நடவடிக்கைகளை நேரடியாகவே கண்காணிக்கும் முப்படைகளின் பிரதம தளகர்த்தரும், ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவிடம் அப்பாவிப் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல நடவடிக்கை எடுக்குமாறு அரசியல், மதத் தலைவர்களும் மற்றும் மனிதநேய அமைப்புக்களும் கேட்டுக்கொண்டபோதிலும் சாதகமான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

உக்கிரமான போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு பகுதியில் சிக்குண்ட அப்பாவிப் பொதுமக்கள் விநாடிக்கு வினாடி அனுபவிக்கும் வேதனையை ஜனாதிபதி உணர்ந்திருந்தால், உடனடியாகவே அவர்களை வெளியேற அனுமதிக்க உத்தரவிட்டிருப்பார். உயிரோடு போராடிக்கொண்டிருக்கும் அப்பாவிகள் தமிழ்க் குடிமக்கள் என்பதால் அவருக்கு மனித நேயமும், மனிதாபிமான உணர்வும் பிறக்காமற் போயிற்றோ என்று அவரது மௌனமும், செயலின்மையும் எண்ண வைக்கின்றன. சில வேளைகளில், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இவர்கள் தமக்கு வாக்களிக்காமல் இருந்திருப்பர் என்று அரசியல் ரீதியான சந்தேகம் கொண்டுதான், அவ்வாறு நடந்து கொண்டாரோ என்றும் மக்களில் சிலர் பேசியதைக் கேட்க முடிந்தது.

### நியாயப்படுத்த முடியுமா?

ஒரு நாள் அல்ல; இரண்டு நாள்கள் அல்ல; (நேற்று முன்தினம் வியாழக்கிழமை யோடு) பத்து நாள்கள் கழிந்தும் போரின் மத்தியில் சிக்குண்ட பொதுமக்களைப் பாதுகாப்பான பகுதிகளுக்குச் செல்ல அனுமதிக்காது தடுத்து வைத்தமையை ஜனநாயக ரீதியாக இயங்கும் அரசாங்கத்தினரும் அதன் தலைவரும் எவ்வாறு நியாயப்படுத்தப்போகிறார்கள்?

எந்த நாட்டிலும், இயற்கை அனர்த்தங்களாலும், போர் அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்டு, உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் குடிமக்களை மீட்பதற்கு அரசாங்கம் உடனடியாக அவசர நடவடிக்கைகளை மேற்கொள்வது தான் வழமை. ஆனால் இங்கு, அரசதரப்பு குடிமக்களின் உயிர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கும் நிலையே காணப்பட்டது. இதில் ஏதோ ஓர் உள்நோக்கம் இல்லாதிருக்க முடியாது. இத்தனை அழுத்தங்களின் பின்னரும் அரசாங்கம் பச்சிலைப் பள்ளி மக்களைப் பணயம் வைக்க முனைந்தது ஏன் என்பது வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும், உள்ளார்ந்தமாகப் பல காரணங்கள் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

விடுதலைப் புலிகளின் பிரதேசங்களை அரசாங்கப் படைகள் கைப்பற்றியதும் அவற்றுக்கு "விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள்" என்ற "தொழில் நுட்பப்" பெயர் சூட்டுகிறது அரசு. ஆனால் விடுவிக்கப்பட்ட பச்சிலைப்பள்ளிப் பகுதியில் உயிரோடு போராடிக்கொண்டிருக்கும் நிராயுதபாணிகளான அப்பாவி மக்களை அரசு தடுத்து வைத்திருக்கிறது! பலிக் கடாக்களாக நிறுத்தி வைத்திருக்கிறது. அரசாங்கம் தானே அவர்களை விடுவித்தது; அவர்களைத் தடுத்து வைப்பதனை யார் கேட்பது? என்ற வாதம்கூட வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

தமிழர்களின் எந்த விவகாரத்திலும் சட்டமும், அளவுகோலும் வித்தியாசமானதாகத்தான் இருக்கும் என்பதனை உறுதிப்படுத்தும் நடவடிக்கையாகவே பச்சிலைப்பள்ளி மக்களின் விவகாரம் அமைந்துள்ளது!

சிக்குண்டு போயுள்ள பச்சிலைப்பள்ளி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வசதியாக இம்மாதம் இரண்டாம் தகதி காலை 6 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை தாம் தாக்குதல் நடத்தப் போவதில்லை என்று விடுதலைப் புலிகள் முதலாம் திகதி பிற்பகலிலேயே அறிவித்திருந்தனர். மக்கள் பாதுகாப்பாகச் செல்லக்கூடிய பாதையையும் தெரிவித்தனர். போர்ப் பிரதேசத்தில் சிக்குண்டவர்களை வெளியேற்ற உதவுமாறு தொண்டர் நிறுவனங்களுக்கும் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அடுத்த தரப்பினருடன் இணக்கம் காணாமலேயே, ஒரு தலைப்பட்சமாகவே விடுதலைப் புலிகள் இந்த அறிவிப்பை விடுத்திருந்தனர். எனினும் உயிரைக் காப்பாற்றுவதற்கு எப்போது வேறு இடத்துக்கு ஓடிப் போகலாம் என்று நிமிடத்துக்கு நிமிடம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மக்கள் ஆவலுடன் கிளாலி நோக்கி விரைந்தனர்.

இரண்டாயிரத்துக்கும் அதிகமான மக்கள் ஓட்டமும் நடையுமாக, துவிச்சக்கர வண்டிகளில, பிள்ளை குட்டிகளுடன் அவசர அவசரமாக கையில் கிடைத்த உடைகளுடன் கிளாலிக்கு வந்து சேர்ந்தனர். அனேகமாக நண்பகல் பன்னிரண்டு, ஒருமணி வரை மக்கள் சாரி சாரியாகக் கிளாலி ஆலடிக்கு வந்தவண்ணம் இருந்தனர். பளையில் இருந்து புலோப்பளை சென்று அங்கிருந்து கிளாலிக்கு வந்தனர். இரண்டுமணிக்குப் பின்னர் மக்களின் வருகை குறைந்து போயிற்று.

மக்களை அவர்கள் தங்கியிருந்த இடங்களிலும் வீடுகளிலும் இருந்து கிளாலி நோக்கிவர காலையில் அனுமதித்த படையினர், நண்பகலுக்குப் பின்னர் தடுத்துவிட்டனர் என அறியவந்தது.

இதேவேளை, கிளாலிக்கு வந்து சேர்ந்த மக்களில் சுமார் ஆயிரம் பேரையே படையினர் மிருசுவில் செல்வதற்கு அனுமதித்தனர். ஏனையோரைத் தடுத்துவிட்டனர். அவர்கள் கடந்த

**உள்ளும் புறமும்**
**குறுமுனி**

ஆறு நாள்களாகப்படும் அவலம் சொல்லும் தரமன்று. கிளாலி காணிக்கை மாதா தேவாலயத்திலும் அங்குள்ள பாடசாலையிலும் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவு கிடைப்பது கஷ்டமாகவே உள்ளது.

எனினும் இவர்கள் தமக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருள்களை வழங்குவதற்காக யாழ்ப்பாணம் செயலகத்திலிருந்து சென்ற அதிகாரிகளிடம் பொருள்களை வாங்க மறுத்துவிட்டனர். அது மட்டுமன்றி அதிகாரிகள் சென்ற "பிக் அப்" வாகனத்தைச் சூழ்ந்து கொண்டு, நிவாரணம் தேவையில்லை; எங்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல ஏற்பாடு செய்யுங்கள் என்று ஆர்ப்பாட்டம் செய்தனர். தங்களது உயிரச்சத்தையும், அவலத்தையும் உணர்ச்சிகளாக்கி ஆக்ரோஷமாகக் குரல் எழுப்பினர்.

. நீங்கள் எங்களுக்குத் தருவதற்குக் கொண்டு வந்திருக்கும் இரண்டாயிரம் ரூபா எங்களுக்குப் பிரேதப் பெட்டி வாங்குவதற்கா என்ற அவர்கள் அழுது புலம்பிய காட்சி, எந்தளவுக்கு அவர்கள் மனத்தளர்வுற்றுள்ளார்கள் என்பதனை, அவர்களது நொடிந்த உள்ளங்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தியது!

கிளாலியில் சிறைக்கைதிகள் போலத் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களில் சிலர் கூறிய வார்த்தைகள் இவை:

★ ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூடுகளின் மத்தியில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு மரண பயத்துடன் இங்கு தங்கி உள்ளோம். சுற்றி வர இராணுவத்தினர் நிற்க, அயல் பகுதிகள் எங்கும் சதா வெடிச் சத்தங்களும், குண்டுச் சத்தங்களும் கேட்க, எப்படி ஐயா நாம் இங்கே இருப்பது...?

★ பதற்றமான சூழலில், அச்சம் கலந்த சூழலில் நாம் தங்கியுள்ளதால் எமது



**பளைப்பகுதியில் இருந்து மக்கள் இடம்பெயர அனுமதிக்க வேண்டும் என்று கோரி யாழ். செயலகம் முன்பாக வியாழன் மறியற் போராட்டம் இடம்பெற்றது. மறியற் போராட்டத்தில் ஈடுபட்ட அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் யாழ். அரச அதிபருடன் கலந்துரையாடிய சமயம் எடுக்கப்பட்ட படம்.**

குழந்தைகளும் பீதி அடைந்த நிலையில் உள்ளனர். அதனால் அவர்கள் உணவைக் கூட வெறுக்கின்றனர்; உண்பதற்கு மறுக்கின்றனர்.

★ இங்கு மலசல கூட வசதிகளோ, குடிதண்ணீர் வசதிகளோ போதிய அளவில் இல்லை. இதனால் இரவில்தான் மலம் கழிக்க வளவுகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது. குறிப்பாகப் பெண்கள் இரவிலேயே செல்ல வேண்டிய நிர்ப்பந்தம். ஆங்காங்கே இராணுவத்தினர் நடமாடுவதால் இயற்கைக் கடனைக் கழிப்பதே உயிராபத்து நிறைந்ததாகி விட்டது. எங்கள் நிலைமை எப்படியிருக்கும் என்று நினைத்துப் பாருங்கள்...!

தங்களுக்கு உரிமைகள் வேண்டும் என்று கேட்கும் தமிழர்கள் இப்படி அனுபவித்தால் தான் பாடம் படிப்பார்கள் என்று கருதியா அரசு அவர்களை பணயக் கைதிகளாக்கித் தடுத்து வைத்திருக்கிறது? இவ்வாறு மறைமுக இம்சை செய்கிறது?

எத்தகைய கோரிக்கையின் பேரிலும்

கிளாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களை பாதுகாப்பான இடத்துக்குச் செல்ல மக்களை பாதுகாப்பான இடத்துக்குச் செல்ல அரசு அனுமதிப்பதற்கான எந்த வகை அசுமாத்தமும் இல்லாத நிலையிலேயே அரசுக்கும் பெரும் அழுத்தம் கொடுக்கும் வகையில் மக்கள் எழுச்சி நேற்று முன்தினம் வெடித்தது; அவர்களின் குரல் ஓங்கி ஒலித்தது.

(XV ஆம் பக்கம் பார்க்க)

# லாலு, ராப்ரிதேவி விவகாரத்தினால் பிஹார் அரசியல் மீண்டும் சூடு பிடிப்பு!

ராஷ்ட்ரிய ஜனதா தள் தலைவர் லாலுபிரசாத் யாதவ் 14 நாள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பதும், அவரது மனைவி ராப்ரிதேவி இரண்டு லட்சம் ரூபா காப்புறுதிப் பிணையில் விடப்பட்டிருப்பதும் பிஹாரில் மீண்டும் அரசியல் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது.

வருமானத்துக்கு அதிகமாக 40 லட்சம் இந்திய ரூபா சொத்துச் சேர்த்ததாக லாலுபிரசாத் யாதவ் மீதும் இந்த மோசடிக்கு கணவனுக்கு உடந்தையாக இருந்ததாக ராப்ரிதேவி மீதும் சி.பி.ஐ எனப்படும் மத்திய புலனாய்வுப் பிரிவு கடந்த செவ்வாயன்று பாட்னாவில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

இருவருக்கும் சிறப்பு நீதிமன்றத்தினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டதை அடுத்து அடுத்த நாள் புதன் கிழமை இருவரும் சிறப்பு நீதிமன்றத்தில் சரணடைந்தனர்.

லாலுபிரசாத்யாதவ்வுக்கு பிணையில் செல்லமுடியாத பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டதே அவர் தடுப்புக் காவலில் வைக்கப்படக் காரணம் ஆகும்.

## ராஷ்ட்ரிய ஜனதா தள் அரசை வீழ்த்த பி.ஜே.பி. கங்கணம்

### ராப்ரிதேவி தொடர்ந்து முதல்வராக இருக்க முடியுமா?

ராப்ரிதேவி தொடர்ந்து முதலமைச்சராக இருக்க முடியாது என்று பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக் கூட்டணி பிஹார் ஆளுநரிடம் கோரி வருகிறது.

ராப்ரிதேவி முதலமைச்சர் பதவியில் இருந்து விலகாவிடில் நேற்று வெள்ளியன்று ஹர்த்தால் நடத்துவதற்கு சமதாக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் முதலமைச்சர் காலக்கெடு விதித்திருந்தார்.

அதேசமயம் லாலுபிரசாத் யாதவ் கைதாகி இருப்பதால் அவரது ஆதரவாளர்கள் பெரும் அளவில் குழப்பம் விளைவிக்கத் திட்டமிட்டு வருகின்றனர்.

### காங்கிரஸுக்கு இக்கட்டான நிலை

பிஹாரில் தற்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடி காங்கிரஸுக்கும் இக்கட்டான நிலைமையை ஏற்படுத்தி வருகிறது.



சனி அபாச்சாவின் மனைவி மரியம்

ஊழல் கட்சிகள் என்று தெரிவிக்கப்படும் அ.தி.மு.க.வுடனும் ராஷ்ட்ரிய ஜனதா தள்ளுடனும் காங்கிரஸ் கூட்டுச்சேர்ந்தது ஏற்கனவே காங்கிரஸ் தலைமைக்குள் நெருக்கடியை ஏற்படுத்தி இருந்தது. அத்துடன் கட்சிக்குள் ஏற்பட்ட பெரும் எதிர்ப்புக்களின் மத்தியிலேயே பொது எதிரியான தேசிய ஜனநாயகக் கூட்டணியைத் தோற்கடிக்க வேண்டும் என்ற ஒரே பொது நோக்குடன் பிஹாரில் ராஷ்ட்ரிய ஜனதா தள் அரசுக்கு ஆதரவு வழங்குவதற்கு காங்கிரஸ் இணங்கியது.

பிஹாரில் ஊழல் மற்றும் மோசடி வழக்குகள் லாலுபிரசாத் யாதவ் மீதே இதுவரை இருந்து வந்தன. தற்பொழுது முதல் தடவையாக இப்படியான வழக்கு ஒன்றில் ராப்ரிதேவியும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இத்தகைய வழக்குகளில் ஒன்றில் ஏற்கனவே லாலுபிரசாத் யாதவ் தனது முதலமைச்சர் பதவியை முன்னர் துறந்திருந்தார். சிறிதும் படிப்பறிவு அற்ற, அரசியலே தெரியாத ராப்ரிதேவி முதலமைச்சராக்கப்பட்டார். ராப்ரிதேவி எப்படி அரசியல் நடத்தப் போகிறார் என்று அப்பொழுது பலரும் மூக்கில் விரல் வைத்தனர். எனினும் தனது கட்சியின் பெரும்பான்மை பலத்தை வைத்துக் கொண்டு ராப்ரிதேவியினால் கடந்த சட்டப் பேரவைத் தேர்தல்வரை ஆட்சியை நடத்தமுடிந்தது.

### குற்றச் செயல்கள் மலிந்த இந்தியா

இந்தியாவைப் பொறுத்தவரை அரசியலும் குற்றச் செயல்களும் இரண்டறக் கலந்தவை. லாலுபிரசாத் யாதவ் முன்னர் பல தடவைகள் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்ட போதிலும் இன்னும் அவர் முறையாகத் தண்டனை அனுபவிக்கவில்லை. மேன்முறையீடு செய்யும் வாய்ப்பைப் பயன்படுத்தி சட்டத்தின் பிடியில் தப்பாமல் காலம் கடத்த முடிகிறது. தமிழ்நாட்டில் ஜெயலலிதாவுக்கு கொடைக்கானல் "பிளசன்ட் ஸ்ரே" வழக்கில் ஒரு வருடக் கடுங் காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

ஆனால் அவர் மேன்முறையீடு செய்தது மூலம் மேலும் பல மாதங்கள், வருடங்களுக்கு சட்டத்தின் பிடியில் இருந்து விடுபட முடிந்தது.

இந்தியாவில் கடந்த மக்களவைத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் சுமார் ஆயிரம் பேர்வரை குற்றங்களுக்காகத் தண்டனை பெற்றவர்கள் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. உத்தரப்பிரதேச மாநிலத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பூலான்தேவியும் இவர்களில் ஒருவர். இத்தகைய நூற்றுக்கணக்கான குற்றவாளிகள் உத்தரப்பிரதேசம், பிஹார், மத்தியபிரதேசம் போன்ற மாநிலங்களில் போட்டியிட்டனர்.

பிஹாரைப் பொறுத்தவரை கடந்த மாதம் 6ஆம் திகதிதான் ராப்ரிதேவி தலைமையிலான அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றது. தற்போதைய நீதிமன்ற உத்தரவு பிஹாரில் ராஷ்ட்ரிய ஜனதா தள் ஆட்சியை மீண்டும் கேள்விக்குறி ஆக்கி விட்டுள்ளது.

சிறப்பு நீதிமன்ற உத்தரவை ஓர் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என்று ராஷ்ட்ரிய ஜனதா தள் தலைவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். பிஹாரில் அரசியல் நெருக்கடி தொடரப் போவதையே இது காட்டுகிறது.

எப்படியாவது ராஷ்ட்ரிய ஜனதா தள் அரசைக் கவிழ்ப்பதே பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் நோக்கம் ஆகும்.

* * *

## நைஜீரியா

மேற்கு ஆபிரிக்காவில் ஆதிக்கம் செலுத்தும் எண்ணெய் வளம் உள்ள நாடு நைஜீரியா.

இந்த நாட்டின் முன்னாள் ஆட்சியாளர் சனி அபாச்சா. தமது பதவிக் காலத்தில் நாட்டின் சொத்துக்களைப் பெரும் அளவில் அவர் சூறையாடியதாக தற்பொழுது தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

1993 இல் இரத்தம் சிந்தாப் புரட்சி மூலம் நைஜீரியாவில் ஆட்சியைக் கைப்பற்றினார் சனி அபாச்சா. 1998 ஜூன் 8ஆம் திகதி மர்மமான முறையில் திடீரென அவர் இறந்துபோனார். அந்த குறுகிய பதவிக்காலத்தில் அவர் 400 கோடி டொலர் பணத்தை சூறையாடியதாக தற்போதைய ஜனாதிபதி ஒபசன்யோ குற்றஞ்சாட்டி உள்ளார்.



லாலுப் பிரசாத் யாதவ்வும் அவரது மனைவி ராப்ரிதேவியும்

சனி அபாச்சா தனது ஐந்து வருட கால ஆட்சியில் நைஜீரியாவில் பெரும் சுகபோகங்களை அனுபவித்து வந்தார். தனது அரசியல்

**உலக உலா**
**என்.பி.சீலன்**

எதிரிகளை அவர் சிறையில் தள்ளினார். பலரைத் தூக்கிலிட்டார்.

நைஜீரியாவின் மத்திய வங்கியிலிருந்து வேண்டுமான பணத்தை அவர் எடுத்து வந்தார். வேண்டத்தகாத பெண்களுடன் அவர் தொடர்புகளை வைத்திருந்தார் என்றும் கூறப்படுகிறது.

## மார்க்கோஸ், சுஹார்ட்டோ வரிசையில் சனி அபாச்சா!

### மரணம் எப்படி ஏற்பட்டது?

1998 ஜூன் 8ஆம் திகதி அவருக்கு மரணம் எப்படி நேர்ந்தது என்பது இன்னும் மர்மமாகவே இருக்கிறது. அன்று அரச பயணம் ஒன்றுக்கு அவர் ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். தனது அரச பயணத்திற்கு முன் தனது பளிங்கு மாளிகையில் இருந்து அதிகாலை 4.00 மணியளவில் அவர் திடீரென வெளியேறிச் சென்றார். பின்னர் திரும்பி வரவில்லை. அன்று அதிகாலை விபசார விடுதி ஒன்றில் வயக்ரா பாவித்து விட்டு மூன்று இந்திய விபசாரிகளுடன் அவர் இருந்தது பின்னர் தெரியவந்தது.

53 வயதான சனி அபாச்சாவின் சடலம் அரச மரியாதைகள் எதுவும் இன்றியே அடக்கம் செய்யப்பட்டது. ஐந்து வருடகாலம் நைஜீரியாவை ஆட்டிப் படைத்த ஒருவருக்கு ஏற்பட்ட பயங்கர முடிவு இது.

### பணத்துக்கு என்ன நடந்தது?

சனி அபாச்சாவின் சடலம் அடக்கம் செய்யப்பட்ட கையோடே நைஜீரியாவில் எழுந்த கேள்வி இவரினால் சூறையாடப்பட்ட கோடிக்கணக்கான டொலர் பணத்துக்கு என்ன நடந்தது என்பதுதான்.

சனி அபாச்சா இறந்து ஒரு மாதத்தின் பின்னர் அவரது மனைவி மரியம் சவூதி அரேபியா புறப்பட ஆயத்தமானார். கணவரின் மரணத்துக்காக அங்குபோய் துக்கம் அனுஷ்டிக்கப்போவதாக அவர் கூறினார்.

அவர் புறப்பட்ட தினம், இரகசிய தகவல் ஒன்றை அடுத்து கானோ விமான நிலையத்தில் நைஜீரிய பொலீஸார் அவரது பொதிகளை சோதனையிட்டனர். அப்பொழுது 38 சூட்கேஸ்களில் அவர் பணம் எடுத்துச் சென்றது கண்டு பிடிக்கப்பட்டது. மரியம் தற்பொழுது நைஜீரியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். சனி அபாச்சாவினால் சூறையாடப்பட்ட சொத்துக்களை கண்டுபிடிக்கும் முயற்சியில் நைஜீரிய பொலீஸார் இன்றும் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த மோசடிகள் மூலம் இந்தோனேசியாவின் சுஹார்ட்டோ, பிலிப்பீன்ஸின் பேர்டினன்ட் மார்க்கோஸ், ஸயர் எனப்படும் முன்னாள் கொங்கோவின் மொபுட்டு, ஹெய்ட்டியின் ஜீன் டுவாலியர் பட்டியலில் சனி அபாச்சாவும் சேர்க்கப்பட்டுவிட்டார்.

### சுஹார்ட்டோ முன்னணியில்

இவர்களில் எல்லாம் முன்னணியில் நிற்பவர் முன்னாள் இந்தோனேசிய ஜனாதிபதி சுஹார்ட்டோ தான். இந்தோனேசியாவில் சுஹார்ட்டோ சுமார் 32 வருட காலம் ஆட்சி செய்தார். சுஹார்ட்டோவும் அவரது குடும்பத்தவர்களும் சூறையாடிய அரச சொத்துக்கள் சுமார் 4 ஆயிரம் கோடி டொலர்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சுஹார்ட்டோவின் குடும்ப அங்கத்தவர்களின் நிறுவனங்கள் தற்பொழுது சீல் வைக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

பிலிப்பீன்ஸின் முன்னாள் சர்வாதிகாரி பேர்டினன்ட் மார்கோஸ் மரணமாகி 10 ஆண்டுகள் கழிந்துவிட்டன. ஆனால் அவரினால் சூறையாடப்பட்ட அரச சொத்துக்களை கண்டுபிடித்து மீட்கும் முயற்சிகள் இன்னும் தொடர்கின்றன. 500 கோடி டொலர் அரச சொத்து இவரினால் சூறையாடப்பட்டதாக கூறப்படுகிறது. இதில் 200 கோடி டொலர் சொத்துக்களை மீளப்பெறுவதில் பிலிப்பீன்ஸ் அரசாங்கம் வெற்றி கண்டுள்ளது.

ஸயரில் ஆட்சி செய்த மொபுட்டு 400 கோடி டொலர் முதல் 1000 கோடி டொலர் வரையான அரச சொத்துக்களை சூறையாடிய கூறப்படுகிறது. 1997 இல் சுவிஸ் வங்கியில் 4 கோடி டொலர் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. ஸயரில் இருந்த அவரது சொத்துக்கள் சில பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மொபுட்டுவின் பிள்ளைகள் தற்பொழுது பிரஸெல்ஸிலும் பிரெஞ்றிவீராவிலும் பெரும் ஆடம்பர வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

ஹெய்ட்டியின் முன்னாள் ஜனாதிபதி ஜீன் டுவாலியர் 12 கோடி டொலர் முதல் 40கோடி டொலர் வரை சூறையாடி இருந்தார். எனினும் விவாகரத்து வழக்கில் இதில் பெரும்தொகையான பணத்தை இவர் இழக்க நேரிட்டது.

### மேற்கு நாடுகளே காரணம்

பனிப்போர் காலத்தில் சுஹார்ட்டோ, மொபுட்டு, மார்கோஸ் போன்ற சர்வாதிகாரிகளை அமெரிக்காவும் மற்றும் மேற்கு நாடுகளும் கண்மூடித் தனமாக ஆதரித்தன. கம்யூனிஸத்துக்கு எதிராக இவர்கள் செயற்பட்டதே இதற்குக் காரணம். இந்த தலைவர்கள் தமது நாட்டின் தேசிய சொத்துக்களைச் சுரண்டி அமெரிக்க, ஐரோப்பிய வங்கிகளில் போட்டதால் எந்த நாடாவது இவர்களது தேசவிரோத நடவடிக்கையை தட்டிக் கேட்கவில்லை.

நைஜீரியாவின் தற்போதைய ஜனாதிபதியான ஒபசன்யோ முன்னர் சனி அபாச்சாவினால் சிறை வைக்கப்பட்டிருந்தவர்.



சனி அபாச்சா

அபாச்சாவின் மரணத்தின் பின்னர் நடைபெற்ற தேர்தலில் ஒபசன்யோ வெற்றிபெற்று நைஜீரிய ஜனாதிபதி ஆனார்.

சனி அபாச்சா தனது குடும்ப உறுப்பினர்கள், நம்பிக்கை வாய்ந்த அதிகாரிகள், வர்த்தகப் பங்காளிகள் மூலமே அரச சொத்துக்களை அபகரித்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சனி அபாச்சாவின் ஆட்சிக்காலத்தில் பதவியில் இருந்த அமைச்சர்கள், சிவில் அதிகாரிகள், கவர்னர்கள் ஆகியோரும் பெருமளவு அரச சொத்துக்களை அபகரித்தது தற்பொழுது விசாரணையில் தெரியவருகிறது.


நைஜீரியா 12 கோடி மக்கள் கொண்ட பெரிய நாடு. இந்த நாட்டின் மக்கள் ஜனநாயக உரிமைகள் கோரி கடந்த 15 ஆண்டுகளாக போராடி வந்தனர். ஆனால் ஆட்சியில் இருந்த தலைவர்கள் சொத்துக்களை சூறையாடுவதிலேயே கவனமாக இருந்து வந்துள்ளனர். ஒபசன்யோவின் ஆட்சியில் நைஜீரியா முன்னேற்றம் அடைய தற்பொழுது வாய்ப்புகள் இருந்து வருகின்றன.

நைஜீரியாவில் ஊழல்களையும் அதிகார துஷ்பிரயோகங்களையும் களைவதே தமது முக்கிய நோக்கம் என்று ஜனாதிபதி ஒபசன்யோ தெரிவித்துள்ளார்.

*

# மாமி — மருமகள் ஒற்றுமை எப்போது பலப்படுகின்றது?

**ஏழாலை. முரளி.**
ராகிங்கிற்கு விரிவுரையாளர்களும் ஆதரவு அளிக்கின்றார்களாமே?



☺**இல்லை. நமக்கேன் வீண் வம்பு என்று ஒதுங்கி நிற்பதன் மூலம் ஒத்துழைக்கின்றார்கள்.**

❀ ❀ ❀

**கரவெட்டி. சண்.**
'அக்கினிப் பெருமூச்சு' எப்படி உள்ளது?
☺**ஈழத் தமிழரின் அவலத்தை வெளிப்படுத்தும் பெருமூச்சு அது. மனதைச் சுடுகின்றது.**

❀ ❀ ❀

**நவாலி. ரதீபன்.**
மாமி - மருமகள் ஒற்றுமை எப்போது பலப்படுகின்றது?
☺**மாப்பிள்ளை சின்னவீட்டை நாடும் போது!**

❀ ❀ ❀

**கோண்டாவில். சி. சந்திரன்.**
பெண்களுக்கு அழகு தருவது எது?
☺**அது ஆளாளுக்கு வேறுபடுமே!**

❀ ❀ ❀

**தட்டாதெரு. எஸ். பாபு.**
மாரி காலத்தில் 'கிரிக்கெட்', உதைபந்து விளையாட முடியாமல் இருக்கின்றதே?
☺**இருக்கவே இருக்கின்றது Indoor - Games.**

❀ ❀ ❀

**திருநெல்வேலி. எஸ். குமார்.**
'வாகன யோகம்' என்று சோதிடர் பலன் கூறுகின்றாரே! நம்பி - துணிந்து - மோட்டார் சைக்கிள் வாங்கலாமா?
☺**எதிரில் வருபவருக்கு 'வார்ட் யோகம்' என்று பலன் இருந்தால் என்ன செய்வது?**

# கடைச்சாப்பாடு எப்போது சுவைக்கும்?

❀ ❀ ❀

**கந்தர்மடம். ப. வரதன்.**
மோட்டார் சைக்கிளுக்கு தலைக்கவசம் வாங்குவது வீணா?



☺**யார் சொன்னது? சில சமயங்களில் வீட்டில் வந்திறங்கும்போது உள்ளேயிருந்து வீச்சாக வரும் பாத்திரங்களில் இருந்து பாதுகாப்புத் தருகின்றதே!**

❀ ❀ ❀

**ஊரெழு. கே.விசாகரன்.**
மனிதனின் வெற்றி அவனது இரண்டு கைகளிலும்தான் உள்ளது என்பது உண்மையா?
☺**இரண்டுகை உள்ள எல்லோரும் வெல்வது இல்லையே. மூன்றாவது கையாகிய நம்பிக்கைதான் பிரதானம்-வெற்றிக்கு!**

❀ ❀ ❀

**கரவெட்டி. சதானந்த்.**
கடைச்சாப்பாடு எப்போது சுவையாக இருக்கும்?
☺**சிநேகிதன் காசில் சாப்பிடும் போது!**

❀ ❀ ❀


**இணுவில். மு.மூர்த்தி.**
பொய் சொன்னால் கண்டுபிடிக்கும் இயந்திரம் இருக்கின்றதா?
☺**அனேகமான வீடுகளில் இருக்கின்றதே! கணவன்மார் பொய் சொல்லி மாட்டிக் கொள்வது பெரும்பாலும் இந்த இயந்திரத் திடம்தானே!**

❀ ❀ ❀

**வல்லை. ம. கருணை.**
கோயம்புத்தூரில் ஓர் அழகுராணிப் போட்டியில், பாட்டிகளுக்கு என்றும் தனியாக ஒரு போட்டி வைத்தார்களாமே?
☺**ஏன் பாட்டிகளுக்கு 'பியூட்டி' இல்லையோ?**

❀ ❀ ❀

**நெல்லியடி. வீ. வைஷ்ணவி.**
ஆசிரியரைத் தாயோடு ஒப்பிடலாமா?



☺**லாம்! தாய் வீட்டில் தாலாட்டுப் பாடித் தூங்க வைக்கிறாள். ஆசிரியர் பாடசாலையில் பாடம் நடத்தித் தூங்க வைக்கிறார். அவ்வளவுதான் வித்தியாசம்!**

❀ ❀ ❀

**இளவாலை. அ. கிறிஸ்ரி.**
பாடசாலையில் விளையாட்டுப் போட்டி முடிந்ததும் பெற்றோர், ஆசிரியர்கள், விருந்தினர்களுக்கும் ஓட்டப் போட்டி வைக்கின்றார்களே?
☺**ஓட்டம், விளையாட்டு - இரண்டுக்கும் வயது தடையாகாதே!**

❀ ❀ ❀

**வடலியடைப்பு. ப.நிரஞ்சன்.**
ராகிங் செய்பவர்கள் முட்டாள்களா?
☺**படித்த முட்டாள்கள்!**

❀ ❀ ❀

**மிருசுவில். ம.டிலான்.**
வெண் நிலவு, பெண் நிலவு - என்ன வேறுபாடு?
☺**வெண் நிலவு மாதத்தில் ஒருநாள் தான் விடுமுறை எடுக்கும்.**

❀ ❀ ❀

**அளவெட்டி. திருக்குமார்.**
என் மனைவி சண்டைக்கோழியாக இருக்கின்றாள். தொல்லை தாங்க முடியவில்லை. சின்னவீடு வைத்துக் கொள்ளலாமா?
☺**தெருவில் கோழிச்சண்டை நடத்தப் போகின்றீரா?**

❀ ❀ ❀

**நீர்வேலி. க.ரகுராம்.**
முத்தம் பெறுவது எப்படி?
☺**கொடுத்து வாங்க வேண்டும்!**

❀ ❀ ❀

**நல்லூர். எஸ். பாரதி.**
காதலன் மறக்காமல் இருக்க என்ன பரிசு கொடுக்கலாம்?
☺**கட்டிக்கொள்ளும். காலத்துக்கும் மறக்க முடியாது!**

❀ ❀ ❀

**நவாலி. கே. தீபன்.**
மனைவி சொல்லே மந்திரம் என்று வாழும் ஆண்கள் குறித்து...?
☺**மனைவியைப் பேய்க்காட்டும் தந்திரமாகவும் அது இருக்கும்.**


❀ ❀ ❀

**சண்டிலிப்பாய். எஸ்.கவி.**
என்னுடைய நண்பன் ஒருவன் இலட்சணமான பெண்ணைத் தேடுகின்றானே?
☺**இலட்சங்கள் பெறும் இலட்சியம் இல்லாவிட்டால் கிடைக்கும்.**

❀ ❀ ❀

# மனிதனின் வெற்றி அவன் கைகளில் தானா?

**கரவெட்டி. சீதாராமன்.**
வேளைக்கு இரண்டு துண்டு பாண் அல்லது இரண்டு புட்டுத்தான் சாப்பிடுகின்றேன். ஆனால் உடல் பருமனாகத்தானே இருக்கின்றதே. ஏன்?



☺**அட சாப்பாட்டு ராமரே! ஒரு பானை நடுவில் வெட்டினாலும் இரண்டு துண்டு தான். ஒரு குழல் நிறைய இரண்டு புட்டும் போடலாம். நீர் எந்த அளவை வைத்திருக்கின்றீர் என்பதுதான் விவகாரம்.**

❀ ❀ ❀

**நல்லூர். ரகு.**
சுதந்திரமாயச் சுற்றித் திரியும் இளைஞர்கள் திருமணமானதும் வேலையில் மூழ்கி விடுகின்றார்களே?
☺**சம்சார சாகரத்தில் குதித்தால் மூழ்கத்தானே வேண்டும்...?**

❀ ❀ ❀

**கரம்பொன். நவா.**
குருதட்சணைக்கும் வரதட்சணைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?
☺**குருதட்சணை படித்த வித்தைக்குக் கொடுப்பது; வரதட்சணை வரப்போகின்றவரிடம் படிக்கப் போகும் வித்தைக்குக் கொடுப்பது!**

❀ ❀ ❀

**நவாலி. சங்கரன்.**
ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது என்பது உண்மையா?
☺**எல்லா வேலையும் பாடிக்கொண்டு செய்ய முடியாதே!**

❀ ❀ ❀

**மானிப்பாய். டினூஷா.**
காதல் என்றால் என்ன?
☺**நேர்மையானவனுக்கு பாசவலை. நேர்மையில்லாதவனுக்கு மோசவலை.**

❀ ❀ ❀

**திருநெல்வேலி. கோணேஸ்.**
அரசியலில் நுழைவீர்களா என்று நடிகர்களைக் கேட்கின்றார்கள். அரசியல் என்ன குகையா?
☺**நுழையும் இடம் எல்லாம் குகை என்று நினைத்தீரா?**


# வித்துவான் பதில்கள்

❀ ❀ ❀

**யாழ். ப. பார்வதி.**
எனது மகள் திருமணமானதும் கஷ்டப்பட்டு வளர்த்த என்னை மறந்து விட்டாளே?
☺**இறகு முற்றிப் பறவையானால் எல்லாம் தன் வயிற்றைத்தான் பார்க்கும்.**

❀ ❀ ❀

**பருத்தித்துறை. சுகி.**
படையப்பா படத்தில் வித்தா கதாநாயகனாக நடித்திருந்தால் எப்படி இருக்கும்?



☺**'ஜேம்ஸ் பொண்ட்' படத்தில் நடிப்பதற்கு போட்ட மேக்கப்புடன் வித்துவானின் தோற்றம் இது. (ஹீ...ஹீ... ஏப்ரல் பூல் கற்பனை என்று வைத்துக் கொள்ளும்.)**

❀ ❀ ❀

**சங்கானை. சுதாராஜ்.**
'ஏப்ரல் பூல்' அன்று சில மாணவர்கள், மாணவிகளின் சட்டைக்கு மை தெளித்தார்களே?
☺**'ஏப்ரல்' பூல் அன்று தமது சுயரூபத்தைக் காட்டியுள்ளார்கள்.**

❀ ❀ ❀

**சில்லாலை. எபநேசர்.**
வித்துவானே! தாங்கள் எமக்குத் தரப் போகும் புத்தாண்டுப் பரிசு என்ன?
☺**வாய்விட்டுச் சிரிக்க நகைச்சுவை தருகிறோம். உங்கள் நோய் விட்டுப் போகக் சிரியுங்கள்!**

❀ ❀ ❀

**அராலி. மகேந்திரன்.**
தட்டில் இருக்கும் லட்டைப் பார்த்து பல் விழுந்த கிழவரும் வாயூறுவது ஏன்?
☺**மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை வென்றவரும் லட்டாசையை வென்றதில்லையே!**

❀ ❀ ❀

**கொக்குவில். ரமேஷ்.**
எனக்குத் துணைவியாக வரப்போகின்ற பெண்ணைப் பார்த்து வருவதற்கு பாட்டிகளை அனுப்பலாமா?
☺**குருடர்கள் யானை பார்த்த கதையாகத்தான் முடியும் இளஞ்சிட்டுகளை அனுப்பும்.**

❀ ❀ ❀

**ஆவரங்கால். வரன்.**
என் நண்பனின் மனைவி கிளிபோல இருக்கின்றாள். யாராவது சீதனம் இல்லாமல் திருமணம் செய்வார்களா?
☺**கிளிச் சோதிடரைத்தான் கேட்டுப் பார்க்க வேண்டும்**

❀ ❀ ❀

**மல்லாகம். மனோ.**
அவஸ்தை என்று எதைக் கூறலாம்?
☺**'2'க்கு அவசரமாகப் போகவேண்டியிருக்கும்போது, உள்ளே யாராவது கல்லுமாதிரிக் குந்திக் கொண்டிருந்து கந்த சஷ்டிகவசம் பாடிக் கொண்டிருந்தால் வருமே எரிச்சல். அதுதான்!**

❀ ❀ ❀

**கிளிநொச்சி. சண்.**
அலைகள் எப்போது ஓயும்?
☺**அடைய வேண்டிய கரையை அடைந்ததும் ஓயும்.**

❀ ❀ ❀

**சாரையடி. நகுலேஸ்.**
கல்யாணம் கொண்டாட்டமா? திண்டாட்டமா?
☺**கொள்ளும் வரைக் கொண்டாட்டம்; கொண்டபின் திண்டாட்டம்!**

❀ ❀ ❀

**சங்குவேலி. நித்தி.**
மனைவி அமைவது இறைவன் கொடுத்த வரமா?
☺**சிலருக்கு வரம்; பலருக்கு சாபம்.**

❀ ❀ ❀

**ஊரெழு. தேவி.**
திருமண பந்தம் தலை எழுத்தா?
☺**அதுதான் தாரமும் குருவும் தலைவிதிப்படி என்கின்றார்களே!**

❀ ❀ ❀

**புத்தூர். ஸ்ரீரங்கன்.**
வித்தா! என் கஷ்ட நிலை மாறாதா?
☺**சுகதுக்கம் சுழல்சக்கரம். காலம் மாறும்; கலங்காதீர்!**

❀ ❀ ❀

**உடுவில். வ.ரேவதி.**
ஒரு வேலையும் இல்லாமல் மகிழ்ச்சியாக இருக்க முடியுமா?



☺**முடியுமே! ரியூட்டறி வாசலில் சைக்கிளோடு நிற்கும் இளைஞர்கள் மகிழ்ச்சியாகத்தானே இருக்கின்றார்கள்?**

❀ ❀ ❀

**சீரணி. விஜயதாசன்.**
தப்பு செய்பவர்கள் தண்டிக்கப்படுவரா?
☺**உப்புத் தின்றவன் தண்ணி குடிப்பான்; தப்புச் செய்தவன் தப்பாமல் சுமப்பான்!**

## இவ்வார ஜோக்


ரமேஷ்:- ஏன் என்னவோ போல் இருக்கின்றாய்?
சுரேஷ்:- நான் விரைவில் தந்தையாகப் போகிறேன்.
ரமேஷ்:- அதிலே வருத்தப்பட என்ன இருக்கிறது?
சுரேஷ்:-இன்னும்என் மனைவிக்கு அது தெரியாது!

# மனிதனைத் தாக்கும்

## இறுதிப் பாகம்

### யோனித்துவாரத்தினூடு இடுப்புக்குழி உறுப்புக்களின் இறக்கம் (Genital Prolapse)

இடுப்புக்குழியிலுள்ள உறுப்புக்களை இடுப்புக்குழியிலுள்ள சில அமைப்புக்கள் (உ+ம்:- இடுப்புக் குழித்தளம், இடுப்புக்குழி மென்சவ்வு மற்றும் வேறு அமைப்புக்கள்) உறுதியாகப் பற்றி வைத்துக்கொண்டிருக்கின்றன. இந்த அமைப்புக்களில் ஏதாவது சேதங்கள் அல்லது உறுதியின்மை ஏற்படுமாயின் இவ்



சூலகக் கட்டி(Ovarian Cyst)

வுறுப்புக்கள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ தமது இடத்திலிருந்து விலகி இறுதியில் யோனித்துவாரத்தினூடு வெளியேறுகின்றன.

வெளியேறுகின்ற உறுப்புக்களைப் பொறுத்து அவற்றின் பெயர் வேறுபடுகின்றது.

(அ) சலப்பை இறக்கம் (Cystocele)
(ஆ) நேர்குடல் இறக்கம்(Rectocele)
(இ) கருப்பை இறக்கம்(Utrus Prolupse)
(ஈ) குடல் இறக்கம்(Enterocele)

இடுப்புக்குழி உறுப்புக்களை தாங்கும் அமைப்புக்கள் பின்வரும் காரணங்களால் அவற்றின் உறுதியை இழக்கின்றன.

* யோனிவழியினூடு குழந்தை பிறக்கும்போது, சிசுவின் தலைப் பகுதி கருப்பைக்கழுத்து, யோனித்துவாரம் ஊடாக வெளிவரும் வேளையில் இந்த அமைப்புக்களை விரிவடையச் செய்கின்றது.

* ஆயுதங்களைப் பயன்படுத்தி (Forceps) குழந்தையைப் பிரசவிக்கச் செய்தல் மற்றும் நீண்டநேரம் குழந்தை வெளியேறாமல் யோனி வழியில் நிற்றல், மிகவும் பருமனுடைய சிசு போன்றவையும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

* மாதவிடாய் முற்றாக நின்ற பெண்களில் ஈரஜன் (Oestrogen) ஓமோனின் செயற்பாடு குறைவதனால் இவ்வமைப்புகள் அமைப்பழிய ஆரம்பிக்கின்றன. இதனால் உறுதி குன்றுகின்றது.

* தொடர்ச்சியான இருமல், அதிகரித்த வேலை போன்றவற்றால் வயிற்றுக்குழி அமுக்கம் அதிகரித்து இது நிகழலாம்.



யோனி வழியினூடான உறுப்பு இறக்கம்.

* கருப்பை அகற்றப்பட்ட சில பெண்களில் இவற்றின் உறுதி குன்றுகிறது.

*குணங்குறிகள்:-*

* இருமும் போது, நிற்கும்போது கடினமான வேலை செய்யும்போது யோனித்துவாரத்தினூடு உறுப்புகள் இறங்குவதை அவதானிக்கலாம்.

* நாரிவலி.

* சிறுநீர் தொடர்பானவை (சிறுநீர்ப்பை இறக்கம்):-

1. அடிக்கடி சிறுநீர் கழித்தல்.
2. கடின வேலையின்போதும், இருமும்போதும் தன்னை அறியாமல் சலம் வெளியேறல். (Stres Inconhnance)

ஆரம்பத்திலேயே இவற்றிற்கான குணங்குறிகளைக் கண்டு சிகிச்சை பெறாதுவிட்டால், இதுதொடுகைக்கு உட்பட்டு (உடை, வேறுபல காரணிகளால்) தொற்று ஏற்பட வாய்ப்புண்டு.

குறிப்பு:- மேலே குறிப்பிட்டுள்ள உறுப்புக்களின் இறக்கம் குடலிறக்கம் அல்லது ஹேரணியா (Hernia) இலிருந்து வேறுபடுகின்றது. அவை வேறுபாதையினூடு நடைபெறுகின்றன.

### புற்றுநோய்களும் ஏனைய கட்டிகளும்

உடலின் ஏனைய பாகங்களைப் போன்று இனப்பெருக்க உறுப்புக்ளிலும் புற்றுநோய் (Carcinoma) மற்றும் புற்றுநோய் போன்று பாரிய விளைவுகளை ஏற்படுத்தாத கட்டிகளும் (Benign Tumors) ஏற்படுகின்றன. இனப்பெருக்கத் தொகுதியில் பல்வேறு இடங்களில் இவை ஏற்படுகின்ற போதிலும் ஒருசிலவற்றை நாம் இங்கு பார்ப்போம்.

### (அ) புற்றுநோய்கள்:-


i. கருப்பைக்கழுத்துப் புற்றுநோய்(Cervical Carcinoma)

ii. கருப்பை 'அகவணிப் புற்றுநோய்(Endomatrial Carcinoma)

iii. சூலகப்புற்றுநோய்கள்' (Malignant disorders of the Ovary)

**(i) கருப்பைக் கழுத்துப் புற்று நோய்:-**

கருப்பைக் கழுத்தில் 2 வகையான புற்றுநோய்கள் ஏற்படுகின்றன.



கருப்பை அகவணிப் புற்றுநோய்.

*(அ) வெளிப்புற கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் (Ectocervical Carcinoma):-*

இங்கு யோனிமடல் மேற்பரப்பிற்கு அண்மித்த கருப்பைக் கழுத்து மேலணி இழையங்களில் புற்றுநோய் ஏற்படுகின்றது. இதன்போது பூப்போன்ற (Cauliflower like Growth) வளர்ச்சிகள் உருவாகின்றன. இவை யோனி வழியினை முற்றாக அடைக்கலாம். பொதுவாக புண்கள் கருப்பைக் கழுத்துப் பகுதியில் காணப்படும்.

*(ஆ) உட்புற கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் (Endocervical Carcinoma):-*

இங்கு கருப்பை உடலுக்கு அண்மித்த கருப்பைக் கழுத்து மேலணி இழையங்களில் புற்றுநோய் ஏற்படுகின்றது. சிலவேளைகளில் கருப்பைக்கழுத்து சுரப்புக்களிலும் இது ஏற்படலாம். இப்புற்றுநோயினால் கருப்பைக்கழுத்து பருமனடைந்து பீப்பாய் போன்ற ஒரு தோற்றத்தைக் காண்பிக்கும். சிலவேளைகளில் தொற்றுக்கும் உள்ளாகின்றது.

பொதுவாக ஏற்படும் இப்புற்று நோயினால் ஏனைய அங்கங்களுக்கு இது பரவ வாய்ப்புள்ளது.

*குணங்குறிகள்:-*

* ஒழுங்கற்ற இரத்தப்பெருக்கு. இது பொதுவாக உடலுறவு, சிறுநீர் வெளியேற்றல், மலங்கழித்தலின்போது ஏற்படும். ஆரம்பத்தில் இடைக்கிடை ஏற்படும் போதிலும் பின்னர் தொடர்ச்சியாகக் காணப்படும்.

* புண்கள் தோன்றும்.

* நோ காணப்படும்.

* சிலவேளைகளில் வெளிவளர்ச்சிகள் யோனிவழியை அடைகின்றன.

செ.லோகேந்திரராஜ்
லோ.ராஜுஜி
(யாழ். மருத்துவ பீட மாணவர்கள்)

**(ii) கருப்பை அகவணியில் ஏற்படும் புற்றுநோய் (Endometrial Carcinoma)**

இப்புற்று நோயானது 75 வீதமான பெண்களில் முற்றான மாதவிடாய் நிறுத்தத்தின் பின்(After Menopause) ஏற்படுகின்றது. இதன் உச்சத்தாக்கம் 61 வயதிலேயே ஏற்படும் என அறியப்பட்டுள்ளது. இருப்பினும் 20 வீதமான பெண்களில் மாதவிடாய் நிகழும் காலப்பகுதியிலும் ஏற்பட வாய்ப்புண்டு.

# பால் உறுப்பு நோய்கள்

இப்புற்றுநோய் ஏற்படுவதற்கு பின்வரும் காரணிகள் காரணமாக அமைகின்றன.

* அதிகரித்த உடற்பருமன்(Obesity)

* முற்றான மாதவிடாய் நிறுத்தம் தாமதமாக நிகழ்தல்( Late menopause)

* சூலகங்களில் கட்டி காணப்படல் (Oestrogen Secreting Ovarian Tumor)

* அதிகளவில் ஈஸ்ரஜன் உள்ளெடுத்தல். (கர்ப்பத்தடை மாத்திரைகள்)

*குணங்குறிகள்:-*

* முக்கியமானது, யோனிதுவாரத்தினூடு அதிகரித்த இரத்தப் பெருக்கு. இது ஆரம்பத்தில் குறைவாகவும் இடையிடையேயும் ஏற்பட்டு பின்னர் தொடர்ச்சியாகவும் நிகழும்; அதிகளவு இரத்தமும் வெளியேறும். இது இரத்தச் சோகையையும் ஏற்படுத்தலாம்.

* ஆரம்பத்தில் நோ ஏற்படாது பின்னர் ஏற்படும். இது நோயின் அதிகரித்த தாக்கத்தினைக் காட்டும்.

**(III) சூலகப் புற்று நோய்கள்**

இனப்பெருக்கத் தொகுதியில் ஏற்படும் புற்றுநோய்களினால் இறக்கும் பெண்களில் அதிகமானவர்கள் சூலகப் புற்றுநோயினாலேயே இறக்கின்றனர். துரதிர்ஷ்டவசமாக அரைவாசிக்கு மேற்பட்ட சூலகப்புற்று நோயாளரில், இப்புற்றுநோய் வளர்ச்சிகள் வயிற்றறை மென்சவ்விற்கு வெளியே வந்தபின்னரே குணங்குறிகள் தோன்ற ஆரம்பிக்கின்றன.

* நோ ஏற்படும். (முறுக்கமடைதலால், தொற்றுக்குள்ளாவதால், வீக்கமடைதலால், குருதிப் பெருக்கினால்)

* அடிக்கடி சிறுநீர் கழித்தல்.


* சலப்பையில் சிறுநீர் தேங்குதல்.

* இவற்றைவிட பசியின்மை, உடல்மெலிவு, உடற்சோர்வு என்பவையும் ஏற்படலாம்.

### (ஆ) சனன உறுப்புக் கட்டிகள்.

**(i) சூலகங்களில் ஏற் படும் கட்டிகள்**(Benign Tumors/Ovarian Cysts)

இக்கட்டிகள் அசையக் கூடியவையாகக் காணப்படும். இவை பொதுவாக ஏனைய பகுதிகளுடன் ஒட்டிக் கொண்டு காணப்படா. இவை அளவில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. பெரியதாக காணப்படும்போது இவற்றின் அசைவு மட்டுப்படுத்தப்படுகின்றது. இவற்றின் குணங்குறிகளும் பெரும்பாலும் சூலகப் புற்றுநோயை ஒத்ததாகவே காணப்படும்.



கருப்பைக் கட்டிகள் (Fibromyomata)

**(ii) கருப்பையில் கட்டி வளர்தல்**(Fibromyomata)

கருப்பையின் தசைப்பகுதியில் கட்டிகள் உருவாகி வளர்ச்சியடைகின்றன. இவை வெவ்வேறு அளவில் வேறுபட்ட இடங்களில் உருவாகின்றன.

இக்கட்டிகள் கருப்பையில் உருவாகும் பகுதிகள் படத்தில் காட்டப்பட்டுள்ளன.

(1)வயிற்றுக்குழி மென்சவ்விற்கு கீழானது (Sub Peritonial)

(2) கருப்பைத்தசைகளுக் கிடையில் ஏற்படல்(Intestitial)

(3) கருப்பை உட்புற அகவணியிற்கு கீழானது (Sub endometrial)

(4) கருப்பைக் குழியினூடு ஒரு நீளமான வளர்ச்சியாகக் காணப்படல்(Polypoidal)

இக்கட்டிகள் (Tumors) ஈஸ்ரஜன் (Oestrogen) எனும் ஓமோனின் தொழிற்பாட்டுடன் தொடர்புடையதாகக் கருதப்படுகின்றது. இது பொதுவாகப் பெண்களில் மாதவிடாய் தொழிற்பாடுகள் நிகழ்கின்ற காலப் பகுதியில் உருவாகின்ற போதிலும் இதன் குணங்குறிகள் 25 வயதிற்கு முன் அரிதாகவே வெளிக்காட்டப்படும். இது கர்ப்பந்தரிக்காத பெண்களில் (Nulliparoua Women) கூடுதலாக ஏற்படுகின்றது.

*குணங்குறிகள்:-*

இப்புற்றுநோய் நேரடியான குணங்குறியைக் காட்டுவது மிகவும் குறைவு. இருப்பினும் இதனால் இடுப்புக்குழியில், வயிற்றுக்குழியில் உள்ள உறுப்புக்கள் பாதிக்கப்பட்டு அதனால் குணங்குறிகள் ஏற்படலாம்.

* மாதவிடாயின் போது அதிக இரத்தப் பெருக்கு.

* கட்டிகள் தொற்றுக்குள்ளாவதால் நோ ஏற்படும்.

* சிறுநீர்த் தொகுதியுடன் தொடர்புடைய பிரச்சினைகள் (அடிக்கடி சிறுநீர் கழிதல், சிறுநீர்ப்பையில் சிறுநீர் தேங்குதல்)

* மாதவிடாய்க் காலத்திற்கு இடையேயான இரத்தப்பெருக்கு நோயினால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள்:-

(1) கருத்தரிக்கும் வாய்ப்புக் குறைகின்றது.(Infortility)

(2) கருச்சிதைவு

(3) பிரசவிப்பதில் ஏற்படும் பிரச்சினைகள்.

(4) இவை தொற்றுக்குள்ளாகி பாரிய பின்விளைவுக்களை ஏற்படுத்தும்.

ஆகவே இத்தகையவிளைவுகளிலிருந்து தடுப்பதற்கு ஆரம்பத்திலேயே சிகிச்சையளிக்கப்படல் நன்மை பயக்கும்.

(முற்றும்)

## போரிடம் இரு கேள்விகள்

திடீரென்று மீண்டும் திசைகதறப் போர்... தனது
அடிமுடியைக் காண
அனலெடுத்து ஆடிற்று.
அப்பாவிகளின் இரத்தம் தேர்ச்சில்லில் நெய்யாகத்
துப்பாக்கி.... துரைமார்போல்
சூளுரைக்கத் தொடங்கிற்று.
கந்தக நெடிலும், சாம்பல் புழுதியதும்,
அந்தரத்தால் இந்த
அயலினையே மூடிற்று.
வெந்த பிணங்கள், வெடித்த மதில், காயம்
பட்ட மரங்கூட
பயந்தே அடங்கிற்று.
பூமி அதிர்ச்சியெனப் புறப்பட்ட ஒலி... ஊரின்
சாமிகளுங்கூட
நடுநடுங்கத்தாக்கிற்று.
இரத, கஜ, துர பதாதைச் சேனைகளின் அணிவகுப்பு
இதயங்களின் துடிப்பை
மட்டும் பிடுங்கிற்று.
வனங்களின் மீது வட்டமிட்ட கழுகுப் போர்.... பின்
மனைகளுக்கும் புகுந்து,
மளமளவென்று... நாகரீக
நகர்களையும் தனது நாக்காற் சுவைத்து! ஆம்;
'அங்கெங்கெனாது'
'பகலிரவெனாது'
தங்கிற்றுப் போர்;
வாழ்வின் சரணடைதல் தொடங்கிற்று.

போரிடம் நான் கேட்கிறேன்;
புல்லாகிப் பூடாய்,
புழுவாய், மரமாகி,
பல்விருகமாகிப், பறைவையாய்ப் பாம்பாகி,
கல்லா மனிதராய் கவின்பெற்ற இயற்கையிடை
பிறந்தவன் தானே நீயும்....?
பேந்துனக்கேன் புவி வெறுப்பு?
அறிவிழந்து அன்பை அழிக்கமட்டும் ஏன் துடிப்பு?

போரின் பதிலையார்தான்
கேட்டு எனக்குரைப்பீர்?

- அருணான்

20

மழையும் சேறும் சகதியுமாகக் காட்டுத்தரை சிதம்பிக் கிடந்தது. முட்கள் தைக்க நடந்தும் ஓடியும் கரை காணாமல் களைத்து ஓய்ந்தாள் கரோல்.

குறுக்காக விழுந்து கிடந்த பெரு மரமொன்றின் மீது குந்திக் கொண்டாள். எவ்வளவு தூரம் கடந்திருப்பாள் என்பதுவும் நேரம் என்னவாகும் என்பதுவும் புரியவில்லை.

எதையோ துரத்திவந்த வேட்டை நாய்கள் இவளைக் கண்டதும் நின்று விட்டன. மீண்டும் அவை திரும்பிச் செல்லும் சுவடுகளைத் தொடர்ந்து நடந்தாள் அவள்.

அவளுக்கு வழிகாட்டுவனபோல அவை நெடுந்தூரம் வந்தன. குறுக்கிட்ட நீரோடை ஒன்றின் ஓரமாக வந்து சேர்ந்தன அந்த நாய்கள்.

கரோல் இனியும் தன்னால் ஏதும் இயலாது என்ற நிலையில் ஒரு மரத் தடியில் உறங்கப்போனாள். ஆழ்ந்த உறக்கம். எவ்வளவு நேரம் உறங்கினாள் என்பதும் விளங்கவில்லை.

கரோலும், பையனும், நாய்களுமாகக் குடியிருப்புக்களை நோக்கி நகரத் தொடங்கினர். இப்போது கரோல் சற்றுத் தெம்பாக இருந்தாள். நாய்களின்மீது அளவற்ற பாசத்தைப் பொழிந்தாள்.

நாய் ஒன்று பையனின் ஆணைக்குக் கட்டுப்படாது இவளிடம் கொண்டாடியது. அதனை அவன் ஆத்திரத்தால் அடித்தபோது அலறிக்கொண்டு ஓடியது. நாயின் பரிதாபத்தைப் பொறுக்கமாட்டாத கரோல் பையனை எட்டிப் பிடித்தாள்.

அவள் மனச்சமநிலை இழந்துவிட்டாள். உலோகங்கள் குலுங்கும் அவளது அபார சிரிப்பொலி அப்பிரதேசமெங்கும் ஒலித்தது.

பையனை ஒற்றைக்கையால் இழுத்து விழுத்தி அவன் வயிற்றில் ஏறி அமர்த்து கொண்டாள் கரோல். பையன் வீறிட்டு அலறிய அலறல் பயங்கரமாகப் பரவியது.

அவனது விழிகளை இவளது கூரிய நகங்கள் தோண்டி எடுத்துக் கொண்டன. உதிரமும் நீரும் பீறிட



கலங்கினான் டானியல்.

என்ன அருமையான உயிர்த் தோழி அவள் இப்படி உருமாறிக்

ருக்க வேண்டும்.

கரோலின் சரணாலய வாழ்க்கை இன்னும் பல மாதங்கள் தொடர வேண்டும். மனதில் இருக்கம் வடுக்கள் மெல்ல மெல்ல மறைய பல காலம் பிடிக்கலாம்.

தன்னைச் சிதைத்தவையோ அளவுக்குமீறிய சொத்துச் சுகங்களான வைரங்களும் தங்கமும் பணமும் வசதிகளும் மட்டுமல்ல - டானியல், எமிலி போன்றவர்களின் அளவுக்கு மீறிய அன்பும் தான் என அவள் நினைக்கிறாள்.

**மு.சிவநேசன்**

எதிலுமே அளவாக நிதானமாக ஊறிப் பழையவற்றை முற்றிலும் மறக்கத் துடிக்கும் மனநிலையில் டானியலின் அன்புக்கான ஏக்கம் எமிலியின் நட்புக்கான ஏக்கம் எல்லாம் அடிப்பட்டுப்போகட்டும் என அவள் எதிர்பார்க்கிறாள்.


அவளது பங்களாத் தோட்டத்தில் வெள்ளை ரோஜாச் செடிகள் செழிப்பு இழந்து, இலையுதிர்த்தி, பூக்கள் இன்றி வெறும் முட்களுடன் கொடூரமாகக் காட்சி தருகின்றன.

*(முற்றும்)*

# வெள்ளை ரோஜா முள்

விழித்துப்பார்த்தபோது இருட்டி விட்டது. வேட்டைநாய்கள் அங்கே நின்றிருந்தன. நீரோடையில் ஓடம் ஒன்று கரையில் கட்டப்பட்டிருந்தது.

அதில் வந்த நான்குபேர் சற்றுத் தொலைவில் ஏதோ பேரம் பேசிக் கொண்டார்கள். ஒருவன் வெண்ணிற




மான பவுடர் பைக்கெட்டுகளை எண்ணிக் கொண்டிருந்தான். அவை ஹெரோயின் போதைப் பொருள்கள் என அவள் அறிவாள்.

அவர்கள் மூட்டிய தீ இதமாக இருந்தது. அவளது காயங்களுக்கு ஏதோ இலைகளை அரைத்துக் கட்டி விட்டிருந்தார்கள். காயங்களின் எரியும் வலியும் தணிந்து இருந்தன.

இறைச்சியும் கிழங்குகளும் கொண்ட இதமான காட்டுச் சமையல் வாசனை மூக்கைத் துளைத்தது.

அவர்கள் அன்பாக அவளிடம் நீட்டிய சாப்பாட்டை இடதுகையால் வாங்கி வாங்கி உண்டாள். வலது கையால் ஏதும் செய்ய இயலவில்லை.

சற்று நேரம் கழிந்து அனைவரும் ஓடத்தில் ஏறிக்கொண்டனர். நாய்களையும் இவளையும் ஏற்றிக் கொண்டனர். அவர்களுள் ஒரு பன்னிரண்டு வயதுச் சிறுவன்கூட இருந்தான்.

ஓடம் புறப்படலாயிற்று. ஒருவன் முகப்பில் ஏறிநின்று இருளினூடே பார்வையைச் செலுத்திக் கண்காணித்துக் கொண்டிருந்தான். பல மில்லியன் டொலர் பெறுமதியான சரக்குகள் ஓடத்தில் இருப்பதாக இவள் உணர்ந்தாள்.

மறுநாள் பகல் முழுவதும் அடர்ந்த காட்டின் ஊடே நெளியும் அந்த நீரோடையில் மரங்களையும் கிளைகளையும் விலக்கிக்கொண்டு ஓடம் நகர்ந்தது. எவரும் இவளிடம் எதையும் கதைக்கவில்லை அவர்களின் உலகமே தனி.

இருள்வந்த பின்பும் நீண்டநேரம் பயணம் தொடர்ந்தது. தொலைவில் நகரமொன்றின் மின்னொளி மங்கலாகத் தெரிந்தது. நேரமோ நள்ளிரவை நெருங்கும் போது இவளையும், பைய... நாய்களையும் இறக்கிவிட்டு ... னம் தொடர்ந் ... இயந்திரத் ... க வைத்துக்

முயன்றவளை மடக்கிப் பொலீஸில் ஒப்படைத்தனர் அவர்கள்.

கரோலைக் கண்டுபிடித்துவிட்ட தெம்பு பொலீஸாரிடம். அன்று முழுவதும் பொலீஸ் சிறையில் வாடியவளை உடனடியாக மனநோய் வைத்திய சரணாலயத்துக்கு மாற்றும்படி உத்தரவு கிடைத்தது.

என்றோ தப்பி ஓடிவிட்ட சரணாலயத்துக்கு மயக்க ஊசி போடப்பட்ட நிலைமையில் எடுத்துவரப்பட்டாள் கரோல்.

அவளது உடலெங்கும் எரிகாயங்கள் தென்பட்டன. கால்கள் முன்னுத்தைத்து வீங்கிப்போயிருந்தன. நகங்கள் வளர்ந்து குரூரமாகத் தெரிந்தன.

நினைவு வந்ததும் அபார சக்தி கொண்டவளாக- சமாளிக்க முடியாத மனநிலை கொண்டவளாக - ஆவேசத்துடன் அவள் காணப்பட்டாள். எவரும் அவளை நெருங்க அஞ்சும் நிலைமையில் கைகளும் கால்களும் கட்டிலோடு கட்டப்பட்டு திமிறிச் கொண்டிருந்தாள் அவள்.

கரோல் அகப்பட்டது பற்றியும் அவளது நிலைமை பற்றியும் டானியலுக்கு அறிவிக்கப்பட்டது. மறுநாள் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டே இருந்தன.

டானியலும், எமிலியும், மோலரும் சரணாலயத்துக்கு வந்திருந்தனர். எவரையும் ஏறெடுத்துப் பார்க்கும் மனநிலையில் அவள் இருக்கவில்லை.

நீண்ட நேரம் இவர்கள் அங்கு தங்க வைத்தியர் அனுமதிக்கவில்லை. அவள் குணமடைய நீண்ட நாள்கள் எடுக்கும் பாதிப்புக்கள் கடுமையாக உள்ளன' என்றெல்லாம் வைத்தியர் தெரிவித்தார்.

எமிலியாலோ, டானியலாலோ கண்ட காட்சியை ஜீரணிக்க இயலவில்லை.

எவ்வளவு' அன்பைச் சொரிந்தவள் கரோல் இன்று அடையாளம் கண்டு பேசமுடியாத அளவுக்குப் பாதிக்கப்பட்டுவிட்டாளே எனக்

குணம்மாறிச் சிதையக் காரணம் மைத்தானே எனப் பொருமினாள் எமிலி.

மீட்ட பொருள்களை அடையாளம் காட்டவோ, சட்டப்படி உரிமை கோரவோ, இப்போதைக்குக் கரோலால் இயலாது. எனவே கேஸை முடிக்கவோ இழுபடப்போகிறது எனத் தவித்தான் மோலர்.

நாளாக நாளாக வைத்தியருடன் பேசத் தொடங்கினாள் கரோல். உடலெங்கும் ஏற்பட்ட காயங்கள்

## இறுதி அத்தியாயம்

மைக்கொடுத்தது எனவும் பதிலுக்குதான் மைக்கை முடித்து விட்டதாகவும் தெரிவித்தாள்.

அவள் நின்ற இடம், மைக்கைச் சந்தித்த இடம், கொலை நடந்த இடம், என்று எந்தத் தகவலையும் துல்லியமாக அவளால் தர இயலவில்லை.

மனநிலை குழம்பிய கரோல் கூறும் இச்செய்திகளை ஊர்ஜிதம் செய்யமுடியாத நிலையில் சந்தேகம் தெரிவித்து பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன

பொலீஸார் நெருங்கும் போது பாதிப்பு அதிகரித்ததால் வைத்தியர்கள் கரோலிடம் பொலீஸாரையோ பத்திரிகையாளர்களையோ பார்வையாளர்களையோ அனுமதிக்கவில்லை.

சுமார் ஆறு மாதங்கள் தேறிய பின் டானியலையும் எமிலியையும் சந்தித்து உரையாடும் மனநிலையை வைத்திய நிபுணர் கரோலிடம் வளர்த்திருந்தார்.

தனித்தனியேயும் கூட்டாகவும் டானியலும் எமிலியும் சரணாலயத்துக்கு வந்து கரோலைச் சந்தித்தனர்.

அவளிடம் பழைய உயிரோட்டமான நட்போ காதலோ இருக்கவில்லை. வெறும் பாவைபோல்வே அவள் செயற்பட்டாள். பாதிப்புக்கள் இன்னும் அவளை முழுமையான சுமுக நிலைக்கு திரும்பவிடவில்லை.

இந்த நிலைப்பாடு டானியலுக்கும் எமிலிக்கும் ஏன் மோலருக்கும் கூட ஏமாற்றமாகவே இருந்தது. இன்னும் நீண்டகாலம் இவர்கள் காத்தி

## "சிரம் நிமிரச் சிந்தை குளிருமே"

நோர்வேயின் முயற்சியால் நோகும் நெஞ்சங்களாலும்
தீர்வேதும் கண்டால் தீங்கெல்லாமகலுமென
ஆர்வமுற்ற மக்களின் ஆனந்தம் சிதறவாங்கே
நேர்மை குன்றியோர் நெடுந்துயர் பட்டனரே!

போர்க்கோலம் பூண்டோர் பேரணி சேர்ந்தோர்
சீர்மணித் திருநாட்டின் சிற்றறிவாளர்களோடு
பேர் பெற்ற பெருந்தகையர் தேரருமாவர் காண்
பார் தூற்றுமிவரை ஈற்றில் பாவமே பொசுக்கும்!

தாவிடும் மந்திகளாய் தரமிழந்து கெட்டுழலும்
காவிபுனைந்தோருள்ளமோ கபடுறை விஷமாம்
ஆவிபோயின் அனைவரும் பிண மென்றோதாப்
பாவிகள் ஊழ்பற்ற ஊன் பற்றி எரிவரே!

மதி நிறை மகான்கள் கூடி மயக்கு மொழியாம்
அதிகாரப் பரவலைப்பற்றி, அதிகமாய்ப் பிதற்றி
பொதியைப் பெட்டகத்துள் மூடி பேரினத்தின்
சதியைப் போற்றி சமாதிக்குச் சட்டம் வகுப்பரே!

விழியொன்றிழந்த பாவையும் விந்திய நடையன்
பழிக்கஞ்சாப் பாவியும் வினை பெருக்கி நிதம்
அழிக்கும் சாயை பாலனாய் அரசோச்சுவதால்
சுழியிடைக் கலமாய் சுழன்றலையுதே நாடு!

புத்ததேசத்தின் புண்ணியம் பேசும் சவக்குழிகள்
சத்தியச்சான்றுகளாவதால் சந்தோஷமீங்கில்லை
எத்தனை நாடுகள் எடுத்தோதினாலும் எத்தர்
பித்தம் தெளியார் பிற வினத்துக்கு ஈனமாமே!

பேடுமிணைந்து தொங்கும் பொய்யரும் ஒரு நாள்
கூடுகள் நாடும் குருவிகளாய் வீடுகள் தேடும்
வாடும் வீணே காத்திராது வருமுன் விரைந்தேகி
கேடுகள் நீங்க கேண்மையை நாடுதல் நன்றே!

அகிலம் புகழும் அழகான தேசமழிய விண்
முகிலும் சுடும் மூண்டெழு கற்புக் கனலும் சுடும்
காகித ஓடமாய் கரையும் கன்னியர் கண்ணீர்
துகிலுரியும் துச்சாதனர்களெரியச் சுடும்!

ஒழுக்கம் விழுப்பம் தருமென ஓதியுமுணரார்
புழுவாய் துடிக்கினும் பூவையரை, புருஷரை குதறுவார்
கழுகோ காட்டகத்தின் கொடு விலங்கோ ஈனர்க்கு
கழுவாயுமுண்டோ? கழுவிலேற்றலே நீதி நெறியாம்!

காலம் ஒரு நாள் கனியும் பேரலையுமோயும்
கலமும் கரை சேரும் கலக்கம் தீரும் வியந்து
ஞாலம் போற்றும் ஞாயிற்றின் ஒளிரும் கதிராலெங்கும்
சீலம் பெருகும் சிரம் நிமிரச் சிந்தை குளிருமே!

*- கந்த. தியாகராசா*

## குறள்வெள்ளம்

**அழுக்காறாமை... (பொறாமைப்படாமை)**

அடுத்த வீட்டைப் பார்த்து வாயையைப் பிளப்பவர்கள் தம் வீட்டில் இருக்கிற நிம்மதியையும் இனம் காணாமல் இழக்கிறார்கள். இவர்களுக்கு அடுத்தவரின் நிறைவுகள்தான் கண்ணுகுள் நிற்கிறதே தவிர குறைகளோ பிரச்சினைகளோ புலப்படுவதில்லை.

அடுத்தவர்கள் நிம்மதியாகவும் நிறைவாகவும் இருப்பதாக எண்ணிப் பொறாமைப்படுவது மடைமை. அவரவர் இடத்தில் இருந்து பார்த்தால் புரியும் அருமை. எனவே உள்ளதைக்கொண்டு திருப்திப்பட்டு ஒழுங்காக வாழப் பழகுவதே மேன்மை.

அதுதான் நிம்மதிக்கு வழியும் வாழ்கைக்கு முறையும் ஆகிறது. எனவே அடுத்தவர்களைப் பார்த்துப் பொறாமைப்படாத இயல்பைத் தன் ஒழுக்கமாகக் கொள்ளல் வேண்டும்.

*ஒழுக்காறாகக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து*
*அழுக்கா றிலாத இயல்பு.* - 0161

*- அம்பிகைபாகன்*

# இந்த வார இராசி பலன்

## 08-04-2000 இலிருந்து 14-04-2000 வரை

| | | | |
|---|---|---|---|
| புத வெ | சூ வியா செவ் சனி | சந் | |
| | இராசிச்சக்கரம் | | ராகு |
| கே | | | |
| | | | |

மாற்றம்:- கார்த்திகை - இடபம் இராசியில் நிற்கும்.

வடக்கிலும் தெற்கிலும் யுத்த பயம். மக்கள் இடப்பெயர்வு, அரசியல் நெருக்கடி எனவிட்டு விட்டுத் தோன்றும். உலகநாடுகளில் பேச்சுவார்த்தைகள், இலங்கையின் நெருக்கடி பற்றிய தளம்பல்நிலை தோன்றும். 02-05-2000 - 03-09-2000க்கும் இடையில் அரசியலில் ஒரு திருப்புமுனை தோன்ற முன்னோடியான அழுத்தநிலை உதயமாகும் காலமாகும். இந்தியா தெற்குநாட்டில் கூடிய கவனம் செலுத்தும்.

## ஜாதக சஞ்சீவி

மேற்கு நாடுகளின் கரிசனையால் பாரதம் அதிக தொழில்நுட்ப, பொருளாதார நன்மையை அடையும். ஆயினும் தன்நிலையில் மிகக் கவனமாக இருக்கும். கிழக்கு நாடுகளின் பொருளாதாரநிலை மாறும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

நாட்டிலும் சரி, வீட்டிலும் சரி சண்டை நடக்கும் இடத்திலிருந்து விலகி இருப்பது அவசியமாகும். அதனால் மனக்கலக்கம் அடையாது தொழில்ஸ்தானத்தில் மாற்றங்கள் செய்யத்திட்டமிடுவீர்கள். எதிரிகளாலும், கள்வர்களாலும் தொல்லைகள் ஏற்படலாம். சொந்தத்தில் ஏற்படும் மனக்கருத்து வேதனைதரும். சொத்தொன்றில் மனக்கவலை வட்டமிட்டபடி இருக்கும். எதிர்ப்பாலாருடன் கவனமாக இருப்பீர்கள். யோசனை அதிகம். உஷ்ணவியாதி, வயிறு, கண்வருத்தங்கள், கைகால் பிடிப்பு என்பன இருக்கும். செய்தித்துறை, ரீ.வி, ஹோட்டல்துறை, மின்சாரத்துறை, வைத்தியத்துறை போன்ற துறையினர்களுக்குப் பலமாற்றங்கள் ஏற்படும். காகித ஓடம் போல நிச்சயமற்ற மனோநிலையில் சிலர் இங்கும் அங்குமாக ஓடி ஓடித்திரிந்தபடி இருக்கப் பலாபலன்கள் காணப்படும்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள்.*

### இடபம்

கள்வர் வெள்ளம் போல் பெருக யுத்தம் ஒரு காரணமா எனச்சிந்திக்கின்றீர்களா? என்ன செய்வது? ஏன் இந்த அவதி எனச் சிந்திக்க எமக்கு முடிவதில்லை. தொழில் ஸ்தானத்திலும் மிகக் கவனமாக இருக்கவும். பொருள் இழப்புவரலாம். அரச அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். எதையும் எதிர்கொண்டு வெற்றி அடைவீர்கள். இடமாற்றங்களால் நன்மையுண்டு. வயிற்று நோ, அலைச்சலால் உடல்களைப்பு, கண்நோய், அடிக்கடி பயங்கரக் கனவு காண்பது போன்றநிலைகள் வரலாம். ஆலயவாசலுக்கு அடிக்கடி போய்வருவீர்கள். அல்லது ஆஸ்பத்திரிக்குச் சென்றுவரப்பலன் கொடுக்கும். நீதித்துறை, மருந்துத்துறை, குருத்துறை, சங்கீதம், ரீ.வி துறையினர்களுக்கு அதிகமாற்றங்கள் ஏற்படும். நல்லதைச் செய்யும் பொழுது எதிர்ப்புக்கள் வரச்செய்யும். எனவே உங்கள் புதியதிட்டங்களைத் தைரியத்துடன் செயற்படுத்தி வாருங்கள். வெற்றி அடைவீர்கள்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள்.*

### மிதுனம்

எத்தனையோ தவறுகள் நடக்கின்றன. நான் ஒரு சிறு தவறு விட்டால் அதை மன்னிக்கக்கூடாத எனக் கேட்கின்றீர்களா? தொழில் ஸ்தானத்தில் முன்யோசனையின்றி எவரையும் கேட்டுவிடாதீர்கள். அதனால் உங்கள் பலவீனங்களை மற்றவர்கள் புரிந்து கொள்வார்கள். தொழில் ஸ்தானத்தில் ஊக்கத்தைப் பொறுத்து பல மாற்றங்கள் நடக்கும். மேலதிகாரிகள் உதவுவார்கள். கறுப்புப்பொருள்களைத் தவறவிடச் சந்தர்ப்பம் ஏற்படலாம். வீட்டில் வைத்த பணத்தைக் காணாது கலக்கமுற்று, ஐயமுற்று, கலகங்கள் ஏற்படலாம். இசைத்துறை, ரீவித்துறை, ஹோட்டல்துறை, வாசனைப் பொருள்கள் விற்பனைத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள். தூரதேச யாத்திரைகளைத் தவிர்த்துக் கொள்வது நல்லது.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள்.*

### கடகம்

நாட்டிலும் கொந்தளிப்பு உங்கள் மனதிலும் கொந்தளிப்பு ஏற்பட்ட வண்ணம் இருக்கின்றதா? எல்லாம் மனதைப்பொறுத்த நிலைதான். தொழில் ஸ்தானத்தில் மனக்கொந்தளிப்பால் சிலரை ஏசிவிடுவீர்கள். அதனால் தேவையற்ற பிரச்சினைகள் உருவாக இடமுண்டு. உங்களுக்கும் சிலருக்குமிடையில் மனக்கருத்துக்கள் ஏற்படும். சகோதரங்களின் உதவிகள் கிடைக்கும். தந்தை வழியினரின் உதவிகள், அல்லது வரவுகள் இருக்கும். எதிர்ப்பாலாரது உதவிகள் கிடைக்கும். சிலருக்கு ஆடை அல்லது நகைகள் சேரும் பலன் உண்டு. சளி, வாய்வு அழுத்தம், பலவீனம், கைகால்நோ என்பன ஏற்பட இடமுண்டு. பிரயாணங்களைத் தவிர்க்கவும். இரும்புத்துறை, சாப்புச்சாமான்கள், மருந்து வியாபாரம், விவசாயம் குருத்தொழில் செய்பவர்களுக்கு மாற்றங்களும் அதிக இலாபங்களும் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:-திங்கள்,வியாழன்.*

### சிங்கம்

காற்று, சத்தம் எல்லாவற்றின் வேகத்தையும் விட மனத்தின் நினைப்பு வேகம் அபாரமானது. உங்கள் சிந்தனை முழுவதும் தொழில் ஸ்தானத்தில் இருக்கும். அதனால் உங்களின் திட்டமிட்ட புதிய செயற்பாட்டின் அணுகுமுறைகளினால் மாற்றங்கள் ஏற்பட இடம் உண்டு. ஆனால் இடமாற்றங்களையோ பிரயாணங்களையோ தவிர்த்துக்கொள்ளுங்கள். வட்டமிட்ட ஓர் இடத்திற்குள் அடிக்கடி சுற்றி வருவீர்கள். உங்கள் தனித்தன்மையை எவரும் அலட்சியம் செய்யமுடியாது. தொழில் ஸ்தானத்திலும் வீட்டிலும் எப்பொழுதும் புதிய திருத்தங்களை நடைமுறைப்படுத்தும் எண்ணம் இருந்தபடி இருக்கும். பித்தரோகம், வாய்வுத் தொல்லை உஷ்ணவருத்தங்கள் என்பன வரலாம் விவசாயத்துறை, ரீவி, சினிமாத்துறை, கொம்பியூட்டர்துறை ஆசிரியத்துறையினர் போன்ற துறையினர்களுக்கு மாற்றங்கள் ஏற்பட இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்:- சனி, வியாழன்.*

## மகாதேவா ஜோதிடம்

### கன்னி

மனிதர்களுக்கு சத்தங்களால் நிம்மதியில்லாதநிலை ஏற்படுவதே ஒரு வேதனைதான். தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் ஏற்பட இடமுண்டு. புதியதிட்டங்களால் மனப்போராட்டம் சிலருக்குக் கொடுக்கும். பணச் செலவுகள் அதிகரித்தபடி இருக்கும். சிலருக்கு பொருள் விடயமாக மனக்கலக்கத்தைக் கொடுக்க இடம்உண்டு.உடல் நிலையில் ஓய்வு முக்கியம். இடமாற்றங்களால் பொருள் இழப்புகள் ஏற்படும். சளி, நாரிப்பிடிப்பு, வாய்வுத் தொல்லை, சலவருத்தம் என்பன ஏற்பட்டு அடிக்கடி தொல்லைகள் கொடுக்கும். திட்டமிட்டு எதையும் உங்களால் செய்யமுடியாது. கொடுத்த வாக்குறுதிகளையும் நிறைவேற்ற முடியாமல் கலங்க இடம் உண்டு. செய்தித்துறை, நீதித்துறை, பாதுகாப்புத்துறை, விவசாயம், வியாபாரத்துறை, குருத்துறை போன்ற துறையினர்களுக்கு பலவித மாற்றங்கள் ஏற்படும். பிரயாணங்களை தவிர்க்கவும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி,வியாழன்*

### துலாம்

உங்களுக்கு யோசனைகள் அதிகம் வரும் காலமாகும். நிதானமாகச் செயற்படுங்கள். தொழில் ஸ்தானத்தில் மனக்கருத்துக்கள் ஏற்படலாம். கலகம் பிறந்து நியாயம் பிறக்கும். வீட்டில் கலகலப்பாக இருப்பீர்கள். அவசரப்படாது மெல்ல மெல்ல முடிவுகளை எடுத்துச் செயற்படுத்துங்கள். அரசஅதிகாரிகளுடன் முட்டிமோத வேண்டி வரலாம். வீடு, வாகனச் செலவுகளால் அடிக்கடி யோசனை வரலாம். தாயார் அல்லது தாய்வழியினருடன் கொஞ்சம் சூடாகத்தான் இருப்பீர்கள். பொறுமையாக இருக்கவும். சளி, உஷ்ணபீடைகள், நரம்புப்பலவீனம், கைகால் பிடிப்பு என்பன வந்து வருத்தலாம். இடமாற்றம், பிரயாணங்களைத் தவிர்க்கவும். ஹோட்டல் துறை, ரீவித்துறை, குருத்துறை, மருந்துத்துறை, நகைத்துறை, கொம்பியூட்டர், செய்தித்துறை போன்ற துறையினர்களுக்கும் முன்னேற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, வியாழன், ஞாயிறு.*

### விருச்சிகம்

சுயநலவாதி, சந்தர்ப்பவாதி, சமயவாதி எனப்பல வாதிகள் உங்கள் பக்கத்தில் வரும்காலமாகும்.தொழில் ஸ்தானத்தில் சமநீதியுடன் செயற்படவும். நீதிக்காக போராட வேண்டி வரலாம். வீட்டில் புதிய வசதிகள் வரும். புத்திரர்களுக்காகவோ அல்லது சகோதரங்களின் தேவைகளுக்காகவோ ஓடியாடித்திரிவீர்கள். தந்திரமான சிலரால் நெஞ்சு, மனம் பொறுக்க முடியாமல் வேதனைப்படும். நிலையை உணர்வீர்கள். அடுத்தவர் பொருளில் ஆசைப்படாதீர்கள். அதனால் அவதிப்படுவீர்கள். இடமாற்றம் அல்லது தூரதேசப் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் நெஞ்சுநோ, தலையிடி, அடிவயிற்றுநோ, வாய்வுத் தொல்லை என்பன அடிக்கடி வருத்தலாம். நிர்வாகத்துறை, மருந்துத்துறை, இரும்புத்துறை, உணவுத்துறை, சந்தை வியாபாரம் செய்பவர்களுக்கு மாற்றங்களும் இலாபங்களும் அதிகரிக்க இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்:- சனி, ஞாயிறு, வியாழன்.*

### தனுசு

நீங்கள் அதிகம் குற்றம் பார்க்காதீர்கள். அதனால் பலரின் வெறுப்புக்கு ஆளாக நேரிடலாம். தொழில் ஸ்தானத்தில் பதற்றநிலை, ஏட்டிக்குப் போட்டியான சம்பவங்கள் என்பன ஏற்பட இடம் உண்டு. இடமாற்றங்கள் தவிர்க்க முடியாததாக இருக்கும். இருப்பினும் எதையும் அலட்சியம் செய்யாது கலகலப்பாக இருப்பீர்கள். இடமாற்றம் சிலருக்குக் கொடுக்கும். புதிய செய்திகள் தூரதேசத்திலிருந்து வரலாம். பொருள்கள் களவு போக இடமுண்டு. கைகாலில் காயம் சிலருக்கு ஏற்படலாம். வயிற்றுநோ, வாய்வுத் தொல்லை, உஷ்ணபீடைகள் கொடுக்கும்.கைக்கெட்டியும் வாய்க்கு எட்டாதநிலை தோன்றும். வியாபாரத்துறை,விவசாயத்துறை, குருத்துறை, மருந்துத்துறை, பிரயாணத்துறை, கலைத்துறை போன்ற துறையினர்கள் அதிக மாற்றங்களையும், இலாபங்களையும் அடைவார்கள். தூரதேசம் போவதைத் தவிர்த்துக் கொள்ளவும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, ஞாயிறு, திங்கள், வியாழன்.*

### மகரம்

ஒருவரிடம் நியாயத்தைக் கேட்டுப்பார்ப்பது, நியாயம் கிடைக்கவில்லையாயின் யுக்தியைப் பிரயோகித்துப் பார்த்து அல்லது எப்படியாவது நியாயம், தர்மத்தை நிலைநாட்டுவது எனச் சிந்தித்தாலும் - சட்டம் தடை செய்யாமல் இராது என நாம் சிந்திக்க முடியாது. தொழில் ஸ்தானத்தில் விட்டுவிட்டுப் பதற்றநிலை இருக்கும் காலமாகும். கொடுத்துப் பறிப்பீர்களோ அல்லது பறித்துக் கொடுப்பீர்களோ என உங்கள் நிலையில் மனமாற்றம் ஏற்பட்டபடி இருக்கும் காலமாகும். சிலவேளை முரட்டுத்தனமான செயல்கள் இருக்கும். வீடு - காணி பூமிச் செலவுகள் அதிகரிக்கும். எதிர்ப்பாலாரின் எதிர்ப்புக்களால் அடிக்கடி மனம் பேதலித்தபடி இருப்பீர்கள். புத்திரர் அல்லது சகோதரங்களுக்காக ஓடியாடித் திரிவீர்கள். மற்றவர்களின் விஷயங்களில் தலையிடுவதைக் குறையுங்கள் அல்லது குறைகேட்பீர்கள். கைகால் சோர்வு, நரம்புத்தளர்ச்சி, முழங்கால் பிடிப்பு, வாய்வுசளி எனத் தொல்லை தரலாம். விவசாயத்துறை, நீதித்துறை, இரும்புவேலைகள், மருந்து வேலைகள் போன்றவற்றில் தொடர்பானவர்கள் அதிக நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள், வியாழன்.*

### கும்பம்

காலத்தால்சாதிக்க முடியாததை காதலால், அன்பால் சாதிக்க முடியாமல் போகாது. தொழில் ஸ்தானத்தில் எந்தப்பிரச்சினையையும் பொறுமையாகச் சமாளிப்பீர்கள். மற்றவர்களின் அசைவுகளைக் கொண்டே அவர்களின் மனோநிலையை அறியக்கூடிய வல்லமையுள்ள உங்களை எவரும் இலேசில் ஏமாற்ற முடியாது.

சந்தர்ப்பத்திற்கேற்ப பலவித செயற்பாடுகளைச் செய்து வருவீர்கள். அரசியலில், பொதுத் தொண்டுகளில் ஈடுபாடு இருந்தாலும், உங்களையும் நிறைவுபடுத்தாமல் இருக்கமாட்டீர்கள். தொழில் ஸ்தானத்தில் திடீர்வரவுகளும் ஏற்பட இடமுண்டு. நாரிநோ, நரம்புச்சோர்வு, வாய்வுத் தொல்லை, சளி, கைகால் பிடிப்பு, குறைபாட்டுத் தொல்லைகள் என்பன ஏற்படாமல் இருக்காது. படபடப்பு விட்டுவிட்டு இருக்கும். அரசியல் துறை, ஆசிரியத்துறை, ஆராய்ச்சித் துறைகள், இரசாயன வேலைகள், மருந்துத்துறை, கமிஷன்வேலைகள், விவசாயத்துறை போன்ற துறைகளில் தொடர்பானவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள், வியாழன்.*

### மீனம்

உருக்குலைந்த நாட்டைப் புதிப்பிக்கலாம். உருக்குலைந்த உடலை வைத்தியத்தால் ஓரளவு தேற்றலாம். ஆனால் நம்பிக்கை இழந்தமனத்தை திரும்பவும் அமைதிப்படுத்தவோ - உண்மை அன்பைச் செலுத்தவோ முடியாமல் போகலாம்.ஆனால் பாசம் இளையபிள்ளைக்கு அள்ளிக் கொடுக்கத் துடித்தபடி இருக்கும். கொடுப்பவன் மூத்தமகன், கெட்டுப் போகிறவன் இளையபிள்ளை ஆயினும் தாய் கொடுப்பதற்கு வைத்திருப்பது இளையபிள்ளைக்குதான். நியாய வரம்பிற்கு பாசவரம்பு விதிவிலக்கு: இந்தநிலை உங்களுக்கு வரலாம். தொழில் ஸ்தானத்தில் மணப்பயம் வரும். தொழிலில் போட்ட பணம் வீடு போய்ச் சேராதநிலை, வெந்தபானைச் சோற்றை சாப்பிட முடியாதநிலை,பதற்றம் உங்களுக்கு மட்டுமா? இந்த நாடே பதற்றப்பட்டபடிதான் இருக்கின்றது. நிதானமாக இருக்கவும். களைப்பு, நெஞ்சு படபடப்பு, நரம்புச்சோர்வு,மறதி, சீதோஷ்ணநிலையால் பீடைகள் என்பன வரலாம். வியாபாரத்துறை, கடல் துறை, பிரயாணத்துறை, விவசாயத் துறை, மருந்துத்துறைபோன்ற துறை தொடர்பானவர்கள் அதிக மாற்றங்களையும், இலாபங்களையும் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள், வியாழன்.*

---

## செய்!

இதயம் திறந்து இன்னிசை பாடு!
இனங்கள் எங்கணும் ஒன்றதாய்க் கூடு!
உதயம் என்பதை உள்ளத்துள் தேடு!
உண்மை அன்பினை இதயத்துள் நாடு!

காதலை வாழ்க்கையின் இலட்சியமாக்கு!
காண்பதில் கட்சியின் பிரிவினை போக்கு!
மோதலைத் தவிர்த்து மோகனமாக்கு!
மோட்சங்கள் தனைநீ இங்கேயே ஆக்கு!

சரித்திர வெளிகளில் சாந்தியை ஊற்று!
சந்தேகப் பிராணியை உடன் வெளியேற்று!
சிரித்திடும் மனதினைத் தரணியில் போற்று!
சிந்தித்துத் தெளிவுடன் செயல்களை யாற்று!

உறவுகள் எங்கணும் உண்மையைப் பேணு!
உயர்ச்சியில் உன்னத நிலைகளைப் பூணு!
இறப்பினும் சத்திய வாழ்வதைக் காணு!
இல்லையேல் உந்தனின் இதயத்துள் நாணு!

மதங்களின் கொள்கையுள் மனிதத்தைப் பாரு!
மனங்களில் உண்மையின் அன்பினைச் சேரு!
விதங்களாய் உந்தனைப் பிரிப்பவர் யாரு?
விடுதலை உணர்வுடன் விருட்சமாய் மாறு!

அரசியல் வாழ்க்கையை தொட்டாலே மாசு!
அங்கேயே அமிழ்ந்திடும் மனமதை ஏசு!
சிரசிலே மக்களின் மாண்பதைப் பூசு!
சீரற்ற எண்ணங்கள் தூரவே வீசு!

செல்வத்தைக் காட்டும் சொத்தந்தக் காசு!
சொர்க்கத்தைத் தரினும் எமக்கது தூசு!
நல்லதை நாடி நன்றதைப் பேசு!
இல்லதைப் புகழ்ந்திட மனம்அறக் கூசு!

- புதுமை -
ஈச்சமோட்டை

## கல்விக்கண் படைத்தவரே எழுக!

நாளையிந்த நாடும் நம்மினமும்
நலிவடையும் வாழ்வைப் போக்க
வேளைக்கே நாங்க ளனைவரும்
வேள்வி புதிதாய் தொடங்க வேண்டும்
ஏழைப் பிள்ளைக்கு என்றும்
எழுத்தறிவித்து வாழ்விக்க வேண்டும்
“கோழைப் பயலே” யென்றவனை
குட்டி ஒதுக்காமல் காத்து
பாலப் பருவமே யென்று ஏற்று
பயனுள்ள மனிதனாயவனை ஆக்கி
காலத்தின் கைகளில் கொடுக்க
கல்விக் கண் படைத்தவரே எழுக!

- எம். பி. அருளானந்தன் -

குறுங்காவியம்



## பசிப் பிணி மருத்துவன்

-புலவர் ம.பார்வதிநாதசிவம்-

அங்கம்:- நான்கு

என்றந்தப் புலவன் உரைசெய்தே சென்றான்
சிலநாள்கள் ஏகிய பின் உள்ளம் எல்லாம்
நன்றிருக்கும் அருள் விழியாள் பண்ணன் வீடு
நண்ணினாள் நல்வரவேற்ப வட்குச் செய்தே
"என்று மெழில் வீசுகின்ற முல்லையூர்க்கே
ஏந்திழையே நின் தொண்டு வேண்டு" மென்றான்
"நன்றிந்தப் பணிபுரிவேன்" என்றே பின்னும்
நல்லுளஞ்சேர் அருள்விழியாள் கூறலானாள்!

'போரென்னப் பொலிகின்ற தோள்கள்பெற்றும்
புகழ்ஒன்றே விளைக்கின்ற வாழ்வு பெற்றும்
பாரெங்கும் தமிழ்மொழியைப் பரப்புகின்ற
பணியினிலே கூறரிய சிறப்பும் பெற்றும்
நேரின்றி விளங்குகின்ற பண்ணனே! நின்
நேர்மைக்கு வணக்கங்கள்! தமிழர்தங்கள்
பேரிருளை நீக்கியே ஒளிசேர்க்கின்ற
பெருஞ்சுடரே! நீ வாழ்க! நீடுவாழ்க!

ஒழுக்கத்தால் நற்குணத்தால் உயர்ந்தாய் என்றும்
உயர்தமிழைத் தெய்வமாய்த் தொழுவாய் என்றும்
பழுத்த தமிழ்ப் புலமையினால் சிறந்தாய் என்றும்
பழுதில் தமிழ்நலம் காக்கப் பிறந்தாய் என்றும்
வழுத்துகின்றார் புலவர் எல்லாம் நீ செய்கின்ற
வளமான பணிசிறக்க வாழ்த்துகின்றேன்!
இழுக்கறியா நெறியினிலே மக்கள் வாழ
இயன்றபணி ஆற்றிடுவேன்' என்றும் சொன்னாள்!

'தமிழ்மொழியின் பெருமையினை உலகத் தோர்கள்
தாமறியத் தொண்டெல்லாம் ஆற்றுகின்ற
அமிழ்த்தனைய குணக்குன்றே! நின்தன் தொண்டால்
அருந்தமிழின் கலாசாரம் தூய்மை எல்லாம்
இமயமதில் இட்டதொரு தீபமாக
எல்லோர்க்கும் ஒளிநல்கக் காணுகின்றோம்!
தமிழறிந்த வள்ளல்களுள் பெரியோன் ஆகும்
தகுதியெல்லாம் நின்சொத்தே' என்றும் சொன்னாள்.

'துறவியே தங்களது வருகை நன்று!
தூய எங்கள் முல்லையூர் மக்கள் எல்லாம்
நிறைவாய கல்விநலம் வாய்க்கப் பெற்றும்
நிலையான பண்பெல்லாம் வாழ்விற் பெற்றும்
அறிவாலும் குணத்தாலும் அன்பினாலும்
அவனியிலே சிறந்திட்டார் என்றதான
செறிவான வார்த்தையினை நான் கேட்டற்குச்
செவ்விய தொண்டினை வேண்டுகின்றேன்' என்றான்

இளந்துறவி இவ்வாறு பண்ணன் கூற
இனிதுவந்தே முல்லையூர்த் தன்னைச் சேர்ந்தாள்!
வளமிகுந்த குடிசைஒன்றை அமைத்தே அங்கு
அருள்விழி தான் வசிப்பதற்கு வசதி செய்தார்.
உளம் நிறைந்த மனத்தினராய் இருந்த அந்த
ஊரவரெல்லோரையுமே அழைத்தே ஓர் நாள்
பழம்கனியும் இன்குரலில் அவரை நோக்கிப்
பகர்ந்திட்டாள் துறவி அருள் விழியாள்தானே!

'பண்ணன் எனும் பெருவள்ளல் கல்விநல்கப்
பண்புடனே எனை உம்பால் அனுப்பி வைத்தான்!
கண்ணனைய கல்வியை நீர் பெறுதல் வேண்டும்!
கற்பதெல்லாம் ஏன் எனவும் அறிதல் வேண்டும்!
எண்ணரிய நூல் கற்றும் கற்ற கல்வி
இணையவில்லை வாழ்வில் என்றாற் பயனும் உண்டோ?
பெண்களும் தான் ஆண்களும் தான் கற்றல் வேண்டும்
பேசுமுயர் கல்வி வழி நிற்றல் வேண்டும்!

கற்றதனால் ஆயபயன் இறைவன் பாதம்
காலமெல்லாம் தொழுதிடுதல்! தொழும் போதேநாம்
மற்றிறைவன் நோக்கத்தை அறிதல் வேண்டும்
மனதார அவன் நெறியில் வாழ்தல் வேண்டும்!
பற்றதனால் பிறஉயிரை நோக்க வேண்டும்!
பாரிலவை நன்மைபெற உழைத்தல் வேண்டும்.
குற்றமிலா உயர்வாழ்வு வாழ்தல் வேண்டும்.
குவலயத்தே அறிவு பெற்றோர் செயல் வேறுண்டோ?

காடாக இருந்த இடம் தனைத் திருத்திக்
களனிகளும் சோலைகளும் ஆகும்வண்ணம்
நாடாகச் சிறப்பதற்கு நன்மை செய்த
நல்லுளத்தோன் பண்ணனே என்றும் பற்றுக்
கோடாக இருக்கின்றான் என்ற ஒன்றே
குவலயத்தே தனிப் பெருமை உமக்குச் சேர்க்கும்.
வாடாத மலர் போலக் கிராமம் என்றும்
வளமாகத் திகழ வுங்கள் உழைப்பே வேண்டும்.

நாடாக இருந்தாலும் நலங்கள் மேவாக
காடாக இருந்தாலும் உயர்ந்த தான
மேடாக இருந்தாலும் பள்ளமாக
மேதினியில் இருந்தாலும் உயர்வே எல்லாம்
பீடான ஆடவரால் என்றே அவ்வை
பாடியதைப் பெருமையுடன் மனத்திற் கொள்வீர்.
ஏடேயும் பண்பெல்லாம் சிறக்கும் வண்ணம்
இவ்வுலகில் இனிதாக வாழ்ந்தும் கொள்வீர்.'


(தொடரும்)

# விலங்குகளும் பூச்சிகளும் நுணுக்குக்...

*இங்கு சில நுணுக்குக்காட்டிக்குரிய படங்கள் தரப்பட்டுள்ளன. இன்னும் வரும். இவை அங்கிகளின் அல்லது அங்கிகளின் பகுதிகளின் படங்கள். பல மடங்கு பெரிதாக்கப்பட்டவை. இவற்றை இனங்காண முயன்று பாருங்கள். படங்களின் கீழுள்ள அடிக்குறிப்புக்கள் இனங்காண உதவலாம். சிலவற்றை இனங்காண்பது சுலபம். சில ஓரளவு கடினமானவை. சில மிகக் கடினமானவை. முயன்றுதான் பாருங்களேன். பின்னர் கட்டுரையைப் படித்து உங்கள் அனுமானங்களைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள். மாணவர்களுக்குத் தாங்கள் உயிரியலறிவைப் பிரயோகிப்பதற்கு இது நல்லதொரு வாய்ப்பு. ஒவ்வொரு படத்திற்கும் பத்துப் புள்ளிகள் என்ற ரீதியில் கணக் குப் போடுங்கள். எண்பதுக்கு மேல் எடுத்தால் மிக நல்லது. அறுபதுக்கு மேல் எடுத்தால் நல்லது.* *Wish you all the best of luck.*



துள்ளித்திரிகின்ற காலத்தில் இதன் துடுக்கு அடக்குவது யாரோ?



'தன்னாவில் ஒரு விரலைத்தாண்ட அறியாது, சாகரமும் மலைபலவும் தாண்டி அலைகின்றார், என்னே இம்மனிதர் மதிஎன நகைத்து முனிவன் இனிய கந்தமுதலனைந் தம் இனம் வகுத்தங்கிருந்தான்'



பூனையாரின் சீப்பு. பல்லொழுங்கு அனாதி.

### 1. நாய்த்தெள்ளு (DOG FLEA)


உடலுக்குப் பாதுகாப்பாக உள்ள வன்மையான தட்டுக்கள் அல்லது கவசங்கள் துலக்கமாகத் தெரிகின்றன. கூரான துதிக்கையும் தெரிகின்றது. நாயின் தோலைத் துளைத்துக் குருதியை உறுஞ்ச இது உதவும். பின் சோடிக் கால்கள் பெரியவை. துள்ளுவதற்கு (தெள்ளுவதற்கு) உதவும். ஏனைய சோடிக்கால்கள் நாயின் உரோமத்தையோ தோலையோ பற்ற உதவும். நாய் உடலைச் சிலிர்த்து உதறுவதனால் தெள்ளைக் கழற்றமுடியாது. சொறிந்தோ, மரங்களில் உரசியோ, மண்ணில் புரண்டோ, குளித்தோ (வாய்ப்புக் கிடைத்தால் நாய் தானாகவே குளிக்கும்) தெள்ளைக் கழற்ற முயற்சிக்கும். தெள்ளுகள் பறப்பதில்லை. துள்ளித் திரிந்தே வாழ்க்கையை நடத்தும். இது குருதியைக் குடிக்கும் ஓர் ஒட்டுண்ணி. நாய்ப் பிரியர்களின் குருதியையும் தெள்ளு சுவைத்துப் பார்ப்பதுண்டு. தெள்ளு சாதாரணமாகக் குதிக்கும் போது தன்னுயரத்தைக் காட்டிலும் எண்பது மடங்கு அதிக தூரத்தைத் தாண்டும். இது ஒப்பீட்டளவில் இரண்டு மீற்றர் உயரமுள்ள ஒரு மனிதன் நின்று தாண்டுவதன் மூலம் 160 (நூற்றியறுபது) மீற்றர்கள் தூரத்தைத் தாண்டுவதைக் குறிக்கும். கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறவேண்டிய சாதனை. (தெள்ளைக் குறிப்பிடுகின்றேன்)

### 2. நாக்கிலுள்ள சுவையரும்புகள்(TASTE BUDS)

இந்த விலங்கின் சுவையரும்புகள் ஒரு நெடிய தவாளிப்பின் இரு மருங்கிலும் வரிசையாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு சுவையரும்பிலும் பல கலங்கள் உண்டு. இவை இரசாயனப் பொருள்களுக்கு உணர்ச்சியுள்ளவை. நாக்குத் தசைகளினால் ஆனது. நாக்கை நீட்டுவதற்கும், உள்ளிழுப்பதற்கும், மடிப்பதற்கும், சுருட்டுவதற்கும் தசைகள் உண்டு. நாக்கில் பரவலாக சுவையரும்புகள் உண்டு. உப்பு, புளிப்பு, இனிப்பு, கசப்பு போன்ற சுவைகளை உணர இவை உதவும். குறிப்பிட்ட சுவைக்குரிய அரும்புகள் நாக்கின் குறிப்பிட்ட இடங்களில் காணப்படும். உதாரணமாக மனிதனில், நாக்கின் நுனிப் பகுதி இனிப்பையும், உப்பையும் உணர உதவும். விளிம்புப் பகுதி புளிப்பையும், அடிப்பகுதி கசப்பையும் உணர உதவும்.

### 3. சடைமுளைகள் (VILLI)

சுண்டெலியின் சிறுகுடலில் உள்ள மடிப்புக்களையும் சடைமுளைகளையும் படம் தெளிவாகக் காட்டுகின்றது. சிறுகுடலில் அகத்துறிஞ்சலுக்குரிய மேற்பரப்பைப் பலமடங்கு அதிகரிக்க இவை உதவும். சடை முளைகளின் மேல் ஒட்டிக் கொண்டிருக்கும் பொருள் அகத்துறிஞ்சப்படாத கழிவு. ஒரு பூரண வளர்ச்சியடைந்த மனிதனின் சிறுகுடல் 7முதல் 7.5 மீற்றர் நீளமுள்ளதாகவும், பெருங்குடல் 1.5 மீற்றர் நீளமுள்ளதாகவும் இருக்கும். சடை முளைகள் சிறுகுடலின் மேற்பரப்பை மேலும் பன்மடங்கு அதிகரிக்க உதவும்.



'சிக்னல்' பல்லழகா, அல்லது பாதுகாப்பிற்குரிய கவசக்கோர்வையா?

### 4. பூனையின் நாக்கிலு... கொழுக்கி கொண்ட சிம்... (HOOKED PAPILLAE...

வளர்ப்புப் பூனை நக்கும்போது... நாக்கு முரடான (ROUGH) உணர்... வதற்கு இவையே காரணம். பூனை தன்... நக்கும்போது சீப்புக் கொண்டு இழுத்து... போல மயிர்களை வாரிவிட இவை... மேற்படி சிம்பிகள் பூனையின் நாக்கின்... தியில் இருக்கும். பூனை பால் குடிக்... நுனி நாக்கை மடித்து ஆழமில்லாத... ரத்தை ஏற்படுத்திப் பின் நாக்கை வி... உள்ளும் வெளியும் அசைத்து பாலை... அள்ளி)க் குடிக்கும். பூனைகளில் நாக்... குழியில் இணைக்கப்பட்ட அமைவிட... போடும் சத்தத்தை நிர்ணயிக்கும். இ...

## அங்கிகள் பலவித... ஒவ்வொன்றும் ஒருவி...

படையில்தான் வீட்டுப் பூனைகள் த... சத்தத்தை (PURRING) இடும். ஆன... சிப்பதில்லை (ROARING); ஆனால்... கர்ச்சிக்கும்: பூனைகளைப்போலச் ச... தில்லை.

### 5.கம்பளிமயிர் (wool fib...

செம்மறி ஆடுகளிலும் மற்றும் சி... குகளிலும் கம்பளி மயிருமுண்டு. செ... டில் இரண்டு வகையான மயிர்க... தோலை அண்டியுள்ள மெல்லிய ... யான உரேமமும் இவற்றின் மேல்... நெடிய உரோமமும். தடித்த உரோம... லிருந்து பாதுகாப்புக் கொடுக்கும். இ... யான மயிர்களும் செதிற்போர்வை கெ... சாதாரண மயிர்களில் செதில்கள் த... னவை. றோஜா இதழ்கள் போல... யொன்று மேவியிருக்கும். கம்பளி... செதில்கள் கூரானவை. ஒரு தே... அமைப்பை தோற்றுவிக்கும். இவற்றை... நூற்க முடியும். சாதாரணத் துணிகளை... லும் கம்பளி அதிக அளவில் வெப்ப... தாங்க உதவும்.

### 6.மலைப்பாம்பின் செதில்வரிசை (ஒரு ப...

பாம்புகளின் உடல் கொம்புபொ... லான செதில்களினால் பாதுகாக்கப்... கும். செதில்கள் ஒன்றையொன்று மே... ஓட்டொழுங்கில் அடுக்கப்பட்டிருக்கும்... கள் பார்ப்பதற்கு பாகியல்புள்ளவை (... போலக் காட்சியளித்தாலும், அவற்றின்... கள் உண்மையில் உலர்ந்தவையே... களின் செதில்கள் பாதுகாப்பு கொடு... சில இனப்பாம்புகளில் ... சாலை... இடப்பெயர்ச்சிக்கும் உதவும்; மரங்க... வும் உதவும்.

### 7.உடும்பின் செவிப்பற... மென்சவ்வு (TYMPANIC MEMBRAN...

நகருயிரிகளுக்குசெவிச்சோணை (P...



கூம்புகளும் கோபுரங்களும் சடை... கின்றன.

# ...ணுக்குக்காட்டியின் கீழ்

...ரிக்க உதவும்.

### ... பூனையின் நாக்கிலுள்ள ...ாழுக்கி கொண்ட சிம்பிகள் (HOOKED PAPILLAE)

...ளர்ப்புப் பூனை நக்கும்போது அதன் ... முரடான (ROUGH) உணர்வைத் தரு...த இவையே காரணம். பூனை தன்உடலை ...ம்போது சீப்புக் கொண்டு இழுத்துவிடுவது ... மயிர்களை வாரிவிட இவை உதவும். ...டி சிம்பிகள் பூனையின் நாக்கின் நடுப்பகு... இருக்கும். பூனை பால் குடிக்கும்போத... நாக்கை மடித்து ஆழமில்லாத பாத்தி... ஏற்படுத்திப் பின் நாக்கை விரைவாக ...நும் வெளியும் அசைத்து பாலை (அள்ளி...)க் குடிக்கும். பூனைகளில் நாக்கு வாய்க்...ல் இணைக்கப்பட்ட அமைவிடம் அசை...ம் சத்தத்தை நிர்ணயிக்கும். இந்த அடிப்...

## ...ங்கிகள் பலவிதம் ...வ்வொன்றும் ஒருவிதம்

...பில்தான் வீட்டுப் பூனைகள் தமக்குரிய ...தை (PURRING) இடும். ஆனால் கர்ச்...ில்லை (ROARING); ஆனால் புலிகள் ...க்கும்: பூனைகளைப்போலச் சத்தமிடுவ...ல.

### ...கம்பளிமயிர் (wool fibre)

...ம்மறி ஆடுகளிலும் மற்றும் சில விலங்...லும் கம்பளி மயிருமுண்டு. செம்மறியாட்... இரண்டு வகையான மயிர்களுண்டு. ...ல அண்டியுள்ள மெல்லிய மென்மை... உரோமமும் இவற்றின் மேல் தடித்த ... உரோமமும். தடித்த உரோமம் குளிரி...து பாதுகாப்புக் கொடுக்கும். இருவகை ...மயிர்களும் செதிற்போர்வை கொண்டவை. ...ண மயிர்களில் செதில்கள் தட்டையா... றோஜா இதழ்கள் போல ஒன்றை...று மேவியிருக்கும். கம்பளி மயிரில் ...ல்கள் கூரானவை. ஒரு தேன்கூட்டு ...பை தோற்றுவிக்கும். இவற்றை நூலாக ... முடியும். சாதாரணத் துணிகளைக்காட்டி...ம்பளி அதிக அளவில் வெப்பத்தைத் ... உதவும்.

### 6.மலைப்பாம்பின் ...தில்வரிசை (ஒரு பகுதி)

...ம்புகளின் உடல் கொம்புப்பொருளினா... செதில்களினால் பாதுகாக்கப்பட்டிருக்... செதில்கள் ஒன்றையொன்று மேவியதாக ...ாழுங்கில் அடுக்கப்பட்டிருக்கும். பாம்பு ...ார்ப்பதற்கு பாகியல்புள்ளவை (SLIMY) ... காட்சியளித்தாலும், அவற்றின் செதில் ...உண்மையில் உலர்ந்தவையே. பாம்பு ... செதில்கள் பாதுகாப்பு கொடுப்பதுடன், ...னப்பாம்புகளில் (...+ம்- சாரை,நாகம்) ...பயர்ச்சிக்கும் உதவும்: மரங்களில் ஏற ...தவும்

### ... உடும்பின் செவிப்பறை மென்சவ்வு (...YMPANIC MEMBRANE)

...ருயிரிகளுக்குசெவிச்சோணை (PINNA); இல்லை. வெளிச் செவிக்கால்வாய் செவிப்பறை மென்சவ்வில் முடிவடையும். வெளிச்செவிக்கால் வாயின் துவாரம் தலையின் இருபுறங்களிலும் தெரியும். ஒலிஅலைகள் செவிப்பறை மென்சவ்வில் ஏற்படுத்தும் அதிர்வுகள் கிரகிக்கப்பட்டு, கேட்டல் உணர்வு நடைபெறும்.

### 8. பறக்கும் பறவையின் இறகின் ஒரு பகுதி

பறக்கும் பறவைகளின் (FLYING BIRDS) இறகிலுள்ள இடைப்பூட்டுப்பொறிமுறைக்குரிய ஒழுங்கு படத்தில் துலக்கமாகத் தெரிகின்றது. பெரிய சட்டங்கள் போலிருப்பவை இறக்கை மேற்றண்டிலிருந்து (RACHIS) தோன்றும் பிரதான கிளைகள் ஆகிய இறகிழை (BARBS)கள் ஆகும். இவற்றில், முன் பின்னாக, இறகுச் சிற்றிழைகள் (BARBULES) என்ற கிளைகள் உண்டு. ஒரு பக்கத்தில் உள்ள சிற்றிழைகளில் கொழுக்கிகளும் மறு பக்கத்தில் உள்ளவற்றில் குழிகளும் இருக்கும். கொழுக்கிகள் குழிகளில் பதிவதனால் இடைப்பூட்டு ஏற்படுத்தப்படும். ஓர் இறகை எடுத்து பிரித்த பின் விரல்களுக்கிடையே வைத்துத் தடவும்போது இடைப்பூட்டு ஏற்பட்டுக்கொள்ளும். பறந்து வந்த பறவை எங்காவது அமர்ந்து கொண்டு தனது அலகால் இறகுகளை கோதுவது குலைந்த இடைப்பூட்டுக்களைச் சீர்செய்யவே.


### 9.நாயின் மயிரில் சொடுகு (DANDRUFF CLINGING TO A DOG'S HAIR)

சொடுகுப் பிரச்சினை நாய்களுக்கும் உண்டு. மேற்படி படம் வீட்டுத்தூசியிலிருந்து பெறப்பட்டது. பல பாலூட்டிகளைப் போன்று நாய்களின் உடலிலும் இரண்டு வகையான மயிர்கள் உண்டு. நெடிய ஓரளவு கரடுமுரடான (COARSE) மயிர்கள் கீழேயுள்ள மென்மையான குறுகிய மயிர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும். இம்மயிர்கள் வளியை அடக்கிவைத்திருப்பதனால் நாய்க்கு வெப்பத்தைக் கொடுக்கும். எமக்கு ஆண்டு முழுவதும் மயிர்கொட்டுப்படும். மற்றும் சில விலங்குகளுக்கும் இதே நிலைப்பாடுதான். ஆனால் வெப்பமான கோடைகாலங்களும் குளிரான மாரிகலங்களும் உள்ள இடங்களில் வாழும் விலங்குகள் கேடைகாலங்களில் ஒரே தடவையில் மயிர்களையும் கொட்டும்; பின் மாரி காலங்களில் ஒரேதடவையில் மயிர்கள் முளைக்கும். (SUMMER COAT AND WINTER COAT). இங்ஙனம் காலநிலைகளுக்கு ஏற்ப அவற்றின் போர்வை அமையும்.


### 10. வெளவாலின் உரோமம் (BAT HAIR)

எம்மைப்போல் வெளவால்களின் உடலும் உரோமப் போர்வை கொண்டது. உரோமம் கெரற்றின் (KERATIN) என்ற பொருளினால் ஆனது. தோலிலுள்ள மயிர்ப்புடைப்புக்களில் இருந்து வளரும் உரோமத்தையும் தோலையும் மிருதுவாக வைத்திருப்பதற்கு புடைப்புக்களில் நெய்ச் சுரப்பிகளும் உண்டு. நெய்ச்சுரப்பிகள் போதியளவு செயற்படாமல் போனால் தோலில் வெடிப்புக்கள் ஏற்படும். மயிர்கள் உடையும்.


குகன்




...புகளும் கோபுரங்களும் சடைத்திருக்...




தென்னங்கீற்றுச் சோலையா? 'சிறகு' அரிந்த ஓலையா?




செவிப்புலனுடன் தொடர்புடையது. அலங்காரப் 'பறை' மேளமா?



அலிஸ்பாண்டுகளா? அல்லது அலங்கோலத்தின் வெளிப்பாடுகளா?



தூண்போலச் செதுக்கப்பட்டிருந்தாலும் இதன் ஒதுக்கு குளிரைத் தாங்க உதவும்.



மணிச் சங்கிலிகளா அல்லது மயிரிழையில் கோர்த்த முத்து மாலைகளா?

## கண்ணுக்குள் நிலவு

நிலவே உந்தன் முகம் பார்த்து
நீண்ட நாட்கள் ஆச்சுதடி - வெண்
மலரே உந்தன் நினைவெழுந்து - என்
இதயம் தொலைந்து போச்சுதடி
வானவீதியில் நீ புரிந்த
லீலைகள் என்னை வாட்டுதடி
கானக வாழ்வைப் போலவே - என்
வாழ்வும் இப்போ கசக்குதடி

சொல்லிலே வடிக்க முடியாத - என்
கலைந்து போன ஆசைகளை
கல்லிலே செதுக்க முடியாத - என்
நினைவில் சிதைந்த சிற்பங்களை
எப்படி உணர்த்தி - நானுனக்கு
நிலைமைப் புரியவைப்பேனோ
இப்படித்தான் என்னுள்ளம் - தினமும்
இருட்டுள் வாழுதடி!

காரிருளில் கடைவிழி காட்டி
வானகத்தில் ஒளிர்ந்த காரிகையே
- இன்பப்
பூரிப்பில் நீ மிதந்து - வெண்
பூக்களிடையே நீந்துதல் போல்
பாரினிலே பாய்விரித்து - நான்
இன்பமுடன் தூங்கிடவே
நேரினிலே நீ வந்து துன்பத்தைக்
கலைத்தொரு செய்தி தருவாயோ?

உள்ளத்து உணர்வுகளை - தினமும்
உருக்கி உயிர் பிழிந்து
குள்ளமாய் இருந்து கள்ளமாயன்று -
என்
நெஞ்சைக் களவாடி
மௌனமாய் உந்தன் முகம் திருப்பி -
உதடு
பிரியா நகை பூத்து - என்
கருத்தில் நிறைந்து சென்றவளே - என்
கண்ணுக்குள் நிலவாய் வாராயோ?

- எம். சுயர்சன் -
கோண்டாவில்

## பிள்ளைடவு

அழுக்கு விழுந்த காற்சட்டை
அருவருக்கும் மேற்சட்டை
குளித்துப் பலநாள் ஆயிருக்கும்
குள்ளக் குணமும் சேர்ந்திருக்கும்
கிழித்து மடிந்த புத்தகமும்
கிழட்டுக் கதையும் கூடவரும்
கழிவு எனப்பலர் பேசிடுமோர்
கடும் போக்குடைய மாணவனாம்

வீட்டு வேலை செய்வதில்லை
விளக்கம் ஏதும் புரிவதில்லை
சாட்டுச் சொல்லி தப்பிவிடும்
சாமர் தியமும் கொண்டவனாம்
ஊட்டி ஏதும் பயனில்லை
உதவாக் கரையாம் அவனுக்கு
போட்டுப் பிடிச்சும் உயர்வில்லை
மோட்டுச் சீவப்பிறப்புக்கு

அவன்மேல் இரக்கம் கொண்டவொரு
ஆசான் அவனை ஆராய்ந்தார்
கவனிப்பார் உனை யாரென்று
கருணை கூர்ந்து விசாரித்தார்

அப்பா அன்றன் றுழைத்திட்டு
அடிப்பார் தண்ணி 'கிபீர்' எல்லாம்
அப்பப்பாடா அவருக்கு
அக்கறை அதிலே தான் கூட
தப்பாமல் வரும் சினிமாக்கள்
தாராளம் எம் கிராமத்தில்
சுப்பஸ்ரார்கள் படமெல்லாம்
சுவையாய் அம்மா பார்த்திடுவா
அப்பா, அம்மா இப்படியே
அசண்டைப் போக்காய் செல்லுகையில்
அப்ப என்னை யார்தான் 'சேர்'
அரவணைத்து வழி காட்ட?

இவனைப் போல எத்தனையோ
இளமைப்பருவம் கைவிட்டு
கவனிப்பாரும் எவரின்றி
காலம் யாவும் இருளாகி
அவஸ்தைப் பட்டு அல்லலுற
அழிவுப் பாதை தனைக்காட்டும்
விவஸ்தையற்ற பெற்றோரே
விளங்கி வளர்ப்பீர் பிள்ளைகளை.

- மானியூர் ரட்ணேஸ் -

# ஒரு ரூபாய்

அப்பாவைப் பாக்க பாவமா கிடந்தது. அம்மா நல்லாதான் பேசிப் போட்டா. அதுவும் காலங் காத்தால. நான் கூட நித்திரையால எழும்பேல்ல. அம்மா போட்ட சத்தத்தைக் கேட்டுத்தான் முழிச்சனான். நித்திரையால முழிச்ச உடன ஒண்டும் தெரியேல்ல. கண்ணைக் கசக்கிப் போட்டு பாத்தா அப்பா வழமையான இடத்தில் குந்திக் கொண்ட இருப்பது தெரிந்தது. அம்மா சின்னப்பாப்பாவை (நான் வைத்த பெயர்தான் சின்னப் பாப்பா) மடியில் வைச்சுக் கொண்டு அப்பாவைப் பாத்து ஏசிக் கொண்டு இருந்தா.

அப்பா எந்தவித சலனமும் இல்லாமல் மௌனமாக இருந்தார்.

"காலங்காத்தால சனியன் பிடிச்ச பீடி இல்லாமல் உங்களுக்கு ஒரு வேலையும் செய்யேலாது போல. எழும்பின உடன வாயில பத்தவைச்சுப் போடவேணும். அதுக்குப் பிறகு தான் மற்ற வேலை. எங்க பழகினீங்களோ இந்தப் பழக்கத்தை? இண்டைக்கு என்ன செய்யிறதெண்டு நான் மண்டையைப் போட்டு உடைச்சுக் கொண்டு நிக்கிறன். இப்ப அவருக்கு பீடிக்கு ஒரு ரூபா வேணுமாம். ச்சா... பிள்ளைகளைப் பெத்தும் தலைக்க ஒரு யோசனையுமில்லை."

கடிபட்ட நாய்மாதிரி அம்மா விட்டுவிட்டுத் தொடர்ந்தாள். இன்னமும் நான் எழும்பாவிட்டால் எனக்கும் கடி நடக்கும். உடன எழும்பி விட்டன். அக்கா, அண்ணை கிணத்தடியில முகம் கழுவிக் கொண்டு நிக்க வீட்டுக்கார மாமியும் மாமாவும் எங்கட கூத்தைப் பார்த்துக் கொண்டு நிக்கினம். அவையளோட நாங்கள் பழகத் தொடங்கியது...

காரைநகரில சண்டை தொடங்கி எல்லாத்தையும் விட்டிட்டு ஓடிவந்து இருக்கிறத்துக்கு வீடுதேடி அம்மாவும் அப்பாவும் நாயா அலைஞ்சு திரிஞ்சினம். எங்கட பரிதாப நிலையைப் பாத்து வீடுதர ஓமெண்டு சொன்னவை எங்களை 'இன்னாக்கள்' என அறிந்து வீடு தர மாட்டம் எண்டு சொல்லிப் போட்டினம்.

"நீங்கள் என்ன டோபி ஆக்களோ?" அவையின்ர கேள்வி.

கடைசி நேரத்தில தொல்புரத்தில இருந்த மாமியும் மாமாவும் தான் வீடு குடுத்தினம். பத்துப்பரப்பு காணிக்குள் மாமி, அம்மா - அப்பாவோடு பிறந்து வளர்ந்தவீடு. தென்னை மரங்களுக்கு மத்தியில எங்கட வீடு நல்லாகவே குளிர்ச்சியாயிருந்தது. அம்மாவும் அப்பாவும் நாங்கள் செய்த புண்ணியம்தான் இந்த வீடு கிடைச்சதெண்டு அடிக்கடி சொல்லுவினம். அந்த நேரத்தில அவையள் செய்த உதவியை நாங்கள் மறக்க முடியாது.

மாமி நல்லா கதைப்பா. சிரிச்சு சிரிச்சு கதைப்பா. ஒருத்தரையும் வித்தியாசம் பாக்கமாட்டா. அடிக்கடி ஒண்டை மாத்திரம் சொல்லிக் கொண்டு இருப்பார்.

"உங்களை எங்கடவீட்டில இருத்தினதைப் பாத்து எங்கட ஆக்கள் ஒரு மாதிரியாத்தான் பாக்கினம். நாளைக்கு நாங்களும் உங்களை மாதிரி எங்க போய் இருக்கப் போறமோ தெரியாது"

இங்க வந்து கொஞ்ச நாள்களுக்குள் மாமா, மாமி, அவையளின்ர குழந்தை நல்லாக ஒட்டிவிட்டோம். நாங்கள் பள்ளிக்கூடம் போவது ஒழுங்கில்லாமல் இருந்தது. பகலும் பின்னேரமும் எங்கள் பொழுது மாமி வீட்டிலேயே கழியும். வீடு முழுவதும் பழைய கால போட்டோக்கள் நிறைஞ்சு கிடந்தது. மாமியின் அப்பா அப்ப பெரிய உத்தியோகத்தில இருந்தவராம். பெரிய தலைப்பாகையோட பெரிய மீசை வைச்சுக்கொண்டு முன்வாசலுக்கு மேலே இருந்த படத்தைக் காட்டி மாமி "இதுதான் எங்கட அப்பா" எண்டு சொன்னது நல்ல ஞாபகம்.

நான் சின்னப்பாப்பாவை தூக்கிக் கொண்டு மாமி வீட்டை போய்விடுவேன். நான் அங்கு போகச் சுணங்கினால் "ராணியக்கா வாங்கோவன் எனச் சொல்லிக் கொண்டு மாமியின் குழந்தை என்னைத் தேடி ஓடி வந்திடும். மாமி சாப்பாடு நேரத்தில எனக்கும் சின்னப்பாவுக்கும் சாப்பாடு தருவா. நான் வேண்டாம் வேண்டாம் எண்டு சொன்னாலும் அவ விடமாட்டா. பாப்பாவும் மாமியைக் கண்டவுடன் ஏதோ ஒண்டு கேக்கும். வீட்டில அம்மாட்டை சொல்லப் பேச்சுத்தான் விழுந்தது.

"அவையள் சாப்பிடுகிற நேரத்தில கரைச்சல் குடுக்காமல் வீட்டை வந்திடுங்கோ"

அம்மா அதட்டலுடன் சொன்னா. நானும் சாப்பிடுகிற நேரத்தில நழுவிக் கொண்டு வந்தா மாமி தேடிக் கொண்டு வந்திடுவா. எனக்கும் பாப்பாவுக்கும் காலமையும் பின்நேரமும் தேத்தண்ணி கிடைக்கும். மாமியின் குழந்தை விதம் விதமான விளையாட்டுச் சாமான்கள் வைத்திருக்கும். பொம்மை, கார், பஸ், ரயில்...எனக் கனக்க இருக்கும். எங்களுக்கு விளையாட்டுக்கு குறைவில்லை.

நான் பாப்பாவை முகம் கழுவி சட்டைபோட்டு தூக்கி வைச்சுக் கொண்டேன். அப்பா இப்பவும் அப்படியே இருந்தார். அப்பா பாவம். வேலை இருக்கோ இல்லையோ வெளியால எங்கயும் 'சும்மா' சுத்தப் போகமாட்டார். அயல் வீடுகளிலிருந்து தோச்ச உடுப்புகள் வந்தால் மினுக்கிக்குடுப்பார். அதில கொஞ்சம் காசு வந்தது.

பாவம் மாமிதான் அந்த அயன் பெட்டியை வாங்கிக் கொடுத்தவ. எப்பாவது வெளியால போட்டு வரக்க அப்பா அருமையா ரொபி வாங்கிக் கொண்டு வந்து தருவார். நான் உடனே கடிச்சுத்தின்ன மாட்டன். வாய்க்குள்ள போட்டு உமிஞ்சு கொண்டு இருப்பன். ரொபி முடிய கனநேரம் செல்லும். எனக்கு ரொபி எண்டால் சரியான விருப்பம்.

ரொபி போத்தல் மூடியின்மேல் இருக்கும். எனக்கு ஒண்டும் சொல்ல முடியாமல் தொண்டை அடைக்கும். அப்பாவுக்கு விழும் பேச்சு ஞாபகத்துக்கு வரும்.

அப்பா இப்ப உடுப்பு மினுக்கத் தொடங்கிவிட்டார். முகத்தில் சந்தோசமில்லை. வழமையா அப்பா அயன்பண்ணேக்க பீடி வாயில இருக்கும். இடைக்கிடை பீடியை எடுத்துப் புகையை விட்டு உற்சாகமாக அயன்பண்ணிக்கொண்டு இருப்பார்.

பாவம் அப்பா. இனி எப்ப எங்களுக்கு ரொபி வாங்கி தருவாரோ தெரியாது. நான், பாப்பா, மாமியின் குழந்தை மூவரும் முத்தத்தில் விளையாடிக் கொண்டிருந்தோம். மாமி அவசரமாய் கூப்பிட்டா.

"ராணி கெதியா ஓடிப்போய் ஒரு றாத்தல் பாண் வாங்கிக்கொண்டு வாங்கோ."

மாமி கையில் பையுடன் விரல்களுக்கிடையில் நீட்டிய பத்து ரூபா தாளுடன் நின்றா. நான் பாப்பாவை இடுப்பில் தூக்கி வைத்தபடி பையையும் காசினையும் வாங்கிக் கொண்டு வெளிக்கிட மாமி சொன்னா.

"பாண் வாங்கி மிச்சக்காசுக்கு ரொபி வாங்கிச் சாப்பிடு"

எனக்கு உடம்பு பூரா சுருசுரு




ஆனால் அது லேசில கிடைக்காது. பள்ளிக்கூடம் போகிற பிள்ளைகள் எல்லாம் புத்தகக்கடையில பென்சில், ரேசர், கொப்பியெண்டு வாங்கிப் போட்டு மிச்சக்காசுக்கு ரொபி வாங்கி வாயில போட்டுக் கொண்டு போறதை நான் பாத்திருக்கிறன். அவையள் ரொபியின் உறையெடுத்து வாயில போடேக்க எனக்கு எச்சில் ஊறும்.

மாமிவீட்டுக்கு பக்கத்தில இருக்கிற ஆனந்தி மாமா கடைக்குப் போற வேலை எனக்கு நெடுக வரும். அம்மாவோ, மாமியோ சாமான் இல்லாட்டி என்னைத்தான் உடன அனுப்புவினம். எனக்குக் கடைக்குப் போறதெண்டால் சரியான விருப்பம். பாப்பாவுக்கும் என்னோட கடைக்கு வாறதில சரியான விருப்பம்தான். அழுது கொண்டு இருந்தாலும் நான் கடைக்குப் போறனெண்டு சொன்னா உடனே துள்ளிக்கொண்டு வந்திடுவா.

ஆனந்தி மாமா கடையில ஒவ்வொரு போத்தலிலும் வரிசையாய் ரொபிபோட்டு வைச்சிருப்பார். ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான கலர். மஞ்சள், பச்சை, நீலம், சிவப்பு.. பாக்கப் பாக்க ஆசையாயிருக்கும். பாப்பாவும் கையைக் காட்டி ஏதோ சொல்லும். சாமான்களை வாங்கி மிச்சக்காசு ஒரு ரூபாயோ, இரண்டு ரூபாயோ வந்தால் ஆனந்தி மாமா வழமை போல் கேப்பார்.

"என்ன குமரி மிச்சக் காசுக்கு ரொபி தாறதோ". மாமாவின்கை

வென ஏதோ செய்தது. மிச்சக் காசுக்கு ரொபி வாங்கிச் சாப்பிடட்டாம். ஆனந்தி மாமா கடையில் வரிசையாக இருந்த ரொபி போத்தல்கள் கண்களில் பிரகாசமாய் நிழலாடின. எந்தப் போத்தல் ரொபியை வாங்கிறது? நிலத்தில் கால்வைக்காமல் பாப்பாவை இறுக அணைப்படி ஒரு துள்ளலுடன் கடைக்கு ஓடினேன். பாப்பா ஏதோ நினைப்புடன் என்னைப் பார்த்துச் சிரித்தது.

"அவன்ர சிரிப்பபைப் பார். உமக்கு ரொபிகிடையாது" கடையை அடைந்து பாண்வாங்கி மிச்சக்காசை எடுக்கும் போது வழமைபோல் ஆனந்தி மாமா கேட்டார்.

"என்ன குமரி மிச்சக்காசு ஒரு ரூபாக்கு ரொபி தரட்டே?"

..........................................

மாமாவின் கை ரொபி போத்தல் மூடியை கழற்றுவதும் மூடுவது மாக இருந்தது.

**சி.கதிரகாமநாதன்**
தொல்புரம்

"என்ன யோசனை? ரொபி தரட்டே?

மனதில் திடீரென ஒரு வெளிச்சம்.

"ஆனந்தி மாமா ஒரு ரூபாக்கு அப்பாக்கு பீடி தாங்கோ"

மனதில் அப்பாவை நினைக்க சந்தோசமாய் இருந்தது.

(யாவும் சிந்தனை)

# கொல்லேறு கொண்டான்!

''அந்தணர் அருமறை திருமணங்களை எட்டென்று எடுத்தியம்பும். அவை, 'அறநிலை, ஒப்பே, பொருள்கோள், தெய்வம், யாழோர் கூட்டம், அரும்பொருள் வினையே, இராக்கதம் பேய் நிலை.......'' எனவரும் நூற்பாவான் அறியப்படும். அறநிலை முதலியவற்றை, பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்றும் கூறுவர்.

அசுரம் என்பது, 'கொல்லேறு கொண்டான் இவளை எய்தும்,' 'வில்லேற்றினான் இவளை எய்தும்' என விதித்து, அவற்றை நிறைவேற்றியோர்க்கு மகட்கொடை செய்வதாகும். இடைக் குலத்து இளைஞர் கொழுத்துத் திரண்ட, கூர்ங்கொம்பு கொண்ட எருதினை மடக்கிப் பிடித்து ஊர்ந்து தாம் விழைந்த மகளிரை மாலையிட்டு மகிழ்வர்.

தேன்கூடு

இந்நிகழ்ச்சியை முல்லைக்கலியுள் காண முடிகின்றது. காடுங்காடு சார்ந்த நிலமும் முல்லை எனப்படும். அந்நிலத்து மக்கள், ஆயர் இடையர், பொதுவர், கோவலர் என்றெல்லாம் அழைக்கப்படுவர்.

முல்லை நிலத்தே, வரகு, கம்பு, பால், நெய் முதலியன நிரம்ப நிரம்பக் கிடைக்கும். மேட்டு நிலத்தை உழுது பயிரிடல், ஆடு மாடு மேய்த்தல், பால், மோர், தயிர் விற்றல் முதலிய தொழில்கள் புரிவர். ஆய்ச்சியர் கொல்லேறு தழுவிய கொழுநரை மணம் புரிந்து மகிழ்வர். (கொல் ஏறு – கொலைத் தொழில் வல்ல எருது, தழுவுதல் – அதனை மடக்கி ஏறி ஊர்தல்). முல்லைக் கலிதந்த சோழன் நல்லுருத்திரனார் பாடலொன்றில் இருந்து கொல்லேறு தழுவும் காட்சியைக் காண்போம். (முல்லைக்கலி 3)

பொதுவர் கன்னி ஒருத்தி, காதல் கொண்டவன் கடுக வந்து மணம் கண்டிலன் எனக் கலங்குகின்றாள். தோழி ஊரில் நடந்த ஏறு தழுவுதல் காட்சியைக் காட்டிவிட்டு, ஆயர்கள் குரவைக் கூத்தாடுகின்றனர். அது காண வந்திருக்கும் காதலனுக்கு அறிவு வரும்படி செய்ய நாமும் அக்கூத்தில் கலந்து பாடுவோம்; வருகுதி என்கின்றாள். (குரவை – எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைகோத்தாடும் கூத்து; விநோதக் கூத்து ஆறினுள் ஒன்று)

இனி விடயத்துக்கு வருவோம். ஆயர் மகளிர் அனைவரும் புறப்படுகின்றார்கள். கொன்றை, காயா, வெட்சி, பாடவு, குருந்து, காந்தள் என்றென்று இன்ன பண்மலர்கள் கொண்டு தொடுத்த கண்ணிகளைச் சூடி இருக்கின்றார்கள். முல்லை அரும்பன்ன பற்கள் பளிச்சிடுகின்றன. சொற்களில் நாணம் பயில்கின்றது. கண்களில் அருள்பிலிற்றுகின்றது. எல்லோரும் களத்தின் புறத்தே உள்ள பரண்களில் அமர்ந்து கொள்கின்றார்கள்.

கொல்லேறு தழுவுற்களத்தில் காளைகள் கட்டவிழ்க்கப்பட்டுத் திரிகின்றன. வெண்காற் காவி; புள்ளி வெள்ளை; அணி கோட்டுச் சேய் வலிய ஏறு.... இவ்வாறு பல எருதுகள் திரிகின்றன. அவ்விடம் சிங்கமும் குதிரையும் களிறும் முதலையும் கலந்து போரிடும் மலைச்சாரல் போன்று காட்சியளிக்கின்றது.

அங்கு ஆயர்குலச் சிறுவர்கள் நிற்கின்றார்கள். அவர்களைத் தேடித்தேடிச் சென்று காளைகள் குத்துகின்றன. எருதுகளின் இரத்தம் தோய்ந்த கொம்புகளில், கணிச்சிப் படைக் கடவுள் – சிவன் – சூடிய இளம்பிறையில் மாலை போலக் குடர்கள் கிடக்கின்றன. பரணில் வீற்றிருக்கும் ஆயர் குல மகளிர் இடையே உரையாடல் தொடர்கின்றது. இளைஞர்கள் எருதுகளை அடக்கத் தொடங்கி விட்டார்கள்.

'தோழி, இதோ இவனைப்பார்; காளையின் கழுத்தில் பாய்ந்து அதற்குச் சூட்டிய மாலைபோலத் தழுவிக் கொண்டு விடாமல் பிடித்திருக்கும் இவன் ஆயர்மகன்தானே!'

'மேலும் பார் ஒருவன் காளைமேல் அமர்ந்து ஆடி மகிழ்ந்து நீர்த்துறையில் தெப்பத்தில் அமர்ந்து அதைச் செலுத்திச் செல்பவன்போல எருதை விடாமல் ஊர்ந்து செல்கிறானே. இவன் ஆயர் மகன்தானே?'

'பார் பார்! காற்றுப்போலக் கடுகி வந்த கரிய எருதை அதன் ஆற்றல் கெட அதனைத் தழுவிக்கொண்டு அமர்ந்து தோன்றும் இவனைப் பார். காலனைக் காலால் செற்ற சிவனார் போலத் தோன்றுகின்றான். ஐயோ! என் நெஞ்சு நடுங்குகின்றதே!' மேலும் இவ்வாறு பலப்பல சொல்லி ஏங்குகின்றாள்.

தொடர்கிறது......

புலியும் யானையும் போரிட்டாங்கு எருதுகளும் எருது நிகர் பொதுவர்களும் போரிட்டு ஓய்ந்தனர். தாந்தாம் தழுவிய ஏறுகளைக் கைக்கொண்டு ஆயர்கள் வெளியேறினர். காட்சி நிறைந்தது.

**சிந்திப்போம்**
**செயற்படுவோம்**

ஆயர்குல ஆடவரும் மகளிரும் மன்றில் குரவையாடி மகிழத் தொடங்கினர்; பாடுகின்றனர்.

நாமும் பாடுவோம்.

..........................................

கொல்ஏற்றுக் கோடஞ்சுவானை, மறுமையும்
புல்லாளே ஆய மகள்.
அஞ்சார் கொலையேறு; கொள்பவர் அல்லதை
நெஞ்சிலார் தோய்தற் கரிய உயிர்துறந்து
நைவாரா? ஆய மகன் தோள்
வளிஅறியா, உயிர் காவல் கொண்டு
நரிவாலைப் மருப்பஞ்சும் நெஞ்சினார், தோய்தற்கு
எளியவோ ஆயமகள் தோள்.
விலைவேண்டார் எம்மினத் தாயர் மகளிர்
கொஏற்றுக் கோடிடைத் தாம் வீழ்வார் மார்பின்
முலையிடைப் போலப் புகின்.

(புல்லுதல் – தழுவுதல்; கோடு – கொம்பு; நைதல் – வருந்துதல்; மருப்பு – கொம்பு; விலை – பரியப் பொருள்; வீழ்தல் – விரும்புதல்)

கொல்லேற்றினை கொம்புக்கு அஞ்சுவோனை, ஆயர்மகள் மணந்து கொள்ளார்; கொல்லேற்றை அடக்கிக்கொள்பவரல்லது, உள்ளத்தில் உரம் இல்லாதவர்க்கு ஆயர்மகள் தோள் அணைதல் இயலாதாம். உயிரைக் காற்று என்று கருதாது, கேவலம் அரிய பொருள் என்று எண்ணி கொல்லேற்றின் கொம்புகாண அஞ்சுவார்க்கு ஆயர் மகள் தோளைத் தழுவுதல் எளிது அன்று! எருதின் கொம்பிடையே புகுந்து பாய வல்லவர் இடத்தில் ஆயர்கள் பெண்வீட்டாரிடம் பரிசுப் பொருள் கூடக் கேக்க மாட்டாரா என்றெல்லாம் அவர்களின் மறக்கும் மாண்பினை குரவையுட் கூறி மகிழ்ந்தனர்.

நிறைவில் தெய்வத்தைப் பரவி – வழிபட்டு – மண்ணாளும் மன்னனை வாழ்த்தி நிறைவு செய்தனர்.

தொடரும்.

– சிகண்டியார்

# உங்கள் கவிதைகள்

நான்,
ஒருபோதும் சிற்பி அல்லன்.
ஆனால்...
தற்போது நான் தப்பிக்க
சிறைக்குள் ஒரு சிற்பியானேன்.
மௌனமாய் செதுக்குகின்றேன்
சிறைச்சுவரில் ஒரு துவாரம்!

- த. சிவா -
அல்வாய்

'சிற்பத்தைச் செதுக்குதற்காய்
சிதறிவிட்ட சொந்தங்களே!
மறவாது ஒரு நாளும் - நாளை
மலர்ந்திடும் தேசம்'

- சேது -
அரியாலை

ஏ, கலைஞனே!
உளி பற்றும்
உந்தன் கரங்கள்
ஊழிக் காலத்திலும்
உழைக்க வேண்டும்!
ஏனெனில்
போரின் சிதைவுகள்
சிற்பத்தில் மட்டுமல்ல
மனிதர்களிலுமே!


- எஸ். தீபன் -
அச்சுவேலி.

சித்திரமாய்ச்
சிலை வடித்துப்
பத்திரமாய்ப்
பார்த்திருந்தேன்
சித்திரமே
எனை மறந்து
பாதியிலே
பறந்ததுமேன்?

பிரசன்னா
- கந்தர்மடம் -

சிற்பமாக...
சமாதானமே - உனை
செதுக்குகிறேன் - என்
உளிபட்ட கல்லெல்லாம்
உடைந்து போகிறதே!
என்ன செய்வேன்?

- முத்துமாரி -




# மௌன மொழி

ஓங்கியடித்து
உடைப்போம்! பின்
ஒட்டுவோம்
சமாதானத்துக்கான
யுத்தத்தின்
தாற்பரியமிதுதானோ?

- பண்ணாக நாரதன் -

உளி கொண்டு செதுக்க
உருவாகவில்லை நாம்.
உருவாகியதை இங்கு
உடைக்கத்தான் எமக்கு
உத்தரவுண்டு! ஏனெனில்
நாம் உழைக்க வேண்டும்!

- ந. சிறீதரன் -
கிளிநொச்சி

ஐயோ...!
என் தேகத்தில்
எத்தனை ஓட்டைகள்?
இனப்பிளவு போட்ட
முதல் ஓட்டையோடு
சல்லடையாகி - குருதி
சீறி, வடிந்து, வற்றிப்போய்
வடிவான உடல்போல
விறைத்துக் கிடக்கிறேன்.

- பராங்கதன் -

சிலை வடிக்க விலை பேசி
கலை வளர்க்கும் சிற்றுளியல்ல!
கொண்ட பகையை முடிக்க
கோட்டையைத் தகர்த்து...
சுதந்திரச்சுவாசம் தேடும்
பேருளி...!

- மாருதி -

சாதி, சமயம் என்று - நாளும்
தடுமாறி நிற்கும் மானிடனே...
சமூக வழக்கொழிந்து - நீயும்
புதுயுகம் படைத்திடவே
தீட்டு ஆயுதத்தை - நல்ல
காலம் நெருங்குது!

- நிசங்கன் -
சுண்டுக்குளி

மனிதா!
நீ செதுக்குவது சிற்பமா? அல்லது
உடைப்பது விலங்கா?
தேசப்படத்தில் தேடினாலும்
காணமுடியாத சிறிய நாட்டில்
எவ்வளவு தான் துன்பங்கள்...

செதுக்கு செதுக்கு
தொடர்ந்து செதுக்கு
நான் ஓர் அகதி என்று!

- புன்னையூர் தயாபரன் -

இளைஞனே!
உவமையில்லா ஆற்றல்கள்
உன் உளி கொண்ட
கரத்திற்கு...
காலத்தின் கட்டாயத்தில்
இங்கு - நீ
செதுக்க வேண்டியது
சிலைகளையல்ல
எமது விடுதலைக்காய் - ஒரு
புதிய மைல்கல்லை!!!

- அ. குருதாஸ் -
குருநகர்

அடி!
நன்றாக அடி!
அடக்குமுறையின் இருள்சூழ்ந்த
இரும்புக் கோட்டைகள்
பொடிபட அடி!
நீ அடிக்கும் ஒவ்வொரு அடியும்
விடியலின் பாதையில்
ஒவ்வொரு படி!
அதனால்
நன்றாக ஓங்கி அடி!
உருவாக்கு அல்லது
உடைத்து நாசமாக்கு!
(Make or Break)

- யாழ். வதிரிவாசன் -

இறுக்கப்படுவது ஆணியல்ல
இனவாதம் – அதனால்
மறுக்கப்பட்டது எம்
எதிர்காலம்!
நொறுக்கப்படுவது சுவரல்ல
நெஞ்சம் – அதனால்
குறுகிப் போனது எம்
நிகழ்காலம்!

- தமிழ்த்தாடி -
ஈச்சமோட்டை.

ஓ...சிற்பியே...!
நீ செதுக்கிட முயலும்
சுந்தர உருவைக் காண
மௌனமாய்க் காத்திருப்போரோ...
மானத் தமிழ் மறவர்கள்...!

- சி. தமிழ்மகள் -
மட்டுவில் வடக்கு

உன் மனத்தை
கருத்துடனே செதுக்கி
வன் நினைவை
வேரறவே அகற்றி
நன் மணியாய்
நீ மிளிர்க!
கன்னல் தமிழின்
கலங்கரை விளக்கே!

- தி. க. திருக்குமரன் -
வட்டுக்கோட்டை.

உன் இருகரம் போதும்
தடைகளை உடைத்தெறிய
நீ முன்னே செல்
உன் அணி பின்னே வரும்!

- அருணா -

கல்லிலே
கலை படைக்கும் கரங்களே...!
செங்குருதிக் கறைபடிந்த
சிவந்த மண்ணின்
கண்ணீர்க் காவியத்தை
பொறியுங்கள் கல்லின் மேல்!
புரிந்து கொள்ளட்டும்
புதுயுகம்
அடக்கு முறைகளின்
அராஜகத்தினை...

- சரோ தம்பித்துரை -

கல்லுக்கும் கருணை உண்டு
என்பார்கள்!
உண்மை தான்
உளிபட்டு வலி பொறுத்து
வடிவம் தருகிறதே!

- என். தனுசுஜன் -
சண்டிலிப்பாய்.

ஓ...எம்கனவை
எத்தனை தடவை
விழித்திருந்து
வியர்வை சிந்தி
செதுக்கி வந்தோம்...
இன்னும் முடியவில்லையே
இன்னும் விடியவில்லையே?

- க. சந்திரா -
வெள்ளாம்போக்கட்டியூர்

இந்தக் கரங்கள்...
தகர்ப்பது பாறைகளையல்ல,
கொடிய இனவாத பூதத்தை!
இந்தக் கரங்கள்...
செதுக்குவது சிற்பத்தையல்ல
புதிய வரலாற்றுத் தேசத்தை!

- ப. பிறேமலதா -

சிற்பங்கள் சிதைந்து கொண்டேயிருக்கின்றன.
சீக்கிரம் செதுக்கி முடி – புதிதாய் நீ!

- சைதன்யன் -

இருள் சூழ்ந்த
உன்வாழ்வு விடைகாண
கரம் கொண்டு சிலைவடித்தல் போதுமல்ல;
உன் உளம் தன்னை வளமாக்கி
உற்சாகமாய்த் தொழிற்படு!
முழுமையை நீ காண்பாய்!

- வை. சசிகுமார் -
சாவகச்சேரி

இரண்டாயிரத்தின்
இளஞ்சிற்பிகள் நாம்
இங்கு உருவாக்கும் நேரம்
உடைக்கிறோம்
உணர்வற்ற எம் கரத்தால்!!

- லக்ஷி -
சுண்டுக்குளி.

உளி பிடித்துக் கல்லுடைக்கும் கை
களி பிடித்துச் செதுக்காதோ சிற்பத்தை?

- சௌஜன்யா -

முயற்சியின் தடைகளை
முற்றிலும் உடை!
துயர்களைச் சுமந்த
விழிகளைத் துடை!!
வியர்வைகள் சிந்தி
வெற்றிகள் படை!!!

- மானியூர் ரட்ணேஸ் -

சிந்தனைகளைச் சிற்பங்களாக்கும்
சிற்பியே!
கொஞ்சம் நிதானி!
உன் சூழலைக் கொஞ்சம் கவனி!
சொந்த மண்ணிலேயே
அந்நியப்பட்டு சுதந்திரமின்றி
வாழ்ந்து கொண்டிருக்கிறோம்!
எங்கள் வீர்வரலாற்றைச்
செதுக்கிவைக்க இதுநேரமில்லை!
சந்தேகக்கைதுகள் மிகுந்துவிட்ட
இந்தநேரத்தில்
கொஞ்சம் பொறுத்திரு?
விடுதலைகாணும் நாள்வரைக்கும்
அந்த நாள் வந்ததும்
எங்கள் வீரவரலாற்றைச்
செதுக்கலாம்.

- இளம்பரிதி -

சிற்பியே நீ செதுக்குவது
சிற்பமன்று;
தமிழ் மக்கள் அனுபவித்த
துயரங்களின்
நினைவுச் சின்னம்!

- ஆ. யசோதன் -
மட்டுவில் வடக்கு.

காதலன் உயிரால்
காதலியைச் செதுக்குகிறான்
கவிஞன் உணர்ச்சியால்
கவிதையைச் செதுக்குகிறான்
சிற்பி உளியால்
சிலையைச் செதுக்குகிறான்
ஓவியன் தூரிகையால்
சித்திரத்தைச் செதுக்குகிறான்
போராளி உழைப்பால்
தேசத்தைச் செதுக்குகிறான்
மாவீரன் உதிரத்தால்
சரித்திரத்தைச் செதுக்குகிறான்

- கதா -
யாழ். பல்கலைக்கழகம்

கவிஞனின் எழுதுகோலும்
சிற்பியின் உளியும்
காட்டுவது காலத்தை
கவிஞன் சொல்லில் வடிப்பான் கலை;
சிற்பி கல்லில் வடிப்பான் கலை;
இது வெறுமனே உளிபிடிக்கும் கரமல்ல;
உதிரத்தைப் பிழிந்து உலகையுயர்த்தும் கரம்!
இங்குடைந்து சிதறுவது பாறையல்ல
இனமத ஜாதி பேதத்துடன், பசியென...!

- அகியோபி -
வதிரி

## மௌன மொழி – 81




உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது. இதனை வரைந்தவர் பருத்தித்துறையைச் சேர்ந்த ரீ.ஜெயதீபன்

# என் பிரிய பூமிக்காக...

இதுவரை:-

இப்போது நிலவுகின்ற உலகக் கட்டமைப்பு, நோய்கள், யுத்தம் போன்ற பல காரணிகளினால் சிதைந்துவிட்ட பிறகு உருவாகியிருக்கின்ற புதிய உலகக் கட்டமைப்பில் நிகழ்வதான இக் கற்பனைத் தொடரில்...

பூமியின் பிரதான காட்டுப் பிரதேசங்களில் நிகழும் பாரிய அழிவுகளை ஏற்படுத்துகின்ற அந்நிய கிரக நாசகாரிகளின் வருகை பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளுவதற்காக, அந்நிய எதிர்ப்பிலிருந்து பூமி காக்கும் நிலையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் பூமியின் பிரதான காட்டுப் பிரதேசங்களுக்கு அனுப்பப்படுகின்றார்கள்.

'மேய்கு' காட்டுப் பிரதேசத்திற்கு விஞ்ஞானிகளான சியாரா, நிக்கலஸ், இவான், சிசிலியா ஆகியோர் செல்கின்றார்கள். அவர்கள் ஆய்வின்மூலம் நாசகாரிகளின் வருகை பற்றிய நோக்கம் தெரியவருகிறது. பூமியின் தாவர இனமொன்றைச் சார்ந்து வாழும் நுண்ணிய வில்லை அமைப்புள்ள உயிரிமூலம் மிகப் பாரிய அழிவுசக்தி கொண்ட நைதரசன் சேர்வையைத் தொகுப்பதற்காகவே நாசகாரிகள் பூமிக்கு வருகிறார்கள் என்பது தெளிவாகிறது.

இந்த நாசகாரிகள் சாதாரணமாய் மனிதர்கள் சிந்திக்கும் போது வெளிப்படுகின்ற எண்ண அலைகளை வைத்தே மனிதர்களை இனங்கண்டு தம்முடைய கதிர்களால் இவர்களைக் கொல்கிறார்கள். என்பது இந்த அழிவுகள் தொடங்கிய ஆரம்பகாலப் பகுதியில் - இத் தொடரிலுள்ள சம்பவங்கள் நிகழ்வதற்குப் 13 ஆண்டுகளுக்கு முன்னர் - சொலமன் என்கின்ற விஞ்ஞானியால் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

விஞ்ஞானி சிசிலியா இவ் ஆய்வுக்குப் புறப்பட முன்னர் ஓய்வுநாள் பொழுதுபோக்காகக் கல்வியகம் ஒன்றில் ஆசிரியையாகப் பணிபுரிந்தாள். அப்போது அவள் யூலியன் என்கின்ற அசாதாரணமான, மர்மமான நடவடிக்கைகள் கொண்ட சிறுவனைச் சந்திக்கநேரிடுகிறது. அவன், கண் முன் தோன்றாத, மாயமான ஒரு சக்தியினால், அவனையுமறியாமல் கட்டுப்படுத்தப்படுகிறான் என்பதைச் சிசிலியா கண்டறிகிறாள். அவனை அம் மாயவலையிலிருந்து அவள் மீட்க முயன்ற வேளையில் யூலியனின் உறவினன் எனச் சொன்ன ஒருவன் யூலியனைத் தூக்கிச் சென்றுவிட அவள் முயற்சி தோல்வியடைகிறது. சிசிலியா கடமையின் பொருட்டு அழைக்கப்பட்டதால் பிறகு அவளால் யூலியனைச் சந்திக்க முடியவில்லை.

இதேவேளை நகரின் ஒதுக்குப்புறமாக உள்ள மாளிகையொன்றில் சீலியா, தன் மகனான யூலியனை எதிர்பார்த்துத் துன்பத்துடன் காத்திருக்கிறாள். மகனைப் பிரிவதற்குக் காரணமாக இருந்த தன் கணவன் ஜோர்ஜின் மர்மமான நடவடிக்கைகளைக் கண்டு அவனை மீட்டுத் தருமாறு கெஞ்சுகிறாள். அவர் மௌனமாய் இருக்கவே தற்கொலைக்கு முயற்சிக்கிறாள். ஜோர்ஜ் அவளைக் காப்பாற்றிக் கட்டாய மயக்கத்துக்கு அவளை உட்படுத்துகிறார். அவ்வேளை அவருக்கு ஓர் அழைப்பு வருகிறது. அதன் பொருட்டு அவர் சீலியாவைப் பராமரிக்கும்படி சொல்லிவிட்டுப் புறப்பட்டுச் செல்கிறார்.

விஞ்ஞானி சியாரா தலைமையகத்தினால் மீண்டும் அழைக்கப்பட்டுவிட மற்ற மூவரும் தங்கள் ஆய்வினைத் தொடர்கிறார்கள். நாசகாரிகளின் பிரதான 'தொடர்பிடம்' 'மேய்கு'வின் பகுதியில் இருப்பதாகச் சந்தேகித்து அதைத் தேடிச் செல்கிறார்கள். அப்போது தங்களுடையதல்லாத ஊர்தியொன்றின் சக்கரங்களின் அடையாளத்தைக் காண்கிறார்கள். அந்த ஊர்தி நகரத்துள் சென்றிருப்பதை அறிகிறார்கள். நகரத்திலுள்ள மனிதர்கள் சிலர், நாசகாரிகளால் ஆட்கொள்ளப்பட்டுப் பூமிக்கெதிரான செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படுகிறார்களோவென அவர்கள் சந்தேகிக்கிறார்கள். சிசிலியாவுக்கு யூலியன் ஞாபகம் வருகிறது.

இனி........

## 20

இருக்கலாமோ? அப்படி இருக்கலாமோ? நகரத்து மனிதர்களையும் அவர்கள் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கத் தொடங்கி விட்டார்களோ? அப்படியான மனிதர்கள்தான் ஊர்தியில் வந்திருப்பார்களோ?

கேள்விகள் எழ நெஞ்சில் திகில் நிறைந்தது. அப்படி இருக்குமெனின் அது எத்துணைப் பயங்கரமானது! எதிர்பாராத இடத்தில் எதிர்பாராத நேரத்தில் எதுவும் நிகழலாம்!

நிக்கலஸ் மௌனத்தைக் கலைத்தான்.

"எங்கள் ஊகம் உண்மையெனில் நிச்சயமாய் நாங்கள் இக்காட்டுப் பிரதேசத்தில் மீண்டும் அவர்களைச் சந்திக்க நேரிடும்... அந்த நேரத்தில் இதைப்பற்றி மீண்டும் யோசித்துக் கொள்ளலாம்......"

"ஆனாலும்...."

"ஆனாலும் என்ன சிசிலியா....?"

"நாம் எந்தக் கணத்திலும் ஆபத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கிற தேவை எழுந்துவிட்டதை அலட்சியப்படுத்த முடியாது...."

"மிக உண்மை!" நிக்கலஸ் ஆமோதித்தான்.

பிறகு அவர்கள் மீண்டும் வந்த வழியே நடக்கத் தொடங்கினார்கள். நிறுத்தப்பட்டிருந்த ஊர்தியை அடையும்போது ஏறத்தாழ இருட்டிவிட்டிருந்தது.

அன்று இரவு சியாரா அவர்களுடன் தொடர்புகொண்டு உரையாடினான். தான் தலைமையகத்தில் பணிபுரிவதன் பொருட்டு அழைக்கப்பட்டதாயும் அனுமதி கிடைத்தால் மீண்டும் அவர்களுடன் பணியில் இணைந்து கொள்வதாயும் கூறினான். நிக்கலஸ் அவன் போன பிறகு காட்டில் நிகழ்ந்தவைகள் பற்றி அவனுக்குத் தெரிவித்தான். இன்னமும் நாசகாரிகளின் பிரதான தொடர்பிடம் பற்றி எந்தத் தகவலையும் பெறவில்லை என்பதையும் சொன்னான். சியாரா விடைபெற்ற பிறகு அவர்கள் இரவு நெடுநேரமாய் தங்கள் செயல் பற்றி விவாதித்தனர்.

மறுநாள் அதிகாலையிலேயே புறப்பட்டுவிட்டதால் மதியத்திற்கு முன்பாகவே அவர்கள் முதல்நாள் சென்றடைந்த இடத்துக்குச் சென்றுவிட்டிருந்தார்கள். அந்த இடத்திலிருந்து கால் நடையாகவே செல்வதெனத் தீர்மானித்தார்கள்.

இன்று அநேகமாய் உலோகத் தட்டுச் செய்தியில் குறிப்பிட்டிருந்த இடத்துக்குச் செல்ல முடியும் என நிக்கலஸ் நம்பிக்கை தெரிவித்திருந்தான்.

அவர்கள் ஒவ்வொரு பக்கமும் உன்னிப்பாக அவதானித்தபடி நடந்து கொண்டிருந்தார்கள். மர்மமான ஊர்தியின் சக்கர அடையாளம் தனித் தனியாகப் பிரிந்து ஒவ்வொரு திசையில் செல்லும் திட்டத்தை மாற்றியிருந்தது. எந்த மரத்தின் நிழலிலும் ஆபத்து ஒளிந்திருக்கலாம்! தனித்தனியாகச் செல்வது ஆபத்தை எதிர்கொள்ளும் பலத்தைக் குறைத்துவிடலாம்.

இரண்டு மூன்று மணித்தியாலங்கள் கழிந்திருக்கலாம். சிசிலியா நடந்து கொண்டிருந்தவள் திடீரென ஒருகணம் நின்றாள் - எதையோ அவதானித்தாற் போலச் சுற்றும் முற்றும் பார்த்தாள்.

"நிக்கலஸ்... இவான்...! ஒரு மாற்றத்தைக் கவனித்தீர்களா?"

"என்ன சிசிலியா...?"

"திடீரென்று உயர்மரங்களின் எண்ணிக்கை இங்கு குறைந்து இருப்பது போலவும் அடர்ந்த காட்டிலிருந்து மரங்கள் குறைவாக உள்ள வெளியை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதாகவும் எனக்குத் தோன்றுகிறது...."

இவானும் நிக்கலசும் சுற்றுமுற்றும் பார்த்தார்கள். அமைதியாகக் கவனிக்கச் சிசிலியா சொன்னது உண்மை என்பது புரிந்தது.

"ஆம் சிசிலியா! உன் கூற்றில் உண்மை இருக்கிறது.." இவான் சொன்னான். நிக்கலஸ் தோள்பையிலிருந்து தொலைக்காட்டியை எடுத்தான்.

"எதற்காக நிக்கலஸ் இது?"

"கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஏதும் மாற்றம் தென்படவில்லை. ஆனாலும் சூழலில் நடுக்காட்டிற்குரிய இயல்பான அடர்ந்த தாவரங்கள் இல்லாமல் இருப்பது அதிசயமானதாயிருக்கிறது. எதற்கும் இங்கிருந்தபடியே தொலைவிலுள்ள பாதையை அவதானித்த பின் பயணத்தைத் தொடர்வது பாதுகாப்பானது" சொல்லியபடியே அருகிலிருந்த மரத்தில் ஏறினான் நிக்கலஸ்.

கிளையில் அமர்ந்தபடியே தாங்கள் செல்லவேண்டிய பாதையை, பாதையிலுள்ள மரங்களை அவதானிக்கத் தொடங்கினான். திடீரென்று எதையோ பார்த்துத் திகில் அடைந்தாற் போலப் பரபரப்பாய் மரத்திலிருந்து இறங்கினான்.

"இவான் நான் அமர்ந்த கிளையில் அமர்ந்தபடி உனக்குக் கிழக்காக ஏறத்தாழ 500 மீற்றர் தொலைவில் தெரியும் உயர மரத்தினை அவதானி.....!"

இவான் ஏதும் புரியாமல் ஏறினான். நிக்கலஸ் சொன்ன திசையில் பார்த்து ஐந்து நிமிடங்கள் கழிந்திருக்கலாம்!

"சிவப்பு வர்ண ஒளிவிளக்கு...!" அவன் குரலில் வியப்பு வெளிப்படையாய்த் தெரிந்தது.

"ஆம்! செந்நிற ஒளிக்குமிழ்...! என் கண்கள் கண்டது உண்மை தான்..."

"என்ன நிக்கலஸ்...? ஒளிக்குமிழா...? செந்நிறத்திலா?..." சிசிலியாக எதுவும் புரியாமல் கேட்டாள்.

"ஓர் உயர்மரத்தின் உச்சியில் செந்நிற ஒளிக்குமிழொன்றைக் கண்டேன்... இவானும் அதையே சொல்கிறான்..."

"அப்படியானால்..." சிசிலியாவின் வார்த்தைத் தொடரை முற்றிலும் புரிந்து கொண்டாற்போல நிக்கலஸ் ஆழமான குரலில் பதிலளித்தான்.

"ஆம் சிசிலியா! அநேகமாய் எங்கள் எதிரிகளை மிக நெருங்கி விட்டோம் என்று தோன்றுகிறது..."

சிசிலியா அதை மௌனமாய் ஆமோதித்தாள். அவர்களின் தேடுதல் வீணாகவில்லை. இறுதியில் அந்தச் சந்தர்ப்பம் அவர்கள் எதிர்பார்த்திருந்த திகில் நிறைந்த நேரம் வந்தேவிட்டது. கைக்கெட்டும் தூரத்தில் அது காட்சியளிப்பதாய்ச் சிசிலியாவுக்குத் தோன்றிற்று.

* * *

சீலியாவைத் தன் முதிய பணியாளின் பராமரிப்பில் விட்டு விட்டு ஜோர்ஜ் தனக்கு வந்த அழைப்பின் பொருட்டுச் சென்றிருந்த அதேநாளின் மாலைப் பொழுதில்...

நகரிலிருந்து விலகித் தனிமையாயிருந்த அந்தச் சின்ன பங்களாவின் வாயிற்புறமிருந்த குருவிக் கூட்டினுள் நின்ற அழகிய சிறிய குருவிகளுக்குத் தீனி போடுவதில் ஈடுபட்டிருந்தான் யூலியன்.

அவன் கைகள் இயல்பாய்த் தீனியைத் எடுத்துக் கூண்டினுள் போட்டுக் கொண்டிருந்தாலும் மனதினுள் என்னவோ முன்னை நாள்களின் சந்தோஷம் இல்லாதது போல் தோன்றிற்று.

கழிந்து போன அந்த நாள்கள் எவ்வளவு இனிமையானவை! சிறுவர் முகாமில் அவனுடன் வசித்த எட்னா, மேரி, டேவிட் எத்துணை இனிமையான தோழர்கள்! அன்பாய் அவனைப் புரிந்து கொண்டு அவனது வழிகாட்டியாக விளங்கிய ஆசிரியை சிசிலியா... பொன்வண்ண மீன்களுடன் தடாகத்தில் விளையாடிய 'இயற்கைப்' பாடவேளை...!

ஆழ்ந்த பெருமூச்சு அவன் துன்பத்தைக் காற்றுக்குச் சொன்னது. சிறகொடித்துக் கூட்டினுள் அடைத்து விட்டது போல இது என்ன வாழ்க்கை! யூலியனுக்குச் சலிப்பான வேதனை இப்போது மிக சகஜமான ஒன்றாகி விட்டது.

தந்தையின் உறவினர் என்று சொல்லிக் கொண்டு அவனிடம் வருகின்ற அந்த ஒரு மனிதன் மட்டுமே யூலியனிடம் அடிக்கடி வருவதுண்டு. அவன் கூடத் தன்னில் அக்கறையுடன் தான் வருகின்றானா என்பதில் யூலியனுக்குச் சந்தேகந்தான்.

அன்றொருநாள் இரவில் தான் சிறுவர் முகாமின் அறை ஒன்றினுள் படுத்திருந்தது அவனுக்கு ஞாபகமிருந்தது. அதன் பிறகு என்ன நடந்ததோ! கனவின் நிழலாக ஏதேதோ எண்ணங்கள்! அவை நிஜமாய் நடந்தவையா அல்லது அவனது மனக் குழப்பத்தின் வெளிப்பாடுகளா என்பது அவனுக்குத் தெரியவில்லை. அவற்றை மீட்டிப் பார்க்கும் வலு கூடத் தன் மனத்தில் இப்போது இல்லையென அவனுக்குத் தோன்றியது.

கையிலிருந்த தட்டை வைத்து விட்டு எழுந்த போது சின்னக் குருவிகள் அவனை அழைப்பதாய் ஏதோ சப்தமிட்டன. திரும்பி ஒரு கணம் அவற்றைப் பார்த்தான் யூலியன். அவனைப் போலவே சிறைப்பட்ட சின்னக் குருவிகள்! பார்க்கப் பிடிக்காமல் எழுந்து வந்து கட்டிலில் வீழ்ந்தான். கண்களை மூடிக்கொண்ட போதும் நினைவுகளைத் துரத்த முடியவில்லை.

அவனுக்கு எதுவும் பிடிக்கவில்லை. உறவினர் என்று சொல்கின்ற அந்தக் கறுப்பு அங்கி மனிதன்...நீல ஒளி...கனவில் தோன்றும் நெடிய மனிதன்... தூக்கத்தில் தொடர்கின்ற அமானுஷ்யக் கட்டளைகள்... எதுவுமே பிடிக்கவில்லை. இவை எல்லாம் இல்லாமல் சிறுவர் முகாமில், கல்வியகத்தில் அவன், தோழர்களோடு விளையாடுகின்ற நாள் என்று வரும்?

எவ்வளவு நேரம் யூலியன் அப்படிக் கண்மூடிப் படுத்திருந்தானோ தெரியவில்லை. காதருகே ஒரு மென்மை பூசிய அழைப்புக்குரல் ஒலித்தது.

"யூலியன்....!"

அவன் கண்விழித்தபோது அவனுக்கு மிக அருகாக நீண்ட கறுப்பு அங்கி அணிந்திருந்த அந்த உறவுக்கார மனிதன் நின்றிருப்பது தெரிந்தது. யூலியன் அசையாமல் படுத்திருந்தான்.

"யூலியன் விரைவாய்ப் புறப்படு...! நாம் இன்று முக்கியமான ஓர் இடத்துக்குச் செல்ல வேண்டும்....!" இப்போது அந்த மனிதனின் குரலில் சற்றுக் கடுமை கலந்திருப்பதாய்த் தெரிந்தது.

(தொடரும்)



## ஆன்மீக விஞ்ஞானி வாசகரே!

எல்லா வற்றிற்கும் மேலான சக்தியெங்கும்
இருப்பதனை உணர்வதே மனிதத்தின் மாண்பாகும்
புல்லறிவு முதலான பேரறிவுள் விளையுமிந்தப்
புலப்படா அற்புதமே அழியாத அன்பென்று
சொல்வாருள் இறையருளைத் தெளிந்தமெய்ஞ்
ஞானியர்கள்
செப்பரிய அணுவின்மிக் காற்றலான் மிகவொளி
எல்லோர்க்கும் பொதுவான உலகத்தின் உண்மையிது
எத்தனையோ காலத்தால் முன்னெழுதா
மறையுமிது.

அண்டங்கள் பற்றிய அறிவேதும் இல்லாத
ஆயிரம் பல்கோடி ஆண்டுகள் முன்தோன்றிக்
கண்டறிய முடியாத விஞ்ஞான உண்மைகள்
கூறிடும் திருவண்டப் பகுதியைத் தேர்மின்கள்
விண்டிலந் நூற்றொரு கோடியின் மேல்விரி
வியன்கோள்கள் ஒன்றோடு ஒன்றெழில் பகருதல்
கொண்டாற்றல் நிலைமாறா நியமத்தை விளம்பிய
கோட்பாட்டு விஞ்ஞானி வாசகர் பெருமானே!

விஞ்ஞான விந்தைகள் பெருகியுள இந்நாளில்
வியனுலக ஞானியர் கருவூலம் என்னாகும்?
மெய்ஞ்ஞான சித்தாந்த வாதங்கள் மாயைநிறை
அஞ்ஞானர் கூற்றென்று ஆராய மறுத்திட்டார்
செஞ்ஞானத் திறம்புறத்தே தவிர்த்தவொரு
தெய்வசெயல்
செப்பேட்டில் சேமித்தோம் நாம்பெற்ற பேறதனால்
மெய்ஞ்ஞான வரலாற்றில் மண்டலத்தின் மர்மத்தை
முதற்சொன்ன ஆன்மீக விஞ்ஞானி வாசகரே!

சிவனோடு உளமொன்றிச் சிவனருளில் பிழிந்தெடுத்த
சிவஞானத் திருமுறைகள் சித்தாந்த சாத்திரங்கள்
எவராய்ந்தும் விளங்கிவிட முடியாத உட்பொருள்கள்
இருள்மாயப் பிறப்பறுக்கும் இன்னமுத மருந்தாகும்
தவஞானப் பொருள்பற்றா(து) அவமோக மதமென்னும்
மருளான பேய்பற்றி மயக்குண்டு மாய்பவர்கள்
பவசாயம் பூசித்தம் பொய்மையினைப் பெருக்குகின்ற
அவமாய உபாயத்தில் அழுந்தியே உழன்றிடுவர்.


பாவங்கள் இயல்பாக மனிதனின் பற்றல்ல
பக்குவ நிலையிலும் மலம்வந்து பற்றிடும்
பாவங்கள் நீக்குதல் சடங்கினால் ஆகாது
பிரார்த்தனை செய்துமே போக்கிடல் முடியாது
பாவங்கள் கழுவிட வழிகாட்டி அழுதவர்
பொய்நீக்கி நம்மையும் அழச்சொன்ன பெருந்தகை
பாவங்கள் கரைந்திட அழுதரன் அடிசேர்ந்த
பவலர் தேனூறு வாசகம் தந்தவர்.

'கைதையூரான்'
சைவப்புலவர் க.நடராசா
கைதடி.

எழுத்தாளர் அமரர் மூளாய் அருணாசலம் உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளுக்கு கதைகள் மற்றும் கட்டுரைகளை அடிக்கடி எழுதி வந்தவர். சென்ற வருடம் காலமாவதற்கு முன்னரும் சில கட்டுரைகளையும் கதைகளையும் அவர் அனுப்பியிருந்தார். அவற்றில் ஒன்று இது. யாழ்ப்பாணச் சமூகத்தின் பிரச்சினைகளில் ஒன்றை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது அமரரின் இந்தச் சிறுகதை. எழுத்தாளனின் உயிர் அழிந்தாலும் அவனது எழுத்தின் - சிந்தனையின் - மதிப்புக் குறைந்து விடுவதில்லை அல்லவா?

- ஆசிரியர் -

# சீதனம் யாருக்கு...?



"என்னங்க... நெடுக வாசித்தால் கண் நரம்புகள் பலவீனப்பட்டு பார்வைக் கோளாறு வந்திடுமாம்" என்று எச்சரிக்கையுடன் கூடிய ஆலோசனை கூறியபடி அண்ணாமலையின் மனைவி மாணிக்கம் எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்தார்.

வாசித்துக்கொண்டிருந்த பக்கத்தின் அடையாளம் தவறாமல், இடது கைச் சுட்டுவிரலைச் செருகியபடி புத்தகத்தை மூடிய அண்ணாமலை, ஏளனச் சிரிப்புடன் "இவ்வளவு நாளும் என்னுடைய கண்களில இல்லாத அக்கறை இண்டைக்கு வந்ததிற்கு ஏதோ காரணம் இருக்கு, என்ன விஷயம் சொல்லு?" என்றார் மனைவியைப் பார்த்தபடி.

"குத்திரமாதிரிக் கதைக்கிறதிலை ஒரு குறைச்சலும் இல்லை" என்று முணுமுணுத்த மாணிக்கம் "தம்பையா வந்திட்டுப் போறார். இதோடை அஞ்சு தடவை வந்து அலைஞ்சு போனார். பாவம்" சலிப்புடன் சொல்ல...

"தரகர் தம்பையாவோ...? அலையிறதுதானே அவருடைய தொழிலின் ரகசியம். அலையிறார். அதுக்கு நீ ஏனப்பா கவலைப்படுகிறாய்? ம்... ம்... இஞ்சை அவருக்கு என்ன தரகு வேலை கிடக்கு எண்டு வந்தவர்?" என்று கேள்வி பிறந்தது.

"தரகு வேலை இஞ்சை இல்லையோ? பிரான்ஸிலை இருக்கிற உங்கடை மூத்த மகனை மறந்து போனியளோ? அவன்ரை கலியாண விஷயமாய்த்தான் வந்தவர்" தான் சொல்லுவதைப் புருஷன் அக்கறையாகக் கேட்கின்றார் என்பதை அவதானித்த மாணிக்கத்துக்கு உற்சாகம் பிறந்துவிட்டது.

"ஒரு பெம்பிளை இருக்காம். எங்களுக்கும் தூரத்துச் சொந்தம் போல கிடக்கு. கடைசிப் பிள்ளையாம். தமையன்மார் வெளிநாட்டிலை. காசு, பணம், பொருள், பண்டம், வீடு, வளவு எண்டு ஏராளமாய் இருக்கிறது எல்லாம் பெட்டைக்குத்தானாம். எப்பிடியும் பதினைஞ்சுக்குக் குறையாதாம். ஒரு கிழமைக்குள்ள முடிவு சொல்லட்டாம். இந்தச் சம்பந்தத்தை விடக் கூடாது பாருங்கோ"

"அட நல்ல கொழுத்த சீதனக் கரி. ம்... யோசிப்பம். தம்பையா சாதகம் கொண்டு வந்தவரே? தரகர்களை நம்பக் கூடாது. அலசி ஆராஞ்சுதான் முடிவு சொல்ல வேணும்"

"அவனுக்கு முப்பத்தைஞ்சு வயசு. இந்த ஆடி வந்தால் முப்பத்தாறு தொடங்குகிறது. பெட்டைக்கு முப்பது வயதாம். இனி என்ன பொருத்தம் பார்க்கிறது? முப்பது வயசு கழிஞ்சால் பொருத்தம் பார்க்கத் தேவையில்லையாம். தம்பையாவும் சொன்னவர்"

"என்ன விசர்க்கதை கதைக்கிறாய்? அப்படிச் சொல்லி உனக்கு உருவேத்தித் தன்னுடைய காரியம் பார்க்கத் திட்டம் போட்டிருக்கிறார் தம்பையர். கலியாணம் எண்டது ஆயிரம் காலத்துப் பயிர். பொருத்தம் பாராமல் செய்யிறதே?" என்றவர் தொடர்ந்தார்.

"மாப்பிள்ளை பிரான்ஸிலை. பெம்பிளை யாழ்ப்பாணத்திலை. வந்து றிசிஸ்ரேசன், கலியாணம் எல்லாம் முடிச்சுக் கூட்டிக்கொண்டு போகவேணுமாமோ? அல்லது நாங்கள் எல்லாம் பேசி வாங்கிறதை வாங்கிக் கொண்டு பெம்பிளையை ஏஜன்ஸி மூலம் பார்சலிலை அனுப்புறதாமோ?"

"நாளைக்குத் தம்பையா வருவர். அவரிட்டை எல்லாத்தையும் விவரமாகக் கேளுங்கோ" என்ற மாணிக்கத்தை இடைமறித்த அண்ணாமலை "அவரை என்ன கேக்கிறது? நாங்கள் மாப்பிளை வீட்டுக்காரர். நாங்கள்தான் முடிவு செய்யவேணும்" என்று உரிமையை ஞாபகப்படுத்தினார்.

* * *

அந்த நாள்களில் ஒருநாள், இரவு மணி பன்னிரண்டைக் கடந்தும் அண்ணாமலைக்குத் தூக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்து நித்திரா தேவியை அணைக்க முயன்று தோல்வியைத் தழுவிக் கொண்டார். அவருடைய அடி மனதில் புரைந்திருந்த கழிந்த கால நினைவுக் குமிழிகள் மேலெழுந்து நெஞ்சை அழுத்தின.

* * *

இரண்டாவது மகன் பிரகாஷ் வெளிநாட்டு மோகம் இல்லாதவன். பட்டப் படிப்புப் படித்துவிட்டு வீட்டோடு இருந்து வேலை தேடிக் கொண்டிருந்தான். ரியூற்றறி ஒன்றில் ஆசிரிய வேலை கிடைத்தது. திறமையான ஆசிரியர் என்பதால் மாணவர்களிடையே பிரபலமாகியிருந்தான்.

காலம் கழிந்து கொண்டிருந்தது. அவனுக்கும் ஒரு மாணவிக்கும் முடிச்சுப் போட்டுக் "கிசுகிசு"க்கள் எழுந்தன. ஆரம்பத்தில் அவைகளை அலட்சியம் செய்தார் அண்ணாமலை. 'பொழுது போகாதவர்களும் பொறாமைக்காரர்களும் கட்டிவிடும் கதைகளாக இருக்கும்' என்று மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டார்.

நெருப்பில்லாமல் புகை கிளம்புமா? அண்ணாமலையின் நெருக்கமான நண்பர்கள் அவரை இது பற்றிக் கேட்டார்கள். யாழ்ப்பாண பஸ் நிலையத்திலும் திரைப்பட அரங்குகளிலும் நல்லூர்க் கோவிலும் இருவரையும் கண்டதாகவும் சொன்னார்கள். அப்ப விஷயம் உண்மையாகத்தான் இருக்கும் என்று தீர்மானித்துக் கொண்டார்.

ஒருநாள் வெளியில் எங்கும் போகாமல் தனது அறையிலேயே முடங்கிக் கிடந்தான் பிரகாஷ். அறைக் கதவுக்கு அருகில் நின்று சிறிது உரத்த குரலில் "என்ன பிரகாஷ் நான் கேள்விப்படுறதெல்லாம் உண்மையோ?" என்று கேட்டார் அண்ணாமலை.

உண்மைதான் என்பதற்கு அடையாளமாகத் தலையை மேலும் கீழும் ஆட்டிவிட்டு எதுவும் பேசாமல் எங்கோ பார்த்தபடி இருந்தான் பிரகாஷ்.

இனியும் கவனிக்காமல் விட்டால் விபரீதமான விளைவுகள் உண்டாகிவிடும் என்று உணர்ந்த அண்ணாமலை தனது நண்பர் நாதனை மாணவியின் தகப்பனுடன் இந்த விஷயம் பற்றிப் பேசும்படி அனுப்பினார்.

"நானும் கேள்விப்பட்டனான். அவளையும் கேட்டன். ஒண்டும் சொல்லாமல் பேசாமடந்தையாக இருக்கிறாள். 'படிக்கத்தானே போனனி. இப்படி ஒரு கெட்ட பெயரோடு வந்து நிற்கிறாயே?' எண்டு தாறுமாறாக ஏசிப்போட்டன். வீட்டிலை நிம்மதி துலைஞ்சு போச்சு. 'மாப்பிளை கேட்டு அவர்களுடைய வீட்டுக்குப் போக' எனக்கு தராதரம் காணாது. பொருள் வசதி இல்லை. நடவாத காரியம் மறந்து விடு மகளே' என்று சொல்லிப் போட்டன்" என்றார் மாணவியின் தகப்பன்.

நண்பர் சொன்னவற்றைக் கேட்ட அண்ணாமலை பெண்வீட்டார்தான் மாப்பிளை கேட்டு வரவேண்டும் என்ற சம்பிரதாயத்தை அசட்டை செய்துவிட்டு அவரையும் அழைத்துக் கொண்டு மாணவி வீட்டுக்குப் போனார்.

அங்கு இருந்தவர்கள் அண்ணாமலை தம்மை எச்சரிக்க வீடு தேடி வந்துவிட்டார், என்ன நடக்குமோ என்று கலவரமடைந்தனர். பெண்ணின் தகப்பனை அழைத்த அண்ணாமலை "பெடியனும் பெட்டையும் விரும்புகினம். நாங்கள் ஏன் தடையாக இருக்கவேணும்? கலியாணத்துக்கு நாள் வையுங்கோ. இயல்புக்குத் தக்கதாகக் கொடுகிறதைக் கொடுங்கோ. நான் தாலி கூறைக்கு வழிபண்ணுகிறன்" என்று சொல்லி விட்டு வந்தார்.

* * *

'நச்சு... நச்சு' என்று தென்மேற்கு மூலையில் குரல் கொடுத்த பல்லியின் குரல் அண்ணாமலையின் எண்ண ஓட்டத்தை திசை திருப்பியது. மறுபுறம் புரண்டு படுத்து நேரம் பார்த்தார். மணி இரவு ஒன்று முட்டியதைக் காட்டியது கடிகாரம்.

அவருடைய ஒரே மகளான நவத்தின் உருவம் மனத் திரையில் விழுந்தது. நவத்தின் போக்கும் செயலும் புரியாத அண்ணாமலை, ஒருநாள் நேரடியாகவே கேட்டார்.

"என்ன பிள்ளை கலியாணம் வேண்டாம் என்று பிடிவாதம் பிடிக்கிறாய். பயப்பிடாமல் சொல்லு. ஆரையாவது மனத்திலை நினைச்சு இருக்கிறியே?"

"நான் அத்தானை விரும்புகிறன்" என்றாள் நவம். அத்தான் என்று நவம் சொன்னது அவருடைய தங்கை மகன் ஞானத்தை. முறை மாப்பிளைதான். பல ஆண்டுகளுக்கு முன் உண்டான காணித் தகராறு காரணமாக அண்ணாமலை குடும்பமும் தங்கை குடும்பமும் தொடர்பு இன்றி இருந்தன.

'இந்த நிலை இனியும் தொடர விடுவதா? பகை உணர்வு குடும்ப ஒற்றுமையைக் குலைத்துவிட்டது. இது அடுத்த பரம்பரையின் உறவையும் கெடுத்துவிடுமே!' ஆழ்ந்து சிந்தித்த அண்ணாமலை ஒரு முடிவுக்கு வந்தார்.

யாரும் எதிர்பாராத வகையில் ஒருநாள் தங்கையின் வீட்டுக்குப் போனார். தங்கையும் மைத்துனரும் சிரித்த முகங்களுடன் 'வாருங்கோ' என்று அன்புடன் வரவேற்றனர். தான் வந்த காரணத்தைச் சொன்னார் அண்ணாமலை.

"இங்கேயும் அதே பிடிவாதம் தான் அண்ணன். மச்சாளைத்தான் கட்டுவன் என்று ஞானம் முடிவாகச் சொல்லிப் போட்டான்" என்றாள் தங்கை.

"சரி... சரி கலியாணம் எங்களுக்கே? வாழுகிற பிள்ளையளுக்கு வழி செய்து கொடுக்க வேண்டியது எங்கடை கடமை. அடுத்த நாளுக்குத் தாலி கட்டு" என்று சொல்லி வந்துவிட்டார்.

* * *

அடுத்து யோகனின் உருவம் தெரிந்தது.

அண்ணாமலையின் மூத்த மகன் யோகன் வெளிநாட்டு மோகம் கொண்டு பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ஜேர்மனிக்குச் சென்று பின்னர் பிரான்ஸுக்குள் புகுந்து வேலை தேடிக் குடியுரிமையும் பெற்றவன்.

தரகர் தம்பையா கொண்டு வந்த பெண் எல்லா வகையிலும் யோகனுக்குப் பொருத்தமானவள் தான். மனைவி மாணிக்கம் ஆசைப்பட்ட மாதிரிப் பணமாகவும், பொருளாகவும், வீடு வளவாகவும் ஏராளமான சீதனத்தை அள்ளிக்கொண்டு வந்து நிற்கிறாள்.

'மகன் யோகன் இனி இந்த மண்ணில் கால் வைப்பானா? எப்போது? எனது இறுதிக்கிரியைகளைச் செய்யவாவது வருவானா? சந்தேகம் தான். அப்படியானால், எனது இறுதிக் கடமையை சீதனகாரப் பெண்ணை அனுப்புவதுடன் முடித்துக்கொள்ள வேண்டியதுதானா?'

'பெண்ணும் சீதனமும் அவனுக்குத்தானே உரியவை. பெண்ணை அவனுக்கு அனுப்பிவிட்டு சீதனமாகப் பெறும் வீடு வளவையும் காணிகளையும் பராமரிப்பவர் யார்? பணத்தைப் பயன்படுத்துபவர் யார்? பொருள் பண்டத்தைப் பாதுகாக்கும் பூதமாகவா நான் வாழவேண்டும்?' - குழம்பித் தவித்தார் அண்ணாமலை.

* * *

தகப்பன் எழுதிய கடிதத்தின் இறுதிப் பகுதியை வாசித்துக் கொண்டிருந்தான் யோகன்.

*"நீ பிறந்து வளர்ந்து விளையாடிக் கல்வி கற்றது யாழ்ப்பாண மண்ணில். இந்த மண்ணில் பிறந்த ஒரு பெண்ணைச் சீதனத்துடன் உனக்காகப் பார்த்து வைத்திருக்கின்றேன். இந்த மண்ணை நீ நேசித்தால், இங்கு வந்து அவளை மணம் செய்து மகிழ்ச்சியாக வாழலாம்.*

**அமரர் அருணாசலம்**
மூளாய்

*நீ இப்போது இருக்கும் நாடு உனக்கு உத்தியோகத்தையும் ஊதியத்தையும் தந்து உயர்த்தியது. பழகிய வாழ்க்கை முறைகளைப் புறக்கணித்து இவ்விடம் வருவது இயலாது என்று நீ கருதினால், உந்த நாட்டில் பிறந்த, உனக்குப் பிடித்த ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து சந்தோஷமாக வாழ்க்கை நடத்து.*

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பழமொழி பொருள் தேடுவதற்கு மட்டும்தான் என்ற குறுகிய மனப்பான்மை மாறவேண்டாமா?

(யாவும் கற்பனை)

## அதிரடியும்....செல்லடியும்...

என்னைப்பற்றி எழுதும் வரை
அருமையான செய்திகள்!
ஆகா....ஓகோ....!
வாங்கியவுடன் வாசிப்பது
'அதிரடி'யில் இன்று யாரை - அலசி
ஆராய்ந்திருக்கிறார்கள் என்று!
மின்னலின் கிழியலில் நியாயமிருக்குது!
'சபாஷ்' எனச்சொல்லி தோழருடன் மகிழ்வதுண்டு!
இன்று.... என்னைப்பற்றித்தான்
எழுதியிருக்கிறார்கள்!
எரிகிறது வயிறு - 'அவையின்ரை
அதிரடியும்...... செல்லடியும்!'
எரிச்சல் பெருக்கிறது!
என்னில் பிழையிருந்தும் - என் மனதில்
எரிச்சல் பெருக்கிறது!

- முத்துமாரி -

## விக்கிரம வருட வாழ்த்து

உதயன் வெளியீடு ஊக்கச் செயலே
இதயம் மகிழ இயம்பும் - கதைகளோ
கற்பனை யின்றிக் கருத்துக்கள் உண்மையதாய்
சொற்கள் எளிநடையே தான்.

உதயத்து வீசு ஒளிக்கதிர் போல
இதயத்து வீசும் அறிவு - உதயன்
படித்துப் பரவச மெய்யவொரு நல்ல
படிக்கல் எனவே பகர்.

வாழ்க்கைக் கதைகள் வடித்தெடுத்த
பாங்கதனில்
வாழ்வினது போக்கை விளக்குதையா -
தாழ்வின்றி
எல்லோரும் கற்றுக் கனிவுடன் உள்ளமகிழ்
நல்ல தமிழென்றே நாடு.

ஊமையவன் கண்ட கனவது போலிருந்த
தீமையிலா நம்மிளையர் செந்தமிழன் - வாய்மை
வளர்க்க வழிசெய் வெளியீ டுதயன்
தளர்வுறா தென்றுமே தான்.

சஞ்சீவி என்றும் சிரஞ்சீவி யாயிருப்ப
துஞ்சு மனங்களிற் தூயமணம் - கொஞ்சுதென
வானாளில் பொங்கு மதிவளரக் காலத்தை
வீணாக்கா தென்றே மகிழ்.

இறைவன் திருவருளால் இன்னும் படைத்து
நிறைவுறச் செந்தமிழை நெஞ்சில் - உறைவித்து
நீடுபுக ழோங்க நிலைத்து வெளிவந்து
நீணிலத்து வாழியவே நின்று.

- க.சுப்பிரமணியம் -
ஆனைக்கோட்டை

# பன்னிரு இராசியினருக்கும் சித்திரைப் புத்தாண்டுப் பலன்

## மகாதேவா ஜோதிடம்

| | | | |
|---|---|---|---|
| புத வெ | சூ செவ் வியா. சனி | 10 | 11 |
| 7 | இராசிச்சக்கரம் | | சந். ராகு |
| கே | | | ல |
| 5 | 4 | 3 | 2 |

*நிகழும் விக்கிரம வருஷம் சித்திரை மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி 15 நிமிஷமளவில் (ஆங்கிலத் திகதி 13-04-2000)சிங்கம் இலக்கினத்திலும். ஆயிலியம் 2ஆம்பாத நட்ஷத்திரத்திலும் சித்தாமிர்த யோகத்திலும். சூரிய ஓரையிலும் கூடும் சுபமுகூர்த்த வேளையில் புதிய வருஷம் பிறக்கின்றது.*

*மருத்துநீர் தேய்த்து, சிரசில் வேப்பம்இலையும், காலில் பொன்னை இலையும் வைத்து ஸ்நானம் செய்து, வெள்ளை, மஞ்சள் ஆடைகளை அணிந்து இஷ்ட தெய்வங்களை வழிபடுங்கள்.*

### மேடம்

பழையன கழிதலும் புதியன புகுதலும் நடக்கும் காலம். கைக்கு வந்தது வாய்க்கு எட்டாத நிலையில் போராடுவீர்கள். காணி, பூமி, சகோதரரின் பொறுப்பு, புத்திரரால் கலகலப்பு, அவர்களின் முன்னேற்றத்திற்காக ஓடியாடித்திரிதல், ஏழரைச் சனி அடிக்கடி போராட்ட உணர்வுகளையும் பயம், யோசனை, இடத்திற்கு இடம்மாறி பொருள் இழக்கும் சூழ்நிலையும் தர இடமுண்டு. தொழில் ஸ்தானத்தில் விடாத போராட்டம். உள்ளத்தில் ஓர் உத்வேகத்தைக் கொடுக்கும். சித்திரை, ஆனி, புரட்டாதி, தை, மாசி மாதங்களில் நல்ல மாற்றங்கள் (தமிழ் மாதங்கள்) நடக்கும்.மற்றவர் எனக்கு என்ன புத்தி சொல்வது? எனக்கு எல்லாம் தெரியும் என அடிக்கடி வரும் எண்ணத்தால் பின்னடைவுகள் ஏற்படலாம். செய்தித்துறை, வியாபாரத்துறை, அரசாங்கத்துறை, சட்டத்துறையினர்களுக்கு அதிக மாற்றங்கள் இடம்பெறும்.

### இடபம்

எதையும் தாங்கும் இதயத்தைக் கொண்டவர்கள் நீங்கள். எதையும் அக்கறையாக அமைதியாக இருந்து உறுதியாகச் செய்ய முற்படுங்கள். இலக்கியத்துறையிலும் அரசியல் துறையிலும் அதிக ஆர்வம் கொண்டு செயற்படுவீர்கள். எதையாவது குடித்தபடியோ அல்லது சாப்பிட்டபடியோ இருப்பீர்கள். அடுத்தடுத்துச் ஷெல்லடிச் சத்தம் கேட்டாலும் திடுக்கிடாமல் படுத்து இருக்கும் மனம் உங்களுக்கு. திட்டமிட்டுச் செயற்படுங்கள். சட்டங்களை மாற்றி மாற்றித்தானே ஆட்சி புரிகிறார்கள் என்று அலட்சியமாகச் சொல்லுவீர்கள். ஏழரை நடுக்கூறு 03.08.2000லிருந்து இரண்டரை மாதங்கள் வருத்தாமல் இருக்காது. சித்திரை, வைகாசி, ஆடி, ஐப்பசி, மாசி, பங்குனி மாதங்களில் நல்லவை நடக்கும். அரசியலில் புகழ் அடைவீர்கள். பொதுத்தொண்டு சிறப்பைத்தரும். உஷ்ணபீடைகள் தாக்கும். கடல்தொழில், ஹோட்டல், மருந்துத் துறையினர்களுக்கு அதிக மாற்றங்கள் நடக்கும்.

### மிதுனம்

என்ன? எந்தவிஷயத்திலும் நான் தான் சிறந்தவர் என எண்ணுகிறீர்களோ? உங்கள் ஆலோசனை எல்லோருக்கும் தேவை. ஆனால் உங்களுக்கு யார் ஆலோசனை சொல்வது? வீட்டிலே வந்தால் உதவி செய்வதாகச் சொல்லுவீர்கள். ஆனால் கந்தோருக்கு வந்தால் சடுபுடு - சடுபுடு என்று இருப்பீர்கள். ஏழரைச்சனி 03-08-2000லிருந்து உங்கள் வீட்டு வாசல்வரை வரும். அலைச்சல், உஷ்ணபீடைகள், வயிற்றில் வருத்தம், மறைமுக எதிர்ப்புக்கள் என வருத்தாமல் விடாது. கமிஷன் வேலைகள், செய்தி, சாப்புச்சாமான், புத்தகக்கடைகள், புடைவைக் கடைகள், தொழில்நுட்ப மின்சாரப் பகுதிகளில் தொடர்பான வேலை செய்பவர்களுக்கு நற்பலன்கள் அதிகரிக்கும். சித்திரை, ஆனி, ஆவணி, தை, மாசி, பங்குனி மாதங்களில் நன்மைகள், மாற்றங்கள் ஏற்படும். இருட்டு - பகல் உங்களைப் பொறுத்த மட்டில் மாறிமாறி வரும் காலமாகும்.

### கடகம்

சோழியன் குடுமி சும்மா ஆடுமா? ஆடாதே ஏதாவது இலாபம் இருந்தால் தானே ஆடும். தொழில் ஸ்தானத்தில் இலாபம் இல்லாவிட்டால் உங்களைக் காணமுடியாது போல் இருக்கின்றது. சொல் ஒன்று, செயல் ஒன்றாக இருப்பீர்கள். அடிக்கடி மனம் மாறும். மலையிலிருந்து ஆறு வரும். ஏன் ஆறு மலைக்கு ஏறக்கூடாதா? எனக் கேட்க மனம் வரும். எதிர்ப்பாளரின் ஆதரவு, அன்பைப் பெறுவீர்கள். சித்திரை, வைகாசி, ஆடி, புரட்டாதி, மார்கழி ஆகிய மாதங்களில் மாற்றங்கள், நன்மைகள் நடக்கும். புதிய தொழில், அல்லது பதவி மாற்றங்கள் ஏற்படும். அடிக்கடி பயம் ஏற்படும். இரக்கத்தில் பலருக்கு எதிர்பார்ப்பின்றி உதவிகள் செய்வீர்கள். தோட்டவேலை, விளைவுப்பொருள்களால் நன்மை வரும். சலவருத்தம், நெஞ்சுபடபடப்பு, வாய்வுத்தொல்லை வருத்தலாம்.

### சிங்கம்

அன்புகொள், அடிமையாகாதே! உங்களைச் சரணடையப் பண்ணாமல் எவரும் காரியத்தைச் சாதிக்க முடியாது. உண்மைக்கும், நேர்மைக்கும் உறுதியான நன்மைகளை நீங்கள் பெறவோ பிறருக்கு நன்மை செய்யவோ உங்களுக்கு முடியும். வியாழமாற்றம் மாற்றங்களைத்தரும். சனிமாற்றம் புதிய கருத்துக்களை சட்டதிட்டங்களைச் சொல்ல வைக்கும். நம்பிக்கை எதில்?கடவுள் மீதா? தொழில் மீதா? கடமையைச் செய்வதில் நிதானமிருக்கும். இதை அல்லது உங்கள் இலட்சியத்தை எவரும் சிம்பிளாக நினைத்தால் பொங்கி எழுந்து சடார் என நிலை நாட்டுவீர்கள். சிங்கம் - ராசா எதிலும் வெற்றி தான். சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி, ஐப்பசி, தை ஆகிய மாதங்களில் நன்மைகள்நடக்கும். மகாத்மா காந்தி பிறந்த ராசிஅல்லவா? நெஞ்சு வருத்தங்கள், கைகால், தேகவலி, உடல்வரட்சி, படபடப்பு என்பன சர்வ சாதாரணம். ஆசிரியத்துறை, நிர்வாகத்துறை, மருந்துத்துறை போன்ற துறையினர் நன்மை அடைவார்கள்.

### கன்னி

கஷ்டநஷ்டங்கள் வாழ்க்கையில் சகஜம். எதையும் அதிகம் கவலைப்படாமல் சமாளித்து சமாளித்து வாழ்ந்து வருவீர்கள். 03-08-2000க்குப் பின்பு பெரிய பாரம் ஒன்று விலகிவிடும். மனக்கலக்கத்திலிருந்து ஒரு தெளிவு வரும். தொழிலில் புதிய பல திட்டங்கள் உருவாகும். எதிர்ப்பாளரின் உதவிகளால் நன்மை அடைவீர்கள். குடும்பத்தில், வீட்டில் பல மாற்றங்கள் நடக்கும். இதுவரை தடங்கலாக நின்ற விஷயங்கள் பணப்பாக்கிகள் மெல்ல மெல்ல வரப்பலன் உண்டு. ஆனி, ஆடி, புரட்டாதி, கார்த்திகை, மாசி ஆகிய மாதங்களில் நல்ல பலன்கள் நடக்கும். செய்தித்துறை, சங்கீதம், கலைத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள். நெஞ்சுச்சளி, கைகால்பிடிப்பு, வாதஉளைவு என்பன அடிக்கடி வந்துபோகும்.

### துலாம்

நல்லவர்கள் நல்லதைத்தான் செய்வார்கள். வியாழன் 02-06-2000 லும்; சனி 03-08-2000லும் உங்களுக்கு அட்டமத்தில் வருகின்றதால் பலவித பிரச்சினை உருவாகும். எதையும் தாங்கும் இதயத்துடன், சமநீதி - சமநோக்குக் கொண்டு சமாளித்தபடி இருப்பீர்கள். உங்கள் சுகத்திற்காக போராடியபடி இருப்பீர்கள். குடும்பத்தில் பொருள் பிரச்சினை தலைதூக்கும். வாகனத்தால் பொருள் செலவு அல்லது இழப்பு வரலாம். தொழில் ஸ்தானத்தில் கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சமாளித்துக் கொள்வீர்கள். சனி வாய்வு, உஷ்ணபீடைகளால் வருந்த வேண்டிவரும். கொடுத்ததை வாங்க முடியாது போராட வேண்டி வரும். ஆடி, ஆவணி, ஐப்பசி, மார்கழி, பங்குனி மாதங்களில் ஓரளவு நன்மைகள் நடக்கும். சனீஸ்வரனுக்கும், தட்சணாமூர்த்திக்கும் அர்ச்சனை செய்து அம்மன், மாதாவை வழிபட்டு வரவும். அதனால் நன்மைகள் நடக்கும். போக்குவரத்துத்துறை, குருத்துறை, ரி.வித்துறை, பத்திரிகைத் துறையினருக்கு மாற்றங்கள் ஏற்படும்.

### விருச்சிகம்

தினம் தினம் பட்டைபூசும் அனுஷமும், கடும்பிடிவாதமும், உறுதிச் செயற்பாடும் அறிவாற்றலுமுடைய கேட்டை நஷ்சத்திரம் பலவித மாற்றங்களைக் கொடுக்கும் பலாபலன்கள் உண்டு. எதிர்ப்பாளராலும், உடன் இருக்கும் அயலவர்கள், நண்பர்களாலும் பலவிதமான கஷ்டங்கள் ஏற்படும். உங்களைக் காட்டிக் கொடுப்பார்கள். குடுபத்தினர்களுக்கு உங்கள் உதவிகளால் பல நன்மைகள் ஏற்படும். உஷ்ணபீடைகள், நெஞ்சு வருத்தம், கிருமித்தாக்கம் விபத்துக்காயங்கள் என்பன ஏற்படலாம். இடமாற்றங்கள் சகஜமாகும். தொழில்நுட்பத்துறை, அரசியல் துறை, வியாபாரம் ரி.வி. கொம்பியூட்டர், அச்சுவேலை, மருந்துத் துறை சமபந்தப்பட்டவர்களுக்கு மாற்றங்கள் கொடுக்கும். தை, சித்திரை, ஆவணி, புரட்டாதி மாதங்களில் மாற்றங்கள், நன்மைகள் அடைவீர்கள். பெரியவர்கள் உதவிகள் செய்வார்கள்.

### சுபநேரம்

**விக்கிரம வருஷப் பிறப்பின் போது கைவிஷேடம் வழங்கல் மற்றும் புதிய தொழில்களை, சுபகாரியங்களை ஆரம்பிப்பதற்கான சுபநேரம் வருமாறு:-**

**13-04-2000 வியாழக்கிழமை**
காலை 6.05 - 7.05
காலை 8.05 - 9.05

**15-04-2000 சனிக்கிழமை**
காலை 9.06 - 10.06
காலை 11.05 - 12.05

**16-04-2000 ஞாயிறு**
காலை 8.10 - 9.10
காலை 9.30 - 10.10

**17-04-2000 திங்கட்கிழமை**
காலை 6.02 - 7.02
காலை 9.15 - 10.02

(இலங்கை பழைய நேரப்படி கணிக்கப்பட்டது)

### தனுசு

எதனையும் துருவித்துருவி வெளிப்படையாகப் பார்த்தபடி இருப்பீர்கள். இந்த உலகில் கடுமையாக இருந்து எதனைச் சாதிக்கப்போகின்றோம். தீவிரமான உழைப்பால் நன்மைகள் அடைவீர்கள். உறவினர், அயலவர்கள் பேசத்தான் செய்வார்கள். உங்கள் அலட்சியப்போக்கு சிலருக்குப் பிடிக்காது. உங்கள் வழி தனிவழி. உங்களை எவரும் அதைச் செய்யும், இதைச்செய்யும் எனச் சொல்லக்கூடாது. உஷ்ண பீடைகள், வாய்வு, வயிற்றுத் தொல்லைகள் விட்டுவிட்டுக் கொடுக்கும். எதிர்ப்பாளரின் வார்த்தைகளை கொஞ்சம் கருத்தில் எடுத்தால் நன்மை அடைவீர்கள். பிரயாணங்கள் சகஜமாகும். அழகிற்கும், அறிவுக்கும் எப்பொழுதும் வாழ்த்துச்சொல்வீர்கள். மருந்துத்துறை, பத்திரிகைத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள். இடமாற்றங்கள் சகஜம். பொருள்களில், கொடுக்கல் வாங்கல்களில் கவனமாக இருக்கவும். மாசி, வைகாசி, புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி போன்ற மாதங்களில் நன்மைகள் ஏற்படும்.

### மகரம்

மெல்ல மெல்லப் பாயும் வெள்ளம் கல்லையும் உறுட்டிப்பாயும் என்பது போன்று உங்கள் செயல்கள் இருக்கும். தொழிலில் மிக ஆழ்ந்த கவனநிலைப்பாட்டால் நன்மைகள் கிடைக்கும். ஆடம்பரத்திற்காக அதிக செலவுசெய்ய மனம் வராது. உங்கள் ஆலோசனைகளை எல்லோரும் கேட்பார்கள். இந்திராகாந்தி, நெப்போலியன் போன்ற அரசியல் துணிவு பெற்ற பெரியவர்கள் உங்கள் இராசியில் தான் பிறந்து புகழ்பெற்றவர்கள். காயங்கள், அடிபடல், கைகால் பிடிப்பு, உஷ்ணபீடைகள், கண்நோய், வயிற்றுக்குழப்பங்கள் வரலாம். நரம்புத்தளர்ச்சி ஏற்படலாம். தனிப்பட்ட நிர்வாகம், வியாபாரம், வாகனம், போக்குவரத்து, கடல் பகுதிகள், விவசாயம் போன்ற தொழில் தொடர்பானவர்கள் நன்மை அடைவார்கள். கவலையீனம், சோம்பலால் பல இழப்புகள் வரும். ஆனி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை மாதங்களில் பலவித மாற்றங்களும் குடும்பத்தில் நன்மைகளும் கிடைக்கும்.

### கும்பம்

எதனையும் துருவித்துருவி ஆராய்ந்தபடி இருக்கும் இயல்புள்ளவர்கள் நீங்கள். தொழில் பீடத்தில் பிறருக்கு கொஞ்சம் கோபம் வரக்கூடியதாக கடும் சொற்களைப் பிரயோகித்துப் பார்ப்பீர்கள். அதனால் என்ன இலாபம் வரும் எனச் சிந்திப்பீர்கள். வெளிப்படையாகப் பேசி பிறரிடம் வாங்கிக் கட்டுவீர்கள். நிதானமாக இருக்கவும். இராமகிருஷ்ண பரமஹம்சர் உங்கள் இராசியில் பிறந்தவர். அவர் வாழ்வு தெய்வீக அம்சமானது. கடல்துறை அரசியல் துறை, விவசாயத்துறை, விளையாட்டுத்துறை, நகைவேலை, குருத்துறை, நிர்வாகத்துறை சம்பந்தப்பட்டவர்கள் தொழில் ஸ்தானத்தில் பல நன்மைகள் அடைவார்கள். அழகிற்கு முக்கியம் கொடுக்கும் நீங்கள் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப நயமாகப் பேசிக்கருமமாற்றுவீர்கள். சளி, வாய்வுத்தொல்லை, பயம், நரம்புச்சோர்வு, படபடப்பு என்பன கொடுக்கும். இடமாற்றம் பொருள் இழப்பு என்பவற்றால் மனப்பயமும் கவலையும் கொடுக்கும். தெய்வவழிபாடு முக்கியமாகும். சித்திரை, ஆடி, கார்த்திகை மார்கழி மாதங்களில் பல மாற்றங்கள் ஏற்படும்.

### மீனம்

கலகம் பிறந்தால்தானே நியாயம் பிறக்கும். எதிலும் உங்களுக்கு அவசரம்தான். எதிலும் எதிர்நீச்சல் அடித்தபடி இருப்பீர்கள். சின்ன மீனைப் போட்டால்தான் பெரிய சுறா வரும் எனச்சிந்திப்பீர்கள். உங்கள் சாந்தமான பேச்சால் பல அனுகூலங்கள் ஏற்படும். வாழ்வா? சாவா? எனச் சிந்திக்கும் இயல்புள்ளவர்கள். பொதுத்தொண்டு, வியாபாரம், அரசியல், மருந்து, இரும்பு, குருத்துறை போன்றதுறைகளில் அதிக இலாபங்கள் கிடைக்கும். பணம், மன எழுச்சிக்கு மத்தியில் நின்று விக்கிரம வருஷத்தில் போராடுவீர்கள். நரம்புச் சோர்வு, சளி, வாதவாய்வு விறைப்பு உஷ்ண பீடைகள்கொடுக்கும் சனீஸ்வரன், வியாழ மாற்றங்கள் உங்களுக்கும் சகோதரங்கள், பிள்ளைகளுக்கும் பல மாற்றங்களைக் குடும்பத்தில் செய்யும். சாந்திப்பிரீதிகளைச் செய்து குலதெய்வங்களை வழிபடுங்கள். வைகாசி, ஆவணி, மார்கழி, தை போன்ற மாதங்களில் மாற்றங்கள் நடக்கும்.

### பொதுப்பலன்

**இலங்கையின் இனப்பிரச்சினையில் உச்சக்கட்ட நடவடிக்கைகளை உருவாக்கும் சம்பவங்கள் நடக்கும். உலக நாடுகள் ஐ.நா மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முற்படும். ஐ.நா, அமெரிக்கா, நோர்வே, பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, இந்தியா போன்ற நாடுகளின் ஆலோசனைகளை முன்னெடுக்க வேண்டிய சூழ்நிலை அரசுக்கும், போராளிகளுக்கும் ஏற்படும். சமயவாதிகள், அரசியல்வாதிகள் மக்களின் கருத்துக்களுக்கு முகம் கொடுக்க நேரிடும். மாணவர்கள், தொழிலாளர்கள் பல உரிமைப்போராட்டங்களை முன்னெடுப்பார்கள். இந்தியா வல்லரசாகும். சோனியாகாந்திக்குச் சோதனையான காலமாகும். பொருளாதார, அணு, விஞ்ஞானத் தொழில்நுட்பச்சிறப்புக்களை மேற்கு நாடுகளின் அனுசரணையுடன் செயற்படுத்தும்.**

**2.5.2000 - 3.9.2000 இடையில் இலங்கையில் எதிர்பாராத அரசியல் திருப்புமுனை ஒன்று ஏற்படும். உலக நாடுகளில் அடிக்கடி பதற்றம் ஏற்படும். உலகிலுள்ள பெண் ,அரசியல்வாதிகள் கொதித்தெழுவார்கள். சிலருக்கு ஆபத்துக்களும் ஏற்படும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.**

## புதிய ஆண்டே புலர்ந்திடுக!

ஈழப் போரை நிறுத்திவிட்டு
ஈனக் கொலைகள் களைந்து விட்டு
தாழப் போகும் மனிதமதை
தரணியில் சிறக்கச் செய்திடவே.
புதிய ஆண்டே புலர்ந்திடுக!

குண்டு மழை போதுமென்று
குருதி யாறும் போதுமென்று
கண்டு கொள்ளா இலங்கையர்க்கு
காட்ட ஒரு காலமாக
புதிய ஆண்டே புலர்ந்திடுக!

அகதி வாழ்வை இங்ககற்றி
அமைதியான வாழ்வமைத்து
தொகுதியாக சேர்ந்து நாமும்
தெளிவுடனே வாழ்வதற்கு
புதிய ஆண்டே புலர்ந்திடுக!

சமரச முயற்சி வெற்றிபெற்று
சாந்தி எங்கும் நிறைந்திடவே
சமநலம் கொண்ட இலங்கையினை
சாதித் திங்கு அமைத்திடவே
புதிய ஆண்டே புலர்ந்திடுக!

புத்தர் வழி செல்லுகின்ற
புண்ணிய(?) புதுமை இனத்தவர்க்கு
இத்தரையில் இதய மொன்றை
இயல்புடனே துடிக்க வைக்க
புதிய ஆண்டே புலர்ந்திடுக!

-புதுமை-
ஈச்சமோட்டை

# தமிழை மறந்த தமிழர்

தமிழை மறந்த தமிழர், தங்கள்
தாயைத் துறந்த தனியராம்
அமிழ்தை மறந்து நஞ்சினை அவாவில்
அள்ளித் தின்னும் பித்தராம்
கமழும் தமிழின் நறுமணம் நித்தம்
கண்டும் நுகராக் கடையராம்.
தமரும் பிறரும் இவர்களை நல்ல
தமிழர் என்று சொல்வரா?
பேரைக் கூடத் தமிழில் சூட்டும்
பேறு அற்றுப் பிதற்றுவார்.
ஆரை என்று தங்கள் இனத்தை
அதுவும் காட்டிக் கொடுக்குமாம்!
சீரைத் தேடத் தமிழைப் போற்றல்
சிறப்பு என்று அறிகிலார்
தாரை வார்த்துத் தமிழைக் கெடுப்போர்
தமிழை மறந்த தமிழரே!
அடுத்த மொழியைக் கற்க வேண்டாம்
என்பது இங்கு பொருளல,
எடுத்த பிறவிப் பயனாய் வந்து
இணைந்த எங்கள் தமிழினை,
விடுத்து வேற்று மொழியைக் கற்க
விளக்கம் சொல்வ தென்னவோ!
உடுத்து இரவல் சேலை மினுக்கி
உலாவல் போன்று இருக்குதே!
உரிய உரிய(த்) துகிலாய்(ப்) பெருகும்
உரிமைத் தமிழை உடுத்திடார்
அரிய குறளும் ஆன்ம நெறியும்
அணியும் கூறை அணிந்திடார்
உரிய சிந்தும் மணியும் குழையும்
ஒலியும் கலையும் சூட்டிடார்
பெரிய தமிழின் மானம் போக்கப்
பிறந்த பேடிப் பதர்களே!

*-தீவகன்-*

சிந்து - சிந்தாமணி மணி - மணிமேகலை
குழை - குண்டலகேசி ஒலி - சிலப்பதிகாரம்
கலை - மணிமேகலை.

# என்னவள்.....!

நெஞ்சில் நினைத்தவள் பஞ்சை அணைத்தவள்
வஞ்சியர் கூட்டத்திலே - அவள்
கஞ்ச மலரடி கொஞ்ச நடந்திடும்
மஞ்சையி னோட்டத்திலே - எந்தன்
கெஞ்சும் விழிகளை கொஞ்சம் அழைத்திடும்
துஞ்சிடும் சாட்டினிலே - தினம்
தஞ்சம் அடைந்திடும் செஞ்சொற் கிளியினை
மிஞ்சுவேன் பாட்டினிலே!

கண்ணைச் சிமிட்டியே என்னை இழுத்திடும்
பெண்மயில் சாயலெல்லாம் - அந்த
விண்ணவர் நாட்டிலே புன்னகை பூத்திடும்
கன்னியின் மாயமம்மா - இந்த
மண்ணில் பிறந்தவள் தன்னை நினைத்திட
எண்ணமும் வேகுதம்மா - எந்தன்
பண்ணில் ஒலித்திடும் கன்னியின் காதலோர்
தன்னலம் ஆகுதம்மா!

நின்று நிமிர்ந்தெனை கொன்று மகிழ்ந்திடும்
நெற்றித் திலகமும் - மனம்
ஒன்றிக் களித்திட ஒன்று உரைத்திடும்
வெற்றியின் சங்கமமே - எழில்
குன்றினைப் போலொரு தென்றலில் மோதிடும்
அன்றிலென் கைக்கு வரும் - நல்ல
கன்றினைப் போலவே சென்று சுவைத்திட
மன்றம் அழைத்து வரும்!

சின்னஞ் சிறுவிழி பொன்னின் மணியொளி
என்னுயிர் வாட்டிவிடும் - இரு
கன்னம் கனியென மின்னும் அழகினில்
சின்னமும் தீட்டிவிடும் - நான்
முன்னம் எழுதிய வண்ணக் கவிகளின்
மன்னவன் தேவியம்மா - அவள்
இன்னும் அருந்திட கன்னித் தமிழ்தரும்
என்னுயிர் வாணியம்மா!

*- தர்ப்பணா சிறிமகாதேவன்*

## போர்ச் சூழலில்......

(IIஆம் பக்கத் தொடர்ச்சி)

மனித நேய அமைப்புக்கள் மிகக்குறுகிய இடைவெளியில் விடுத்த அழைப்பை ஏற்று சுமார் 1,500 மக்கள் வியாழக்கிழமை காலையில், யாழ்ப்பாணம் செயலகத்தின் முன்னர் திரண்டனர்.

போர்ப் பிரதேசத்தில் சிக்குண்டுள்ள பச்சிலைப்பள்ளி மக்களை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும்.அது குறித்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரி சுமார் 4 மணி நேரம் மக்கள் செயலக வாசலில் மறியப்போர் செய்தனர்.

மக்களின் மறியற் போர் பெரு வெற்றி அளித்தது - அரசாங்க அதிபர் உட்பட எந்தப் பணியாளரும் செயலகத்துக்கு உள்ளே குறிப்பிட்ட நேர வேளையில் செல்ல முடியவில்லை. படை அதிகாரிகள் வந்து செயலக உத்தியோகத்தர்களை உள்ளே செல்ல அனுமதிக்குமாறு கோரியும் மக்கள் எடுபடவில்லை.

அரசாங்கத்தின் நடத்தைக்கு எதிராக மக்கள் குரல் ஒலிக்கத் தொடங்கிவிட்டது. மக்களின் அழுத்தத்துக்கு அரசு செவிசாய்க் காலம் என்ற நம்பிக்கை இப்பத் தியை எழுதிக் கொண்டிருந்த வேளை பல வட்டாரங்களிலும் பரவியிருந்தது.

இதனை எழுதி முடித்துக் கொண்டிருந்த வேளை, கிளாலியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மக்கள் அனைவரையும் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லப்படையினர் அனுமதித்து விட்டனர் என்ற மகிழ்ச்சியான தகவல் கிடைத்தது. அடைபட்டிருந்த மக்கள் மிருசுவில் நோக்கி நடையாக வந்து கொண்டிருந்ததாகத் தகவல்கள் தெரிவித்தன.

பச்சிலைப்பள்ளியில் சிக்குண்ட மக்களின் விவகாரத்தில் அரசு நடந்து கொள்ளும் முறை சற்றும் மனிதாபிமானமற்ற அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும் தன்மை, குடாநாட்டு மக்களை மிகப் பெரிய அளவில் மனம் நோகச் செய்துள்ளது. அதன் வெளிப்பாடே வியாழக் கிழமை நடைபெற்ற மறியல் போர். நீதியான, நியாயமான கோரிக்கைகளை முன் வைத்து, குரல் எழுப்பும் துணிவு மக்களிடம் வந்தமையும், அதற்கு வெற்றி கிடைத்தமையையும் மிக மிக நல்ல சகுனமே!

மக்கள் குரலுக்கு அரசு பணிந்தமை வரவேற்கத்தக்கதாகும். எனினும் மனித நேயம் கருதி, அவர்களை தடுத்து வைக்காமல் ஞாயிறன்றே அனுமதித்திருக்க வேண்டும் என்ற நிலை மாற்றத்துக்கு உரியதல்ல.

பளைப் பிரதேச செயலாளர் பிரிவில் தர்மக்கேணி, சோரன்பற்று, மாசார், புலோப்பளை, வண்ணாங்கேணி, பெரியபளை போன்ற பகுதிகளிலும் அவற்றை அண்டிய இடங்களிலும் 900 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 4,000 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வரமுடியாமல் அச்சத்துடன் வாழ்கிறார்கள்.

எந்த நேரமும் வெளியேற்றுவதற்குத் தயாரான நிலையில் பெட்டி படுக்கைகளுடன் அவர்கள் காத்திருக்கிறார்கள் என்று அறியப்படுகிறது. அப்பகுதியிலிருந்து கிளாலிக்கு வந்தவர் மூலம் இத்தகவல் கிடைத்தது.

பளையில் எதுவும் இயங்கவில்லை. கடைகள் திறக்கப்படவில்லை. எந்தப் பொருளையும் வாங்க முடியாத நிலை. இந்தநிலை இன்னும் சில நாள்களுக்குத் தொடருமானால் அந்தப் பகுதிகளில் பட்டினிச் சாவு கூட ஏற்படலாம் என்றார் அவர்.

ஆகையால் மேற்குறிப்பிட்ட 4,000 மக்களையும் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கும் அரசு உடனடியாக அனுமதிக்க வேண்டும். இதன் பொருட்டும் மக்கள் எழுச்சி கொள்ளும் வரை காத்துக் கொண்டிருக்கலாகாது.

# காதல்

வசந்த காலத்தில்
மட்டுமே பூப்பதில்லை
கொல்லும் கோடையிலும்
பூத்து விடுகிறது.
மலைச் சாரலில்
மட்டுமே தழைப்பதில்லை
பாலைவனத்திலும்
தளிர்விடுகிறது!
உதட்டில் மட்டுமே
உச்சரிக்கப்படுவதில்லை
உள்ளத்திலும் பதியப்படுகிறது.

- ஏ.மகாலிங்கம் -

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.149

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| 9 | | 10 | | ■ | 11 | | |
| 12 | | | ■ | 13 | | | |
| | ■ | 14 | 15 | | | ■ | |
| ■ | 16 | | | | ■ | 17 | |
| 18 | | ■ | | ■ | 19 | | ■ |
| 20 | | | | | | | |

**சொற்சிலம்பம் இல. 149**

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ..................................................................................

விலாசம்: ..................................................................................

..................................................................................

..............................இங்கே வெட்டுக..............................

முடிவுத் திகதி:- 14 - 04 - 2000

### இடமிருந்து வலம்

1. பெரியோர் வழங்கும் வாழ்த்து. 6. திறப்பு. 7. ஒரு கிரகம். 8.தோண்டு. 9. சாதகம் அல்ல. 11. தரு. 12. அரிசி வகை. 13. பிதற்று. 14. 'ல' எழுத்து வடிவம். 16. பெண் தெய்வம். 17. படி. 18. பெருக்கல் குறி. 19.உருவமற்ற. 20. பார்த்தும் பார்க்காதது.

### மேலிருந்து கீழ்

1. விரும்பமாகிய கட்டு. 2. உயிர்த் தன்மை. 3. மணம். 4. பலவல்ல; ஒன்று. 5. ஆசைப்படுதல். 8. இடைப்பட்ட அளவு. 10. மண்டையோடு. 11. கழிவுப் பொருள். 13. சிவன். 15. தாமரை. 16. காவல் மதில். 17.எண்ண. 18. இணங்க. 19. பன்னிரண்டு தம்படி கொண்ட இந்திய நாணயம்.

## சொற்சிலம்பம் 147 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1. உசுப்புதல். 6. பனை. 7. திட. 8. முள். 9. வானம்பாடி. 11.தியானம். 13. வயசு. 15. ரசம். 16. பல. 17. வனை. 18. உடன்பாடு. 20. மிளகு. 21.மித. 22. மகவு. 23. உரல்.

### மேலிருந்து கீழ்

1. உபத்திரவம். 2. சுனை. 3. புதினம். 4. தடம். 5. கள். 8. முடிய 9.வானம். 10. பாவலன். 12. யாசனை 14. சுட்டுதல். 16. படகு. 18.உளவு 19. பாமர. 20. மிக.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

**முதலாம் பரிசு:-** த.கந்தசாமி,
ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

**இரண்டாம் பரிசு:-** த.பாலசுப்பிரமணியம்,
வ.பி.போ.ச. தலைமை அலுவலகம்,
கோண்டாவில்.

**மூன்றாம் பரிசு:-** க.நவரூபகாந்த்,
ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 148 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில்.

# தகவல் துளிகள்!

★ சாய்ந்த கோபுரம் எங்கே உள்ளது?
*பிரான்ஸ்*

★ முதலாம் உலகப் போர் நிகழ்ந்த ஆண்டு எது? அதன் பின் உருவான சமாதான அமைப்பு எது?
*1914-1918 , சர்வதேச சங்கம் (1920)*

★ இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்த ஆண்டு எது? அதன் பின் உருவான சமாதான அமைப்பு எது?
*1939-1944, ஐக்கிய நாடுகள் சபை (1945)*

★ அம்மைநோய்த் தடுப்புமருந்தைக் கண்டறிந்தவர் யார்?
*எட்வேட் ஜெனர்*

★ மக்களால் தெரிவு செய்யப்பட்ட இலங்கையின் முதல் ஜனாதிபதி யார்?
*J.R. ஜெயவர்த்தனா*

★ விண்வெளி ஆய்வுக்காக முதன் முதலில் செலுத்தப்பட்ட விண்கலம் எது?
*ஸ்புட்னிக்*


*செ.சுகன்யா*
*யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.*

# அறிந்து கொள்ளுங்கள்

## உலகசாதனை புரிந்த வீரர் வோல்ஷ்


*விஞ்ஞான, மருத்துவச்செய்திகளை மட்டுமே இப்பகுதியில் தொடர்ந்து தருகிறீர்களே என்று பலரும் ஆதங்கப்பட்டதால் இவ்வாரம் கிரிக்கெட் செய்தி ஒன்று–*

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் வேகப் பந்துவீச்சாளரான 37 வயது வீரர் கொட்னி வோல்ஷ் அண்மையில் ஸிம்பாப்வே அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஸிம்பாப்வே அணிவீரர் ஹென்றி ஒலங்காவை ஆட்டமிழக்கச் செய்தபோது டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 435விக்கெட்டுக்களைக் கைப்பற்றி புதிய உலக சாதனையைப் படைத்தார்.


உலக சாதனைபுரிந்த மகிழ்ச்சியில் வோல்ஷ்

இதுவரை, இந்திய அணியில் விளையாடிய வேகப் பந்து வீச்சாளர் கபில்தேவ் 434 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதே உலக சாதனையாக இருந்து வந்தது.

1962ஆம் ஆண்டில் ஜமெய்க்காவில் பிறந்த கொட்னி வோல்ஷ் 1984 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில்தான் தனது நாட்டு அணிக்காக விளையாட ஆரம்பித்தார். இதுவரை 114 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியிருக்கும் இவர் துடுப்பாட்டத்தில் சிறந்து விளங்குபவரல்லர். தனது முழுக் கவனத்தையும் பந்து வீச்சிலேயே செலுத்திவரும் இவர் விரைவில் கிரிக்கெட் ஆட்டங்களிலிருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்திருப்பது அவரது நாட்டு அணிக்கும் கிரிக்கெட் ரசிகர்களுக்கும் பேரிழப்பாகும்.



உங்களில் பலருக்கும் சிறந்த வேகப் பந்து வீச்சாளராக வேண்டுமென்ற எண்ணம் இருக்கலாம். வீரர் கொட்னிவோல்ஷின் சாதனை அவரது மனஉறுதியாலும் தன்னம்பிக்கையாலுமே ஏற்படுத்தப்பட்டது. எனவே நீங்களும் நம்பிக்கையுடன் முயன்றால் சிறந்த வேகப் பந்துவீச்சாளராக மட்டுமல்ல சிறந்த சகலதுறைக் கிரிக்கெட் ஆட்டக்காரராகவும் உருவாகலாம் என்பது நிச்சயம்.

சாதனை வீரர் கொட்னிவோல்ஷை அவரது சாதனைக்காக நாமும் மனமாரப் பாராட்டுவோம்!

*- விசிறி -*




# மொழிபெயர்க்கும் கணனிகள்

**அங்கம் 2**

கணனியின் பிழையான மொழி பெயர்ப்புக்குக் காரணம் அது சுயமாகச் சிந்திக்காமல், வழங்கிய தரவுகளுக் கேற்பச் செயற்படுவதேயாகும். 1954 ஆம் ஆண்டில் 'ஐ.பி.எம்' (I.B.M) என்ற நிறுனம் முதன் முதலாக மொழி பெயர்ப்புத் திட்டம் ஒன்றைத் தயாரித்தது.



பு. சஞ்சீவ்
தரம் 7 'D'
யாழ். இந்துக் கல்லூரி.

மொழிபெயர்க்கப்படும் மொழியின் விரிவான அகராதிகளைக் கணனிகள் தமது நினைவில் (Memories) வைத்துள்ளன. அநேகமான நவீன கணனிகள் 100,000 வரையிலான வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்களைக் கொண்டுள்ளன. வேறு மொழியிலுள்ள மிகப் பொருத்தமான சொல்லைக் கண்டுபிடிக்கக் கணனிகள் அந்த அகராதிகளைப் பயன்படுத்துகின்றன. ஆயினும் ஒரு மொழி பெயர்ப்பாளரால் கணனி மொழிபெயர்த்த விடயத்தை மீண்டும் ஒருமுறை சரிபார்க்க வேண்டியுள்ளது. எனினும் இத்துறையில் 1988ஆம் ஆண்டளவில் 96% சரியான செயற்பாட்டு முறைகள் விருத்தி செய்யப்பட்டன. இதனால் கணனிகளால் விரைவாக மொழிபெயர்க்கக் கூடியதாகவுள்ளது.

ஐரோப்பிய மொழி ஒன்றிலிருந்து இன்னொன்றிற்கு ஆயிரம் வார்த்தைகளை மொழிபெயர்க்க ஒரு மனிதனுக்கு அரை நாள்வரை தேவைப்படுகின்றது. இதே அடிப்படை அம்சங்களைக் கொண்ட மொழிபெயர்ப்பை 20 நிமிடங்களில் கணனியொன்றினால் வெளியிட முடியும்.

உலகில் இயந்திர மூலமான மிகவும் சிறந்த மொழிபெயர்ப்பு முறை 'யூரோற்றா' (Eurotra) ஆகும். ஆங்கில - பிரான்சிய - சுவீடிய - ஜேர்மனிய - மற்றும் ஸ்பானிய மொழிகளாகிய ஐந்து மொழிகளில் தொலைபேசி மூலம் தன்னியக்க மொழிபெயர்ப்பைப் பெறுவதற்கான முறை ஒன்றைப் பிரித்தானிய தொலைபேசித் தொடர்பு நிறுவனம் தயாரித்து வருகின்றது. தொலைபேசி மூலம் வேற்று மொழியில் வேண்டுகோள் விடுப்பவர் கூறும் விடயத்தையும் கணனியால் மொழிபெயர்ப்புச் செய்யமுடியும். தற்போது இம்முறையானது ஒப்பீட்டளவில் வேகம் குறைந்ததாகவே உள்ளது.

எதிர்காலத்தில் மேலும் நவீனப்படுத்தப்பட்ட கணனி மொழி பெயர்ப்பின் பயன்களை நாம் பெறக்கூடியதாக இருக்கும் என்பது நிச்சயம்!

*(முற்றும்)*

# சிரிப்பின் பலரகம்

| | |
|---|---|
| ✦ கண் பார்த்துச் சிரிப்பவன் | ~ காரியவாதி |
| ✦ காணாமல் சிரிப்பவன் | ~ கஞ்சன் |
| ✦ கற்பனையில் சிரிப்பவன் | ~ கவிஞன் |
| ✦ கோபத்தில் சிரிப்பவன் | ~ வெறியன் |
| ✦ மோகத்தில் சிரிப்பவன் | ~ சிந்தனையாளன் |
| ✦ தெரியுமென்று சிரிப்பவன் | ~ பசப்பாளன் |
| ✦ தெரியாதென்று சிரிப்பவன் | ~ நடிகன் |
| ✦ இடம் பார்த்துச் சிரிப்பவன் | ~ எத்தன் |
| ✦ எப்பொழுதும் சிரிப்பவன் | ~ கோமாளி |
| ✦ தெரியாமல் சிரிப்பவன் | ~ பைத்தியக்காரன் |
| ✦ ஓடவிட்டுச் சிரிப்பவன் | ~ வஞ்சகன் |
| ✦ நீதியோடு சிரிப்பவன் | ~ அறிஞன் |
| ✦ நிலைமறந்து சிரிப்பவன் | ~ காதலன் |
| ✦ செயல் கேட்டுச் சிரிப்பவன் | ~ பச்சோந்தி |
| ✦ செருக்குடன் சிரிப்பவன் | ~ அரசன் |
| ✦ துன்பத்தில் சிரிப்பவன் | ~ மனிதன் |

*ந. இராமநந்தினி*
*தரம் 10A, சு/சி.பா.வி*

# ஆசிரியர் என்பவர்....

நல்ல ஆசிரியர்கள் மாணவர்களை இட்டுச்செல்ல வேண்டும்; இழுத்துச்செல்லக் கூடாது. ஊக்கப்படுத்த வேண்டும்; உந்தித் தள்ளுதல் கூடாது. வழியைக் காட்டவேண்டும்; வழித்துணையாகச் செல்லுதல் கூடாது.

# வாழ்ந்திடுவாய் உத்தமனாக

உண்மை பேசி வாழ்ந்திடுவாய் ~ தம்பி
உலகம் போற்ற வாழ்ந்திடுவாய்
அன்பைச் சொரிந்து வாழ்ந்திடுவாய் ~ தம்பி
அகிலம் போற்ற வாழ்ந்திடுவாய்

கல்வி கற்று வாழ்ந்திடுவாய் ~ தம்பி
கண்ணியமாய் வாழ்ந்திடுவாய்
செல்வம் பெற்று வாழ்ந்திடுவாய் ~ தம்பி
செழிப்பாகவே நீ வளர்ந்திடுவாய்

பாதகச் செயல்கள் தவிர்த்திடுவாய் ~ தம்பி
பார் புகழவே வாழ்ந்திடுவாய்
ஊரும் பாரும் போற்றிடவே ~ தம்பி
உத்தமனாக நீ வாழ்ந்திடுவாய்

ஞான. ஆதவன்
தரம் – 9
சென்.ஜோன்ஸ் கல்லூரி.

# தீர்ப்பு

(கடந்தவாரத் தொடர்ச்சி)

சிறிது நேரம் யோசித்த மந்திரி மதிவர்மன், குமாரவர்மனையும் நாகதேவனையும் அழைத்தார். இருவரிடமும் தனித்தனியே 'நீங்கள் வெற்றி பெற்றால் அதை உங்கள் நாட்டுக்கு அறியச்செய்வதற்காக என்ன செய்தியை அனுப்புவீர்கள் என்பதை ஓர் ஓலைச்சுவடியில் எழுதித்தாருங்கள். இந்த ஓலைச் சுவடியின் அடிப்படையிலேயே உங்களில் வெற்றி பெற்றவர் யார் என்பதைத் தீர்மானிக்கப் போகிறேன்' என்றார் மந்திரி. இருவரும் ஓலைச்



சுவடிகளில் எழுதிக் கொடுத்தனர்.

மறுநாள் அரசவை கூடியது. வீரர்களுடன் மக்களும் மன்னரின் தீர்ப்பை எதிர்பார்த்திருந்தனர். அரசரின் சார்பில் மந்திரி மதிவர்மன் எழுந்து மக்களை நோக்கி, 'விளையாட்டுப்போட்டி என்பது ஒருவருடைய உடல் பலத்தையும், தீரத்தையும், புத்திசாதுரியத்தையும் காட்டுவதுதான் என்றாலும் பல நாடுகள் கலந்து கொள்ளும் விளையாட்டுப் போட்டிகளில் வீரன் ஒருவன் தனக்காக மட்டுமல்லாது தன் நாட்டின் பெருமைக்காகவும் விளையாடுகிறான். இவ்வாறு நாட்டுப்பற்றுடன் விளையாடும் வீரனே சிறந்த வீரன். இந்த முறையிலேதான் நான் இந்த மல்யுத்தப்போட்டக்கான பரிசுக்குரியவரைத் தேர்ந்தெடுத்திருக்கின்றேன்' என்று கூறிவிட்டு குமாரவர்மன், நாகதேவன் இருவரிடமும் பெற்ற இரண்டு ஓலைச் சுவடிகளையும் உரத்து வாசித்துக் காட்டினார்.



முதலில் நாகதேவனின் ஓலைச் சுவடி வாசிக்கப்பட்டது. அதில் 'நான் வெற்றி பெற்றுவிட்டேன்' என்று எழுதப்பட்டிருந்தது. அடுத்து குமாரவர்மனின் ஓலையில் 'சித்திராபுரி வெற்றியடைந்துவிட்டது' என்று எழுதப்பட்டிருந்தது.

'இரு போட்டியாளர்களுமே சமமான பலம், திறமை உடையவர்களாக இருந்தபோதும், தனக்கான என்று எண்ணாமல் தன் நாட்டுக்காகப் போட்டியிட்டுத் திறமை காட்டிய குமாரவர்மனையே முதல் பரிசு பெறுபவராக அறிவிக்கிறேன்' என்று மன்னன் சார்பில் தனது தீர்ப்பை மந்திரி அறிவித்தார்.

நாகதேவன், குமாரவர்மன் உள்பட அரசரோடு சேர்ந்து அரசவையே மந்திரியின் தீர்ப்பை ஏற்று மகிழ்ந்தது.

*- ஈஸ்வரன் -*